# பாரத் ஒய்வுநாள் பாடசாலை

## INTERMEDIATE : FIRST YEAR




இடைநிலை முதலாம் ஆண்டு வயது (13 - 15)

வகுப்பு : 10 புத்தகம் 10

படங்களுடன்

Bharat Sunday School Publications Since 2012
**INTERMEDIATE FIRST YEAR IN TAMIL**
(Hindi And English Also) With Pictures
Class 10, Book 10, Age Group 13, 14, 15
First published in 2005 (in Malayalam) by Assemblies of God Malabar District
Author : R. Stanly, TVM-4. Ph : 9951220461
*Translated to Hindi by* Pastor Vincent Bhaskaran, New Delhi-51. Ph : 8860148440

*Translated to Tamil by* Rev. Selvamani Samuel
A G Church, Pavunjur - 603312, T N.
Phone 9787447071.

ISBN :

COPY RIGHT RESERVED

*Published in Hindi and English*
(with downloadable workbooks from website) by
Evg. L Justus M. A., B.Ed., B.R.E.,
Shelter Palappuram P O.,
Ottapalam, Kerala - 679103.
M Phone 9446229271
L Phone 04662246537
Email: justus.lazar@gmail.com
Website: www.bharatsundayschool.org

*Tamil Edition Published With Permission by*
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600010 Tamil Nadu, S India
Phone: 044-26613242
E-Mail ID: info@wordofchrist.org
Website: www.wordofchrist.org

No of Copies :2,000 Date of Publication : March 2025



# இடைநிலை பருவ மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு..

அன்பான மாணவர்களே,

நீங்கள் வேதாகமத்தை உங்கள் பெற்றோர் மூலமாகவோ அல்லது கடந்த வேதபாட வகுப்புகளிலோ கற்று இருப்பீர்கள். இருப்பினும் இந்த புத்தகத்தில் உள்ள வேதபாடங்கள் உங்கள் வயதிற்கு ஏற்ப (13-15) உங்களை முதிர்ச்சி அடையச் செய்யும். ஒவ்வொரு பாடங்களையும் எளிதாக புரிந்துகொள்ளும் வகையிலும் அனைத்திற்கும் படங்கள் வைக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகம் கிறிஸ்துவுக்குள் நீங்கள் வளர நிச்சயம் உதவும். இதை உங்கள் உயர்கல்வி பாடப்புத்தகத்தை போல் வாசியுங்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பாடங்களிலும் இடம் பெறும் கேள்விகளுக்கு பதில் எழுதி உங்கள் ஆசிரியரிடம் காண்பியுங்கள். இந்தப் புத்தகத்தில் வேதம் உருவான விதம், மொழிபெயர்ப்புகள், இயேசுவின் பிறப்பு, குழந்தைப்பருவம், ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்ற பாடங்கள் அடங்கியுள்ளது. அன்பான தேவன் நீங்கள் யோசேப்பை போல் பரிசுத்தத்திலும், மோசே போல் பெரிய தலைவனாகவும், தானியேல் போல் தேவனுக்கு பிரியமான வனாகவும், அப்போஸ்தலன் பவுல் போல பெரிய மிஷனரியாக வளரச் செய்வாராக.

அன்பான ஆசிரியர்களே:

வயது (13-15) க்கு உட்பட்ட சிறுவர்கள் அறிவிலும் ஞானத்திலும் கடந்த பருவத்தினரை விட வளர்ந்திருப்பார்கள். அவர்கள் தகவல் தொழில் நுட்பத்திலும் நம்மில் பலரை விட முந்திச்செல்கிறார்கள். அவர்கள் உடல் ரீதியாகவும் வேகமாக

வளர்கிறார்கள். அவர்களை தேவனுக்குள் சரியாக வழிநடத்த நமக்கு தெய்வீக ஞானமும் பொது அறிவும் தேவை.

நமது சபையில் சிறுவர் பள்ளி என்ற தோட்டத்தில் வளரும் செடிகள் போல சிறுவர்கள் உள்ளார்கள். அவர்கள் வாழ்க்கையில் உள்ள களைகளை அகற்றி உரம் ஏற்றி வேதத்தின் பார்வையில் எது சரி, எது தவறு என்று அவர்களுக்கு புரிய வைப்பது மற்றும் அவர்கள் மனதை பயிற்றுவிப்பது நமது கடமையாகும். இந்த தேவனுடைய பணியை செய்ய தேவன் உங்களை வழிநடத்துவாரவாக என்று வாழ்த்துகிறேன். ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் இருப்பார்கள் தானியேல் (12:3). பரிசுத்த வேதாகமமே நம்முடைய பாடப்புத்தகம்.

இந்தப் புத்தகம் ஒரு வழிகாட்டுதல் மட்டுமே. அனைத்து சபை தலைவர்களுக்கும், நலம் பாராட்டியவர்களுக்கும், பங்களிப் பாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், உறை வடிவமைப்பார்களுக்கும் பாரத் ஓய்வுநாள் பாடசாலை சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கிறிஸ்துவின் நற்செய்தியாளர்,
**L. Justus**

# PREFACE

By God's grace, I could publish fifteen Sunday school texts in five different grades and one teachers training manual as the Sunday school director of AG Malabar district from 1998-2014. Besides that God enabled me to publish GULF WAR 1991- BIBLICAL PREDICTION FULFILLED a book in different languages in Chennai.

As the LORD led me, Pastor Laurance Jason and I travelled through different places in north India like Delhi, Lucknow, Aligargh, Allahabad, Bilaspur, Ludhiyana, etc.  in 2011, and visited many churches to see how Sunday school teaching was going on and to make awareness about the importance of systematic teaching of the Word of God among children, like it is done in South India. In north India we saw children below the age of 10-12 were taught some action songs, preliminary lessons from the Bible, memory verses, etc. during worship time on Sundays, keeping all of them together as a crowd. In some churches, every Sunday the teachers prepare some lessons and teach. But there were no revision tests or talent competitions as there in school. "How can we conduct tests without text books," they replied.  After the age 10/12 the children sit in the worship services as spectators. But in the school they study at least up to 12th standard, and moreover, they are seated according to their age. So the Sunday school children did not have or were able to gain the sense of right and wrong in the biblical sense!

In this context we three, myself, Pastor Laurance Jason of U P and Pastor Vincent Bhaskaran of Delhimet at Delhi in 2011 and decided to print the above said Sunday school books in Hindi and English to end the stalemate prevailing in India since Independence.  This, we believe, is a final and end-time attempt to stop the decaying and directionless trend in Christian education among the children especially in North India.  We are grateful to God for enabling us to launch these graded Sunday School texts with pictures, named as BHARAT SUNDAY SCHOOL. "Tomorrow this darkness will end. A new era of awakening will usher in. The crucified Christ will win" Savonarola.

EVANGELIST JUSTUS LAZAR

# இடைநிலை முதலாம் ஆண்டு

## பொருளடக்கம்


**காலாண்டு I : பரிசுத்த வேதாகமத்தின் பிறப்பும் இயேசுவின் பிறப்பும்**

1. பரிசுத்த வேதாகமம் ஒரு விலையேறப்பெற்ற பொக்கிஷம் ..9
2. பரிசுத்த வேதாகமத்தின் உருவாக்கம் ....................................12
3. பழமையான கையெழுத்து பிரதிகள் மற்றும் மொழிபெயர்ப்புகள்.......................................................................15
4. ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் பரிசுத்த வேதாகமம் ............20
5. வேதாகம பிரிவுகள் ........................................................................25
6. தெய்வீக அமைதி ஆண்டுகள் ..................................................29
7. இயேசுவின் பிறப்பு முன் அறிவிக்கப்படுதல் ..........................33
8. இதோ எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம் ..........................36
9. இயேசுவின் வாழ்விடத்தின் முக்கியத்துவங்கள்.....................39
10. நாசரேத்தில் இயேசு.....................................................................42

**காலாண்டு II : இயேசுவின் இளமை வாழ்க்கையும் போதனைகளும்**

11. எருசலேம் தேவாலயத்தில் இயேசு..........................................46
12. இயேசு சோதிக்கப்பட்டார் ...........................................................50
13. இயேசு ஒரு மனிதன் ...................................................................54
14. இயேசு பாவமில்லாத பரிசுத்தர் ................................................57
15. இயேசு அப்போஸ்தலர்களை நியமித்தார்...............................60
16. பாக்கியவசனங்கள் .......................................................................63
17. உவமைகள் ......................................................................................67
18. என்னுடைய வீடு ஜெப வீடு .......................................................70
19. என்னை நினைவு கூறுங்கள் .......................................................74
20. யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்தல்..................................78

**காலாண்டு III : சிலுவையில் அறையப்படுதல்**

21. பேதுரு இயேசுவை மறுதலித்தல்..............................................83
22. இயேசு பிலாத்திற்கு முன்பாக விசாரிக்கப்படுதல் .................87
23. இயேசு சிலுவையில் அறையப்படுதல் .....................................91

24. எல்லாம் முடிந்தது....................................................................94
25. அரிமத்தியனாகிய யோசேப்பின் புதிய கல்லறை................98
26. அவர் இங்கே இல்லை.............................................................101
27. இயேசு சீஷர்களை உணர்த்துதல்.........................................104
28. கடைசி கட்டளை மற்றும் பரமேறுதல்..................................107
29. பேதுருவுக்கு மீண்டுமொரு வாய்ப்பு.........................................110
30. இயேசு இப்பொழுது எங்கே,....................................................114
காலாண்டு IV : இயேசுவின் ஊழியம்
31. சிலுவையின் ஏழு செய்திகள் -1............................................118
32. சிலுவையின் செய்திகள் - 2..................................................121
33. இயேசு உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள்................................124
34. இயேசு சுகம் தருபவர்...........................................................128
35. இயேசு பாவத்திலிருந்து விடுவிப்பவர்....................................131
36. இயேசு இரட்சகர்....................................................................134
37. விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு.........................................137
38. உங்கள் இரட்சிப்பை உறுதி செய்யுங்கள்................................140
39. இயேசுவைப்போல இரு...........................................................142
40. வெற்றியுள்ள கிறிஸ்துவ வாழ்க்கை.......................................144

## ஒரு ஆசிரியரின் ஜெபம்...

ஒவ்வொரு முறையும் நான் வகுப்பிற்குள் செல்லும்முன் இவ்விதமாக ஜெபிப்பேன். "என் தகப்பனே ஒவ்வொரு சிறுவரையும் புரிந்துகொள்ள எனக்கு உதவிசெய்யும். அவர்கள் ஒவ்வொருவரையும் விலையேறப்பெற்ற ஆத்மாவாக அன்பாக பார்க்க உதவி செய்யும். அவர்களை பயத்தின் பாதையில் அல்ல அற்புதத்தின் பாதையில் கொண்டு செல்லவும் என்னை நல்ல ஆசிரியராக அவர்கள் பார்க்கவும் எனக்கு போதியும் என தாழ்மையுடன் கேட்கிறேன் ஆமென்."

*நீலே பீஸ் கார்பெட்*

# பரலோக பாதுகாப்பு

ஒரு தீவு பழங்குடி மக்கள் தங்கள் சிறுவர்களுக்கு ஒரு மரபை வைத்துள்ளனர். அவர்கள் 12 வயதைத் தாண்டி, வாலிப பருவத்திற்கு உள்ளாக வரும்போது அவர்கள் தங்கள் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கு உதவுகிற சடங்கு ஒன்று நடத்தப்படுகிறது. சடங்கில் இந்த 12 வயது சிறுவனை அவர்கள் அடர்ந்த காட்டில் தனியாக விட்டுவிடுவர். அவனுடன் யாரும் இருக்க மாட்டார்கள். அந்த இரவு மிகவும் கொடூரமான ஒன்றாக இருக்கும். காரணம் என்னவென்றால், அந்த இரவிலே இலையின் அசைவும், பறவையின் ஒலியும், பல்லியின் அசைவும்கூட பெரிய பயத்தை அவனுக்குள்ளாக உண்டுபண்ணும். இந்த காரணத்தால் இந்த சடங்கில் பங்குகொள்ள ராஜுக்கு முழுவதுமாக விருப்பமே இல்லை. ஆனாலும் இவ்விதமான இருண்ட காட்டிற்குள் வந்தபின் எக்காரணத்தாலும் திரும்ப வீட்டிற்கு போக முடியும் என்கிற நம்பிக்கையே கிடையாது. அவனால் பயத்தினால் தூங்க முடியவில்லை. மனதில் சோர்வும், களைப்பும் ஆக இருந்தபடியினாலே அவன் நடு இரவில் தூங்கி விட்டான். அதிகாலையிலேயே பறவைகளின் சத்தத்தினால் அவன் எழுந்துவிட்டான். எழுந்தவன் தான் பாதுகாப்பாக இருக்கிறோமா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது அவன் மிகவும் பயப்படுகிறதான ஒரு காரியம் நடந்தது. அந்த பயத்தினாலே அவன் வாய் உலர்ந்துபோயிற்று. சத்தமும் எழுப்ப முடியாமல் போயிற்று. ஒரு பெரிய உயரமான உருவம் அவனுடைய முன்பதாக வருவதைக் கண்டான். அது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் எப்படியோ தைரியத்தை வருவித்துக்கொண்டு அவன், யார் அது? என்று சத்தமிட்டுக் கேட்டான். அப்போது ஒரு இனிய மெல்லிய சத்தத்தை அவன் கேட்டான். அது அவனுடைய தந்தையின் சத்தமாக இருந்தது. அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். அந்த இரவு முழுவதும் தன்னுடைய தந்தையும் தூரமாக இருந்து அவனை கவனித்துக்கொண்டே இருந்தார். அவன் தூங்கினாலும்கூட அவர் தூ ங்காமல் அவனைப் பார்த்து பாதுகாப்பாக இருக்கிறானா என்றுசொல்லி பார்த்துக்கொண்டார். இதுபோலவே நம்முடைய பரமதந்தை இயேசுவும்கூட உறங்காமலும், தூங்காமலும் நம்மை அவர் பாதுகாத்து வருகிறார். அவ்விதமாக நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறாரே? அதனால்தான் நாம் தைரியமாக விசுவாசத்துடன் இருப்போம்.

## காலாண்டு I

## பரிசுத்த வேதாகமத்தின் பிறப்பும் இயேசுவின் பிறப்பும்

### பாடம் 1

# பரிசுத்த வேதாகமம் ஓர் விலையேறப்பெற்ற பொக்கிஷம்

***வேதபாகம் :*** சங்கீதம் 19:7-11

***மனப்பாட வசனம் :*** இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் என் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. (ரோமர் 10:8)

***நோக்கம் :*** பரிசுத்த வேதாகமம் உண்மையும் சத்தியமும் நிறைந்த புத்தகம் என்பதையும் எல்லாவிதத்திலும் பரிசுத்த வேதாகமம் உண்மை உள்ளது என்பதை மாணவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும்.



***முன்னுரை:*** மிகவும் ஏழ்மையான விவசாயி ஒருவன் தனக்கு சொந்தமான வயலில் பயிரிட முடிவு செய்தார். அந்த நிலத்தில் இருந்த முட்கள் புதர்களை அகற்றி எடுத்தார். பின்பு கஷ்டப்பட்டு தனது நிலத்தை உழுதார். ஆனால் தனது வயல் நிலத்தில் நிறைய பாறைகள் இருப்பதைக் கண்டு மிகவும் சோர்ந்து போனார். களைத்துப்போய் அமர்ந்துவிட்டார்.

ஒருநாள் அவரது நெருங்கின நண்பர் ஒருவர் அவரை சந்திக்க வந்தான். அவர் வீட்டருகே இருந்த அவருடைய நிலத்தை பார்த்து

சில கற்களை பொறுக்கி வந்து பார்த்தான். உடனே தனது விவசாயி நண்பனைப் பார்த்து இது என்னவென்று தெரிகிறதா என்று கேட்டான்.

இவைகள் அனைத்தும் சுத்தம் செய்யாமல் மெருகேற்றாமல் உள்ள வைரக்கற்கள் என்றான். உனது நிலம் அநேக பொக்கிஷங்கள் அடங்கிய பண்டகசாலை. அவன் மேலும் இப்படி சொல்லச் சொல்ல இந்த ஏழை விவசாயிக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பெருக்கெடுத்து ஓடியது. தனது எல்லா கஷ்டங்களையும் மாற்றுவதற்கான பொக்கிஷங்களை தனது நிலத்திலேயே இருக்கிறது என்று எண்ணி மிகுந்த சந்தோஷமடைந்தான்.

அன்பான மாணவர்களே, உங்கள் கையிலுள்ள வேத புத்தகம் எப்படிப்பட்டது தெரியுமா? ஒவ்வொரு வசனங்களும் தங்கத்திலும் சுத்தத் தங்கத்தை விட மிகவும் விலையேறப் பெற்றது தேனிலும் தெளிந்த தேனிலும் சுவை நிறைந்தது!

**பாட விளக்கம்:**

**1) வேதம் ஏன் எழுதப்பட்டது?**

இதை நமக்கு எழுதித் தந்தவர் தேவன். நம்மை அறிந்தவரும் நம்மை படைத்தவருமான அவரை அவருடைய ஞானத்தையும் படைப்பு தன்மையும் இதன் மூலமாக தெரிந்துகொள்கிறோம். (சங்கீதம் 19:17)

**2) எதற்காக எழுதப்பட்டது?**

அழிந்து போகக்கூடிய மனிதன் ஜீவனுள்ள தேவனை அறிந்து அவருடைய வார்த்தை மூலம் நித்தியஜீவனை பெறும்படியாகவும் இரட்சிப்பை பெறும்படியாகவும் எழுதப்பட்டது.

**3) எப்போது வேதம் நமக்கு நன்மை தருவதாக மாறும்? எப்படி?**

a. **ஆராய்தல்:**

நாம் வாஞ்சையோடு அவருடைய வார்த்தையை தேடவேண்டும். (எரேமியா 15:16)

b. **அகமகிழ்தல்:**

வேத வார்த்தைகளை தியானம் செய்வது மனமகிழ்ச்சியாய் இருப்பது. (சங்கீதம் 1:2-3, 37:3-5)

c. **அனுபவித்தல்:**

நம்முடைய வாழ்வில் செயல்படுத்துவது. (சங்கீதம்19:11)

d. **ஆதாரமாக்குதல்:**

இந்த வார்த்தைகளுக்கு சாட்சியாய் இருப்பது. (ரோமர் 10:9,10; 1 பேதுரு 1:19)

**4) பரிசுத்த வேதாகமமே எல்லாவற்றிற்கும் மேலானது:**

எழுதப்பட்ட எல்லா புத்தகங்களை விட மனிதனுக்கு நம்பிக்கையையும்

ஒழுங்கு முறைகளையும் வாழ்வு அல்லது மரணம் ஆசீர்வாதம் அல்லது சாபத்தைப் பற்றி போதிப்பதில் பரிசுத்த வேதாகமமே சிறந்த புத்தகமாகும். இதற்கான நம்முடைய சந்தேகங்களை எல்லாம் வேதாகமம் மட்டுமே தீர்க்க முடியும். இது உலகத்தில் உள்ள எல்லா புத்தகத்திலும் பழமை வாய்ந்ததாகும். ஒரு தனிமனிதன் துவங்கி திரளான மக்களையும் தேசத்தையும் ஆதிக்கம் செய்வதாகவும் உள்ளது. பிழையற்றதும் பரிசுத்தமான இந்த சத்திய வார்த்தைகள் ஆசீர்வாதமும் தனிச்சிறப்பு நிறைந்துள்ளது. இவைகள் எந்த புராணங்களையும் அல்லது கட்டுக்கதைகள் வழியாகவோ எழுதப்படவில்லை.

துயரமான நாட்கள் மரண பயத்தின் இருளின் பாதைகள் கைவிடப்பட்ட நேரங்களில் மனிதனை ஆற்றி தேற்றி தெரியப்படுத்தி அவனுக்கு நிம்மதியைத் தருகிற புத்தகம் வேதம் மட்டுமே.

**முடிவுரை:**

இந்த வேதபுத்தகம் ஒப்பிடமுடியாததும், விலையேறப்பெற்றதுமாகும். இதை நீங்கள் வைத்துக்கொள்வது கடினமான செயலே அல்ல. இந்த வார்த்தைகள் உனது வாழ்வானால் நீ அதனுடையதாகவும் அதற்கு உரிமை உள்ளவனாகவும் மாறிவிடுவாய். நீ தேவனுடையவனாக இருப்பாய். அவர் உன்னோடே இருந்து உன்னை சாதிக்க கூடியவனாக மாறி விடுவார். "....என்னில் நிலைத்திருப்பவன்...... மிகுந்த கனிகளைக் கொடுப்பான்". (யோவான் 15:5)

....ஆம்! உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாக மாறும்!.

"....நீங்கள் என்னில் நிலைத்திருந்தால்"... உங்களுக்கு செய்யப்படும். (யோவான் 15:7)

## கேள்விகள்

1. சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டு போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருக்கிறது இரட்சிக்கப்பட்ட நமக்கோ அது தேவபெலனாய் இருக்கிறது. (1கொரிந்தியர் 1:18) இந்த வேதப்பகுதி இப்படி கூறுவது ஏன்?
2. பரிசுத்த வேதாகமம் விலையேறப்பெற்ற பொக்கிஷங்கள் நிறைந்தது என்று ஏன் கூறுகிறோம்?
3. வேத புத்தகம் எழுதப்பட்டதற்கான காரணங்கள் யாவை?
4. பரிசுத்த வேதாகமத்திற்கும் பிற புத்தகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?
5. வேதாகமத்தை அனைவரும் சொந்தமாக வைத்துள்ளார்கள்? அவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களா ஏன்?

பாடம் 2

# பரிசுத்த வேதாகமத்தின் உருவாக்கம்

***வேதபாகம் :*** 2 பேதுரு 1:19-21; எபி.1:1-3.

***மனப்பாட வசனம் :*** தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:21)

***நோக்கம் :*** பிள்ளைகள் வேதாகமத்தை புரிந்து கொள்வதோடு அதில் வார்த்தைகள் முழுவதும் ஆச்சரியமான விதமாக எழுதப்பட்டது என்றும் தேவனே இதன் ஆசிரியர் என்பதை புரிந்து கொள்ளச் செய்தல்.



***முன்னுரை:*** வேதமானது தான் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விதத்தை பார்க்கும் போது அதிசயமானதாக உள்ளது. இதன் பிறப்பு ஆச்சரியமானது. இதனை படிப்பது பரவசமானது. அனுகூலமான காலகட்டங்களிலும் எதிர்ப்பு நிறைந்த சூழ்நிலைகளிலும் இந்த புத்தகம் ஒழியாத ஒன்றாக நிறைந்திருக்கிறது. இந்தப் புத்தகமானது தன்னை எதிர்கொள்ளும் ஒவ்வொருவரையும் தன் பக்கம் ஈர்க்கிறதாகவும் ராஜ்யங்களையும் ராஜாக்களை மேற்கொண்டு தோற்கடித்து இருக்கிறது. இப்படிபட்ட பெருமை இப்புத்தகத்திற்கு உண்டு. இந்தப் புத்தகத்தை தங்கள் வாழ்வில் உயர்த்திப் பிடித்த எல்லாரும் சிறந்த மனிதர்களாகவும், வெறுத்தவர்கள் மதியீனராக மாறினார்கள்.

**பாட விளக்கம்:**

கடந்த நூற்றாண்டின் மத்தியில் ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள எத்தியோப்பிய தேசத்தில் பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடியது. அங்கே மீட்புக் குழுக்கள் உதவிகள் செய்து கொண்டிருந்தனர். இந்தக் குழுவை சேர்ந்த ஒருவர் இதுவரை கண்டிராத ஒன்றை கண்டு வியந்து போனார். அதாவது இப்படிப்பட்ட பஞ்சம் கஷ்டத்தின் மத்தியிலும் ஒரு நபர் சந்தோஷமாக இருப்பதையும் சிரித்த முகத்துடன் தன்னை வரவேற்பதும் கண்டார். அவருடைய மகிழ்ச்சிக்கு காரணம் என்ன என்று கேட்டபோது அவர் உள்ளே சென்று ஒரு வேத புத்தகத்தை கொண்டு வந்து இது தான் என் மகிழ்ச்சியின் இரகசியம் என்றார்.

**1) வேதாகமத்தின் பெயர்கள்:**

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருந்தபோதிலும் இதனைப் பரிசுத்த வேத வாக்கியங்கள் என்று அழைக்கப்பட்டது. கிரேக்க மூல பதத்தில் “டாபிப்லா” (டா-பிப்ளியா Ta-Biblia) இதன் பொருள் “புத்தகங்கள்” என்பதாகும். பின்பு இந்தப் பதம் லத்தின் மொழியில் “பிப்லே” (Biblay) மற்றும் ஆங்கிலத்தில் “பைபிள்” என்று அழைக்கப்படுகிறது.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் பரிசுத்த வேத வாக்கியங்கள் என்ற பதம் பைபிள் என்ற பெயர் சூட்டப்பட்டது. இதனை அப்போது துருக்கி என்னும் கான்ஸ்டாண்ட்நோபிலில் ஊழியம் செய்த ஆதி சபை பிதா ஜான்கிரைஸ் டோன் என்பவர் வழங்கினார். இதற்கு முன்பாக பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை என்னும் இரண்டாம் நூற்றாண்டிலும் மூன்றாம் நூற்றாண்டிலும் இதற்கு தெய்வீக வேத வாக்கியங்கள் என்று பொருள் தரப்பட்டது. கி.பி 400-ல் ஜெரோம் என்பவர் வேதத்தை பிப்லியோ தெக்காவிவா (Biblio Thekkaviiva - பொருள் தெய்வீக நூலகம்) என்று அழைத்தார்.

**2) எழுத்துக்களும் எழுத்தாளர்களும்:**

கி.மு மற்றும் கி.பி இன் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்த 40க்கும் மேற்பட்ட மனிதர்களை தேவன் இதனை எழுத பயன்படுத்தினார். அதில் ராஜாக்கள், மருத்துவர்கள், மேய்ப்பர்கள், மீனவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இதில் பெரும்பாலானோர் ஒருவரையொருவர் பார்த்ததே கிடையாது. இருப்பினும் அவர்கள் அனை வருடைய வார்த்தையும் ஒன்றுபோல் தேவன் மற்றும் தேவனுடைய ராஜ்ஜியம் என்பதையே கூறியிருக்கிறது. இவர்கள் அனைவரும் தங்கள் சுயவிருப்பத்தின் படியாக எழுதாமல் பரிசுத்த ஆவியானவர் ஏவுதலினாலே எழுதினதினால் இப்படி எழுத முடிந்தது. (2 பேதுரு 1:21)

**3) காலமும் இடமும்:**

பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்கள் அனைத்தும் கி.மு 1492க்கும்

கி. பி 100-க்கும் இடைப்பட்ட1600 ஆண்டுகள் கால இடைவெளியில் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டில் கிமு.1400 க்கும் 400 க்கும் இடைப்பட்ட 1000 ஆண்டு கால சம்பவங்களும், புதிய ஏற்பாட்டில் 100 ஆண்டுக்கால சம்பவங்களும் உள்ளது. புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் பரிசுத்த பவுல் எழுதிய நிருபங்கள் (கி. பி 48-66) முதலாவது எழுதப்பட்டது. 4 சுவிசேஷ புத்தகங்களும் கிபி 56-100 கால இடைவெளியில் எழுதப்பட்டது. கிமு 1500-ல் மோசே சீனாய் மலையில் எழுத துவங்கி கிபி 100- ல் அப்போஸ்தலர் யோவானால் பத்மு தீவில் எழுதி முடிக்கப்பட்டது.

அரேபிய நாடுகள், சீனாய் பாலைவனம், பாலஸ்தீன நகரம் மற்றும் மலைத்தொடர்கள், தேவாலயத்தின் வெளிமுற்றம், பெர்சியாவின் தலைநகர் சுஷன், லூடர் பள்ளத்தாக்கு, ரோம கைதிகள், பத்மோஸ் தீவுகள், மத்திய தரைகடல் இவை அனைத்தும் வேதாகமத்தின் பிறப்பிடம் மற்றும் பட்டறைகள்.

### 4) வேதத்தின் பல்வேறு பெயர்கள்:

1. பரிசுத்த வேத வாக்கியங்கள் (2 தீமோ. 3:16; 2பேதுரு 3:16)
2. சத்திய எழுத்துக்கள் (தானியேல் 10:21)
3. கர்த்தருடைய புத்தகம் (ஏசாயா 34:16)
4. புத்தகங்கள் (தானியேல் 9:2)
5. புத்தக சுருள் (சங்கீதம் 40:7)
6. தேவனுடைய வாக்கியங்கள் (ரோமர் 3:2)
7. தேவனுடைய வார்த்தை (எபேசியர் 6:1)

தேவனுடைய வார்த்தையின் அழகை பாருங்கள். இது நமது கையில் கிடைத்தது பெரிய அற்புதம். நாம் எல்லோரும் இதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். (மனப்பாட வசனத்தை மறுபடியும் சொல்ல வைக்கவும்).

### கேள்விகள்

1. பைபிள் என்ற பதம் எங்கு எந்த பதத்தில் இருந்து உருவாக்கப்பட்டது,
2. பைபிள் என்பதை தெய்வீக நூலகம் என்று அழைத்தது யார்?
3. எந்த காலங்களில் வேதாகமம் எழுதப்பட்டது?
4. வேதாகமத்தை எழுதினவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தது கிடையாது மேலும் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் இப்படியிருக்க இவைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்திருப்பது எப்படி?
5. வேத வாக்கியங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் என்ன?
6. பரிசுத்த வேத வாக்கியங்கள் எந்தெந்த இடங்களில் எழுதப்பட்டது? இதனை வரைபடத்தில் குறிக்கவும் ஐரோப்பியா - ஆசியா

பாடம் 3

# பழமையான கையெழுத்து பிரதிகள் மற்றும் மொழிபெயர்ப்புகள்

வேதபாகம் : சங்கீதம் 119:89-96.

***மனப்பாட வசனம் :*** கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது. உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும்; பூமியை உறுதிப்படுத்தினீர்; அது நிலைத்து இருக்கிறது. (சங்கீதம் 119:89,90)

***நோக்கம் :*** தேவன் அவருடைய வார்த்தையை எல்லா மனிதர்களுக்கும் அவரவர் மொழிகளிலேயே கிடைக்க வேண்டும் என்று அவரே அதற்கான பணியையும் துவக்கி அவருடைய வார்த்தைகளை பரவச் செய்தார் என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ளச் செய்தல்.



***முன்னுரை:*** தேவன் அவருடைய கிரியைகளை மனிதர்களுக்கு வெளிப் படுத்துவதற்கு எழுத்து மற்றும் மொழி ஊடகத்தை பயன்படுத்தினார். இந்த எழுதுகிற முறை 4000 ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறையில் இருந்துள்ளது. இது மோசேயின் காலகட்டத்திலேயே எழுதப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம். இந்த புனிதமான வார்த்தைகள் எழுதுவதின் மூலமாக பல தலைமுறைக்கு கொண்டு செல்லப்பட்டது. அச்சு இயந்திரங்கள் இல்லாத நாட்களில் கைகளில் எழுதுவது கடினமாக இருந்தது. ஆனால் தேவன் மிகுந்த தியாகமான இப்பணியைச் செய்ய அநேகரை எழுப்பினார்.

**பாட விளக்கம்:**

1) எழுதுவதற்கு பயன்படுத்தின உபகரணங்கள் மற்றும் இடங்கள்

• **தரையில் அல்லது மண்ணின் மேல் எழுதப்பட்டது. எரேமியா 17:13**

• **கற்களில் (கல்பலகைகள்)**

எ.கா ஹமுராபி கோட் ஆப்லா: ரோஸெட்டா ஸ்டோன், மோபிய கல்வெட்டு, (மெசபடோமியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய இடங்களில் இந்த முறை பொதுவாக பயன்படுத்தப்பட்டது) மோசே கற்பலகைகளை எழுதுவதற்கு பயன்படுத்தினார்.

• **பாப்பிரஸ்:**

பேப்பர் வருவதற்கு முன்பாக இதனை பயன்படுத்தினர். பாப்பிரஸ் என்பது பேப்பரை போல ஒரு தடிமனான பாப்பிரஸ் செடியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள். எகிப்தின் நைல் நதிக் கரைகளில் இவைகள் அதிகமாக காணப்பட்டது. ஆதியாகமத்தின் பகுதிகள், உபாகமம்,மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்கள் எழுதப்பட்டுள்ளது. எரேமியா 36 ல் சுருள் என்று இடம் பெறுவதும் பாப்பிரஸ் ஆகவே இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

• **தோல்:**

இவைகள் பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோல் ஆகும். 1947 ல் 1917 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஏசாயா தோல் சுருள்களை சவக்கடல் அருகில் கும்ரான் என்ற இடத்தில் கண்டுபிடித்துள்ளனர். மோசேயின் காலத்திலிருந்தே மிருகங்களின் தோள்களில் எழுதுகிற பழக்கம் இருந்தது. மேலும் சவக்கடல் தோல் சுருள்களில் மேலும் அதிகமான தகவல்களை பெறலாம்.

• **உலோக தகடுகள்:**

யாத் 28:36; மத்தேயு 22:19,20; ஏசாயா 8:1

• **ஈயம் மற்றும் இரும்பு எழுத்தாணி:**

எரேமியா 17:1; யோபு 19:24

• **மை மற்றும் இறகுகள்:**

3 யோவா. 1:13

**2) ஆயத்தம் செய்தலும் பதப்படுத்துதலும்:**

வேத வசனத்தை நகலெடுத்தலும் பக்குவம் பண்ணுகிற பொறுப்பு கிமு 2-ஆம் நூற்றாண்டுகளில் சோப்பாரிம்ஸ் (Zopharims) என்ற வேதபாரகர்களிடம் இருந்து மேசோரஸ் இந்த பொறுப்பை 6 நூற்றாண்டு முதல் கி.பி பத்தாம் நூற்றாண்டு வரை எடுத்துக்கொண்டார். தேவனே இவருடைய சிறப்பான சேவைக்காக உமக்கு நன்றி.

### 3) பென்ஆசேர் மற்றும் பென்நப்தலி:

பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மேசோராவை சார்ந்த இரண்டு குடும்பத்தினர் ஆவர். இவர்கள் மேசேரோஸ் வேதாகமத்தை ஒன்றிணைக்க ஆயத்தம் செய்தனர். எபிரேய பிரதிகளை ஆயத்தம் செய்ய ஐந்து ஆசேர் குடும்பத்தினர் ஈடுபட்டனர். இதில் பென்ஆசேர் அவர் மகன் ஆரோன் முக்கியமானவர்கள்.

### 4) முந்தைய கால வேதாகம மொழிபெயர்ப்புகள்:

மொழிபெயர்ப்புகள் வாயிலாக எபிரேய பழைய ஏற்பாடும், கிரேக்க புதிய ஏற்பாடும் ஆயிரக்கணக்கான மொழிகளில் கிடைக்கிறது. முதல் முதலாக எபிரேய மொழியில் இருந்து பிற மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட முதல் புத்தகம் எபிரேய பழைய ஏற்பாடு

- **பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்புகள்:**

4 மொழிபெயர்ப்புகள் உள்ளது. செப்து வஜீந்த், அரமேய டார்கம், சீரிய பெஸிட்டா, லத்தின் வல்கேட்.

### செப்து வஜிந்த்:

செப்து வஜிந்த் என்றால் 70 என்று பொருள். இதனை LXX என்றும் எழுதலாம். இந்த மொழிபெயர்ப்பைப் பற்றிய ஒரு உற்சாகமூட்டும் கதை ஒன்று உண்டு.

மகா அலெக்சாண்டர் மரணத்திற்குப்பின் கி.மு 323 எகிப்து தாலமியின் அதிகாரத்திற்கு வந்தது. அவன் கி.மு 285 - 247 எபிரேய மொழி வேதத்தை கிரேக்க மொழியில் மொழிபெயர்த்து அதனை அலெக்சாண்டிரியாவில் உள்ள தனது நூலகமான மியூசியத்தில் வைக்க விரும்பினான். தாலமியின் விருப்பத்திற்கு ஏற்ப எலியேசர் என்ற எருசலேமின் பிரதான ஆசாரியர் 72 யூத வேத வல்லுனர்களை (ஒவ்வொரு கோத்திரத்தில் 12) கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க அனுப்பினான். அவர்கள் இதனை 70 நாட்களுக்குள் மொழிபெயர்த்தனர். ஆகவே இது செப்து வஜிந்த் என்று அழைக்கப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவும் செப்து வஜிந்த் பயன்படுத்தினார். செப்து வஜிந்திலிருந்து 70% பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் புதிய ஏற்பாட்டு மேற்கோள்களும் எடுக்கப்பட்டது.

இந்த மொழிபெயர்ப்பு வேதத்தின் சத்தியங்கள் வெகுதூரம் பரவ உதவியாக இருந்தது. அந்த நாட்களில் கிரேக்க மொழி பிரபலமாக இருந்தது. அலெக்சாண்டருடைய கி.மு(336-323) படையெடுப்பு இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் உள்ள சிந்து நதிக்கரை வரை எட்டியது. இதன் வழியாக கிரேக்க கலாச்சாரமும் மொழியும் பல இடங்களில் பரவியது. அதனுடன் சேர்ந்து வேத சத்தியங்கள் பரவியது

தேவனுடைய வழிகளை பார்த்தால் ஆச்சரியமாக உள்ளது.

**அரமிக் அரமேயு டார்கம்:**

டார்கம் என்றால் விளக்கம் என்று பொருள். சிரிய தேசத்தில் பேசப்பட்ட மொழி அரமேயு ஆகும். பாபிலோனிய சிறையிருப்பில் வாழ்ந்த யூதர்கள் உள்ளே இந்த மொழி பேசப்பட்டது. யூதர்கள் அரமேய மொழியை தங்கள் அலுவலக காரணங்களுக்காகவும் எபிரேய மொழியை ஆன்மீக காரணங்களுக்காகவும், பயன்படுத்தினர். அரமேய மொழி 7 நூற்றாண்டு வரை பாலஸ்தீனத்தில் பயன்படுத்தப்பட்டது. இந்த நாட்களில் எபிரேய மொழி மறுக்கப்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையானது எபிரேய மொழி பழைய ஏற்பாட்டை அரமேய மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற அவசியத்தை ஏற்படுத்தியது. அநேக வாய்வழி பேசப்பட்டு வந்த பழைய ஏற்பாட்டு விளக்கங்கள் முடிவுற்று கி.பி ஆரம்ப நாட்களில் எழுத பழக்கம் ஏற்பட்டது. இதனால் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் முதல் அரமேய டார்கம் எழுதப்பட்டது.

**சிரிய மொழிபெயர்ப்புகள்:**

சிரிய மொழியின் வேதாகமத்தை பெஷிதா என்று அழைக்கப்படுகிறது. (பெஷிதா Peshitha என்றால் எளிமையான) 2ம் நூற்றாண்டில் மத்திய பகுதியில் சிரிய வேதாகமம் நடைமுறைக்கு வந்தது. இந்திய சபைகள் இதனை அதிகாரபூர்வ வேதமாக கருதுகின்றனர்.

**லத்தின் வல்கேட்:**

வல்கேட் என்றால் பொது மனித வேதாகமம் என்று பொருள். இந்த வேதாகமம் புனித ஜெரோம் என்பவரால் கி.பி 390 - 405 மொழி பெயர்க்கப்பட்டு 13ம் நூற்றாண்டுகளில் இருந்து வல்கேட் என்று அழைக்கப்படுகிறது. லத்தின் என்பது வட ஆப்பிரிக்காவில் பேசப்பட்ட மொழியாகும். ஆகவே பழைய லத்தின் வேதாகமங்கள் சபைக்கு தேவை யாகவே இருந்தது. சபை பிதா தெர்த்துல்லியன் இதை குறிப்பிட்டார். டமேசஸ்1 (கி.பி 366-384) லத்தின் மொழியின் தேவையை அறிந்து இந்த புனித பணியை புனித ஜெரோமிற்கு வழங்கினார். ரோம கத்தோலிக்க சபை ரெண்ட் கவுன்சிலில் 1546 ல் இதனை அதிகார பூர்வ வேதமாக ஏற்றுகொண்டது. இது வெளிவந்த பின்பு பழைய லத்தின் மொழி வேதாமகத்தை ஒருவரும் பயன்படுத்தவில்லை.

**பிற மொழி பெயர்ப்புகள்:**

- எத்தியோப்பிய மொழிபெயர்ப்புகள் (கி.பி 4 மற்றும் 7 நூற்றாண்டுகள்)
- கோதிக் மொழிபெயர்ப்பு (ஜெர்மனியில் அப்போஸ்தலர் என்று அழைக்கப் பட்ட உல்பிளாஸ் என்பவர் பல்கேரிய கிறிஸ்தவர்களுக்காக கோதிக் மொழியில் இதனை ஆயத்தம் செய்தார்)
- அர்மேனிய மொழிபெயர்ப்பு ( கி. பி 439)

- ஓரிகன் எக்ஸ் ஆப்லா  (கி. பி 245)
- சிமக்கஸ் மொழி பெயர்ப்பு

**முடிவுரை:**

நமது பங்கு என்னவாக இருக்கவேண்டும். முதல் வேதாகமத்தை நாம் சந்ததியில்  ஒருவரும் பார்க்கவில்லை. ஆனால் இந்த புனிதமான வார்த்தைகளை கேட்க படிக்க அனுபவிக்க பாக்கியம் பெற்றுள்ளோம். தாமாகவே முன்வந்து இப்பணிகளை நம் பிதாக்கள் செய்து இருக்கின்றார்கள். நாம் இதன் செய்தியை பரப்ப வேண்டும் தேவன் நமக்கு நேரம், வாய்ப்பு, திறமை, கல்வி, செல்வம் போன்றவைகளை தந்துள்ளார். இதற்கான கணக்கை நம்மிடம் கேட்பார். எசே.22:14 ஆண்டவரே! நீர் தந்த வேத வாக்கியங்களுக்காக நன்றி.

**கேள்விகள்:**

1. முந்தைய கால எபிரேய மொழி பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்புகள் நான்கு யாவை?
2. பழைய ஏற்பாடு கிரேக்க மொழிபெயர்ப்பு செப்து வஜிந்த் என்று எப்படி பெயர் பெற்றது?
3. பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் அரமேயு  மொழிபெயர்ப்புக்கான காரணம் என்ன?
4. அலெக்ஸாண்டரின் படையெடுப்பு ஆசியாவில்  வேதாகமம் பரவ எப்படி உதவியாக இருந்தது?
5. சிரிய பெஷிதா  மொழிபெயர்ப்புக்கும் இந்திய திருச்சபைக்கும் உள்ள உறவு பற்றி எழுது?
6. முந்தைய கையெழுத்துப் பிரதிகள் ஆயத்தம் செய்ய என்ன இடங்களை பயன்படுத்தினார்கள்?

பாடம் 4

# ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் பரிசுத்த வேதாகமம்

வேதபாகம் : அப்போஸ்தலர் 2:1-13, ஆமோஸ் 8:11-12

***மனப்பாட வசனம் :*** வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ 3:16,17).





***நோக்கம் :*** ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழியில் வேதாகமம் எவ்விதம் மொழி பெயர்க்கப்பட்டது என்பதை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தல். கிங் ஜேம்ஸ் (ஆங்கில) வேதாகமமும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் வைத்துக்கொள்ளவும்.

***முந்தைய மொழிபெயர்ப்புகள்:*** இந்தியாவிலும் உலகத்திலும் பிரபலமான மொழிகள் என்ன, பிள்ளைகள் பதில் சொல்லட்டும்.

ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு ஏழாவது நூற்றாண்டில் துவங்கியது. யோர்க்கின் தலைமை குருவான இக்பர்ட் சுவிசேஷ புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பிரசித்தி பெற்ற வேத வல்லுநர் வினரபிள் பீட் யோவான் புத்தகத்தை மொழிபெயர்த்தார். இங்கிலாந்து

அரசர் ஆல்பிரட் கி.பி 870-901 யாத்திராகமம், அப்போஸ்தலர் நடபடிகள் மொழிபெயர்த்தார். ஆக்ஸ்போர்டு சேர்ந்த எல்பிக் பழைய ஏற்பாட்டின் சில புத்தகங்களை மொழிபெயர்த்தார். இவைகள் மொழிபெயர்ப்பின் ஆரம்பகட்ட வேலை ஆகும்.

**ஜான் விக்ளிப் வேதாகமம்:**

இவர் 1320 ல் இங்கிலாந்து தேசத்தில் பிறந்து சீர்திருத்தத்தின் விடிவெள்ளி என்று அழைக்கப்பட்டார். சிறந்த இறையியல் வல்லுனர். இங்கிலாந்து இளவரசரின் ஆலோசகராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவர் எபிரேய மொழியில் புலமை பெற்றவர் அல்ல. ஆகவே புனித ஜெரோம் இலத்தீன் மொழிபெயர்ப்பு வேதாகமத்தை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார். நிக்கோலஸ் என்ற தன் நண்பருடன் சேர்ந்து இந்தப் பணிகளைச் செய்தார். மொழிபெயர்ப்புக்கு பின்பு இவர்கள் லோலார்ட்ஸ் என்று அழைக்கப்பட்டனர்.

ஆங்கில வேதாகமத்தை மொழி பெயர்த்ததர்க்காக இவரை கத்தோலிக்க திருச்சபை சிறையிலடைத்தது. கி.பி 1395-1408 ஜான்பார்வீ விக்ளிப் ஆங்கில வேதாகமத்தை திருத்தம் செய்தார். இந்த வேதாகமத்தை வைத்திருந்தவர்களையும் படித்தவர்களையும் கத்தோலிக்க திருச்சபை சிறையில் அடைத்தது. ஆங்கிலத்தில் தன் பிள்ளைகளுக்கு வேதத்தைக் கற்றுக்கொடுத்த பெற்றோர்களையும் உயிருடன் எரித்தனர். இவ்விதமாக ஆங்கில வேதாகமத்தின் மீது கத்தோலிக்க திருச்சபை தன் கோபத்தை காட்டியது.

1384 டிசம்பர் 31 அன்று ஜான் விக்ளிப் மகிமைக்குள் பிரவேசித்தார். லுட்டன் ஒர்த் என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையானது அவரை அடக்கம் செய்த இடத்திலிருந்த அவர் எலும்புகளை எடுத்து எரித்து அதன் சாம்பலை ஷிப்ட் நதியில் தூவி னார்கள். ஆனால் அவருடைய வேதாகமமும் மக்களின் நடுவில் மிகவும் பிரசித்தமானது. இந்த மொழிபெயர்ப்பு அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**டிண்டேல் வேதாகமம்** (Tyndale Bible):

இவர் 1492ல் இங்கிலாந்தில் வேல்ஸ் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் எபிரேய கிரேக்க மொழியில் புலமை பெற்றவர். இவர் இந்த மொழிகளில் இருந்து ஆங்கில வேதாகமத்தை மொழி பெயர்க்க முயற்சி செய்தார். இவர் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க தடை செய்யப்பட்டபோது 1524 ஜெர்மனி தேசத்திற்கு தப்பிச்சென்று அங்கு மொழிபெயர்ப்பு வேலையை தொடர்ந்தார். 1526ல் முழு ஆங்கில வேதாகமத்தையும் கோலங்கில் முடித்தார். 1530ல் பஞ்சாகமத்தை மார்பர்க் என்னுமிடத்தில் 1531ல் யோனா புத்தகத்தையும் மொழிபெயர்த்தார். டிண்டேல் வேதாகமத்தின் பிரதிகளை இங்கிலாந்திற்கு கொண்டு

சென்றார். சாதாரணமக்கள் மதகுருக்களின் எதிர்ப்புகளின் மத்தியில் வரவேற்றனர்.

பிறகு டிண்டேல் சிறைப்படுத்தப்பட்டார். இருப்பினும் சிறையிலேயே தனது மொழிபெயர்ப்புப் பணியை தொடர்ந்தார். நீதிமொழிகள் மற்றும் தீர்க்கதரிசன புத்தகங்களை மொழி பெயர்த்து முடித்தார். தனது இரண்டு வருட சிறையிருப்பின் முடிவில் இவர் கொலை செய்யப்பட்டார். 1535 அக்டோபர் 6 வெள்ளிக்கிழமை அன்று வில்லியம் டிண்டேல், புரூஸ்லஸ் அருகில் உள்ள பீல்போர்டு என்ற இடத்தில் ஒரு கம்பத்தில் கட்டப்பட்டு கயிற்றால் கழுத்தை இறுக்கி கொலை செய்தனர். அவ்விடத்திலேயே அவர் உடல் எரிக்கப்பட்டது. வில்லியம் அதற்கு முன்பு செய்த ஜெபமாவது தேவனே இங்கிலாந்து அரசின் கண்களைத் திறந்தருளும் இவர் மரணத்திற்குப் பின்பு மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இவரை கொலை செய்ய கட்டளையிட்ட இங்கிலாந்து அரசர் இவர் மொழிபெயர்த்த வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட அனுமதித்தார். தேவன் இங்கிலாந்து அரசரின் கண்களைத் திறந்தார்.

**கவர்டேல் வேதாகமம்** (Coverdale Bible): **(கி.பி 1488-1569)**

மைல்ஸ் கவர்டேல் என்பவர் வில்லியம் டிண்டேல் உதவியாளரும் அச்சுப் பிழை திருத்துபவரும் ஆவார். கவர்டேல் வேதாகமம் ஆங்கிலத்தில் வெளியான முதன்மையான முழு வேதாகமம் ஆகும். இதனை ஜெரோமின் லத்தின் வேதாகமத்தையும் லூதரின் ஜெர்மன் வேதாகமத்தையும் மற்றும் எராஸ்மஸ், பாகினிஸ், லத்தின் மொழிபெயர்ப்புகளையும் படித்துத் தேறின 5 நபர்களை கொண்டு இதனை மொழிபெயர்த்தார். 1535 இல் இது வெளியிடப்பட்டது. பின்பு 1537 மற்றும் 1550 திருத்தம் செய்யப்பட்டது. 1611 இல் வெளியான கிங் ஜேம்ஸ் வேதாகமம் வெளியிடும் வரை இது பயன்படுத்தப்பட்டது.

**கிங் ஜேம்ஸ் வேதாகமம்:**

இங்கிலாந்து அரசர் கிங் ஜேம்ஸ் அவர்களிடம் 1000 மக்கள் சேர்ந்து ஒரு மனுவை கொடுத்தனர். இது மில்லனரி புகார்கள் ஆகும். இதில் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் வேதாகமத்தை மொழி பெயர்க்க வேண்டும் என்று எழுதி இருந்தது. அரசர் இதற்காக 59 பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்தார். அவர்கள் ஆறு குழுக்களாக பிரிந்து வேலை செய்தனர். அவர்கள் இதற்கு முன்பு வெளியான அனைத்து ஆங்கில வேதாகமங்களையும் எபிரேயு கிரேக்க வேதாகமங்களையும் ஆய்வு செய்து ஆயத்தம் செய்தனர். இந்த வேதாகமம் 1611 வெளியிடப்பட்டு சிறந்த ஆங்கில வேதாகமம் என்ற பெயரைப் பெற்றது. ஆகவே இதற்கு அனைத்து ஆங்கில வேதாகமங்களில் ராஜா என்ற பெயர் பெற்றது. நியூ கிங் ஜேம்ஸ் வெர்சன் கிதியோன் இன்டர்நேஷனல் நிறுவனத்தால் அச்சிடப்பட்டது.

## இந்தி மொழியில் வேதாகமம்:

இந்தி இந்தியாவில் அநேகரால் பேசப்படுகிற மொழியாகும். தேவநாகரி பிரதிகள் இந்தி மொழியில் எழுதப்பட்டது. இந்தி மொழியையும் உருது மொழியையும் நம்மால் பிரிக்க முடியாது.

- 1745ல் பெஞ்சமின் ஸ்கல்ட்சி என்ற ஜெர்மன் மிஷனெரியால் ஆதியாகமம் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- வில்லியம் கேரியின் பங்கு 1761 முதல் 1834 வரை
  1802 - 1807 ல் முழு வேதாகமத்தையும் இந்தியில் மொழி பெயர்ப்பதில் வில்லியம் கேரி பெரும் பங்காற்றினார். அவருடைய தலைமையின் கீழ் புதிய ஏற்பாடு முதன்முதலாக 1811 இல் வெளியிடப்பட்டது.

## சாமுவேல் எச் கெல்சின் (Samuel H. Kellog) பங்கு 1839-1899:

இவர் இந்தியாவில் பணியாற்றிய அமெரிக்கன் பிரஸ்பிடேரியன் மிஷனரி ஆவார். இவர் சர்ச் மிஷனெரி சொசைட்டியை சேர்ந்த வில்லியம் ஹூப்பர் மற்றும் ஜோசப் ஆர்தர் லம்பர்ட் உடன் இணைந்து பழைய ஏற்பாட்டை திருத்தம் செய்து மொழிபெயர்த்தார்.

• இன்றைய இந்தி வேதாகமம் 1806 ஹென்ரி தாமஸ் ப்ருக் சுவிசேஷத்தை மொழிபெயர்த்தார். பின்பு 1811 இல் வில்லியம்கேரி புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். 1848 இல் வில்லியம் தாமஸ் புதிய மொழி பெயர்ப்பை வெளியிட்டு 1868ல் திருத்தம் செய்தார். அமெரிக்க பிரஸ்டேரியன் மிஷனெரியான ஜோசப் ஓவன் 1852-1855 ல் பழைய ஏற்பாட்டில் இரண்டு பகுதிகளை வெளியிட்டு 1866 முதல் 1869 இல் அதை திருத்தம் செய்தனர். 1892 இல் முழு வேதாகமம் வெளியானது.

## • ஈசுதாஸ் திவாரியின் பங்கு:

இவர் ஒரு இறையியல் மற்றும் சமஸ்கிருதம், இந்தி கிரேக்க பண்டிதர் ஆவார். இவர் வேதாகம சங்கத்தினால் புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்த்தார். இந்த நாட்களில் புதிய மொழி பெயர்ப்புகள் அதிக துல்லியமாக மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 2002ல் மறு திருத்தம் செய்து நமக்கு கிடைத்தது.

தேவன் நமது மக்களுக்கு ஆங்கிலம், இந்தி மற்றும் பிற மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கப்பெற்று அநேக கடின பாதைகள் சூழ்நிலைகள் ஏற்படினும் அநேக கடினமான பாதைகள் வழியாக சென்றாலும் தமது மக்கள் நிறைவாக வாழும்படி தேவன் மிகுந்த இரக்கம் உள்ளவராக நமக்கு ஆங்கிலம், இந்தி மற்றும் பல மொழிபெயர்ப்பு வேதாகமங்களை கிடைக்கச் செய்தார். அச்சிடப்பட்ட அழகான வேதாகமத்தை வைத்திருக்கிற நாம் எவ்வளவு பாக்கியசாலிகள். இவர்களுக்காக தேவனை துதிப்போம்.

**கேள்விகள்:**

1. வில்லியம் கேரி மற்றும் திவாரியின் பங்கு இந்தி வேதாகமம் மொழிப் பெயர்ப்பில் எவ்வாறு இருந்தது?
2. கிங் ஆல்பர்ட் மொழி பெயர்த்த வேதாகம பகுதிகளின் பெயர்கள் என்ன?
3. வேதாகம மொழி பெயர்ப்பில் ஜான் விக்ளிபின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது?
4. தேவனே இங்கிலாந்து அரசரின் கண்களைத் திறந்தருளும் என்று ஜெபித்தது யார்? அதன் விளைவு யாது?
5. மில்லினரி பெட்டிஷன் என்றால் என்ன?
6. 1611 இல் வெளியான ஆங்கில வேதாகமத்தின் பெயர் என்ன?

**திட்டம்:**

உங்கள் சபையில் சிறுவர் பள்ளி நாள் ஒன்றை ஏற்படுத்தி வெவ்வேறு ஆங்கில வேதாகமத்தையும் இந்தி வேதாகமத்தையும் சபை மக்களுக்கு வேதாகம கண்காட்சியாக நடத்தவும். இந்த நிகழ்ச்சியை விடுமுறை அல்லது சிறப்பு நாட்களில் நடத்திக் கொள்ளலாம்.


## பாடம் 5

# வேதாகம பிரிவுகள்

***வேதபாகம் :*** சங்கீதம் 119:1-8.

***மனப்பாட வசனம் :*** அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். (சங்கீதம் 119:2)

***நோக்கம் :*** வேதாகம பிரிவுகளைப் பற்றி படிப்பது வேதாகமத்தை மேலும் சிறப்பாக புரிந்துகொள்ள உதவும்.




*முன்னுரை:*

வேதாகமம் பழைய மற்றும் புதிய ஏற்பாடு என்று இரண்டாக பிரிக்கப்படுகிறது. பழைய ஏற்பாடானது யூத மார்க்கம் மற்றும் கிறிஸ்தவத்தைப் பற்றி அறிய ஆணிவேராக உள்ளது. இதில் இஸ்ரவேல் தேசத்தின் சரித்திர பின்னணியும் உள்ளது. புதிய ஏற்பாடானது இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் போதனைகளும் அப்போஸ்தலர்களால் சுவிசேஷம் பரவியதையும் நிருபங்களை பற்றியும் சொல்கிறது.

### பாட விளக்கம்:

### 1) பழைய ஏற்பாட்டின் பிரிவுகள்:

- மொழி மற்றும் காலம்:

பழைய ஏற்பாடு மோசேயின் காலத்திற்கும் கி.மு 400 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஆயிரம் ஆண்டுகால இடைவெளியில் எபிரெய மொழியில்

எழுதப்பட்டது.

- பழைய ஏற்பாட்டு புத்தகங்கள்
  பழைய ஏற்பாடு 39 புத்தகங்களையும் நான்கு பிரிவுகளையும் கொண்டது.
- நியாயப்பிரமாணம் - 5 ஆகமங்களை கொண்டது (உபாகமம் 30:10).
- வரலாற்று ஆகமங்கள் 12.
- கவிதை ஆகமங்கள் 5.
- தீர்க்கதரிசன ஆகமங்கள் 17.

**நியாயப்பிரமாண ஆகமங்கள்** (TORA): இவைகள் மோசேயின் ஆகமங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதியாகமம் முதல் உபாகமம் வரை கொண்ட இவைகள் எல்லாவற்றின் ஆரம்பத்தைப் பற்றியும் விவரிக்கிறது. இதற்கு பஞ்சாமங்கள் என்றும் பெயர். இந்தப் புத்தகமானது மனிதனின் வீழ்ச்சி, ஆபிரகாமின் அழைப்பு, மோசேயின் வளர்ப்பு போன்ற இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பகால சரித்திரத்தை புரிந்துகொள்ள உதவுகிறது.

**வரலாற்று (சரித்திர) ஆகமங்கள்:** யோசுவா முதல் எஸ்தர் வரை உள்ள 12 புத்தகங்கள் சரித்திர ஆகமங்கள் ஆகும். இதில் இஸ்ரவேல் தேசத்தில் சரித்திரம் தொடர்ந்து இடம்பெறுகிறது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானை சென்றடைதல், கானானில் தங்கள் இடத்தை ஏற்படுத்தி 500க்கும் மேற்பட்ட ஆண்டுகள் வாழ்ந்து அவர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும், வெற்றியும் தோல்வியும், தெய்வபக்தியும் பாவமும், புதிய ராஜ்யம், தோற்றம் போன்றவை இடம்பெறுகின்றன. இக்கால கிறிஸ்தவர்களுக்கு அந்த தலைவர்களும் தலைமைத்துவமும் நல்ல பாடங்களாக உள்ளது.

**கவிதை ஆகமங்கள் :** யோபு முதல் உன்னதப்பாட்டு வரை உள்ள ஐந்து புத்தகங்கள் ஆகும். இவை பழைய ஏற்பாட்டின் மூன்றில் ஒரு பங்காகும். துன்பங்கள், ஆராதனை, தேவன் வாழ்க்கை, பக்திப் பாடல்களும் முக்கிய தலைப்புகள் ஆக உள்ளது. வேதாகமத்தில் மிகப் பெரிய புத்தகம் சங்கீதம் (150 சங்கீதங்கள்). யோபு மற்றும் சங்கீதங்கள் செய்யுள் இலக்கியத்திற்கு சிறப்பு பங்காற்றியுள்ளது. நீதிமொழிகள் ஒரு சிறந்த அறிவுரை புத்தகமாகும்.

**தீர்க்கதரிசன ஆகமங்கள் :** ஏசாயா முதல் மல்கியா வரையுள்ள 17 புத்தகங்களாகும். இராஜாக்களின் காலத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களை தமது தீர்க்கதரிசிகள் மூலம் எச்சரித்தார். தேவன் எதிர்காலத்தில் செய்யப் போகிறவர்களை கூறி அம்மக்களை தவறான பாதையில் இருந்து திருப்பி தேவனுடைய வழிகளில் சேர்ப்பது தீர்க்கதரிசிகளின் வேலையாய் இருந்தது. ஏசாயா “மேசியாவின் தீர்க்கதரிசன புத்தகம்” என்று அழைக்கப் படுகிறது. ஏசாயா முதல் தானியேல் வரை பெரிய

மற்றும் முந்தைய தீர்க்கதரிசிகள் என்றும், ஓசியா முதல் மல்கியா வரை சிறிய மற்றும் பிந்தைய கால தீர்க்கதரிசிகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

**புதிய ஏற்பாட்டின் பிரிவுகள் :** புதிய ஏற்பாடு தேவனுடைய அன்பு எவ்விதம் மனிதனுக்கு வெளிப்பட்டது என்பதையும் அவருடைய குமாரனை விசுவாசிக்கிறவன் நித்தியஜீவனை அடைவான் என்பதையும் கூறுகிறது.

• **மொழி மற்றும் காலம் :** 100 ஆண்டு காலத்தில் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. பெரும்பாலான எழுத்தாளர்கள் இயேசுவோடு இருந்தவர்கள். இது ரோம சாம்ராஜ்யத்தின் அலுவலக மொழியாகிய கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. அக்காலக்கட்டத்தில் இம்மொழியானது உலகளாவிய மொழியாகவும் ஞானிகளின் மொழியாகவும் இருந்தது. கிரேக்க மொழி புதிய ஏற்பாடு இயேசுவின் செய்தியை சுலபமாக பரப்ப உதவியாக இருந்தது.

• புதிய ஏற்பாட்டு பிரிவுகள் 27. அவைகள் ஐந்தாக பிரிக்கப்படுகிறது

1) சுவிசேஷங்கள்
2) சரித்திரப் புத்தகங்கள்
3) பவுலின் நிருபங்கள்
4) பொதுவான நிருபங்கள்
5) தீர்க்கதரிசன நிருபங்கள்

**சுவிசேஷங்கள் :** நான்கு சுவிசேஷங்கள் உள்ளது. மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் அதனை எழுதினார்கள். இவைகளில் இயேசுவின் வாழ்க்கை, போதனைகள், ஊழியங்கள் இடம்பெறுகின்றன. மத்தேயு இயேசுவை (ராஜா) அனைவருக்கும் ஆண்டவர் என்றும் மாற்கு அவர் ஊழியர், லூக்கா அவர் மனிதன் மற்றும் யோவான் அவர் ஒரு தேவகுமாரன் என்று வெளிக்காட்டினார்கள்.

**சரித்திர புத்தகம் :** புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்று மட்டுமே சரித்திர புத்தகம் ஆகும். இது லூக்காவினால் எழுதப்பட்டது. இதில் பரிசுத்த ஆவியானவர் வருகை, சபை உருவாகுதல், உபத்திரவத்தின் மத்தியிலும் சபையில் ஏற்பட்ட வளர்ச்சி, சுவிசேஷம் அறிவித்தலும் ஆத்துமாக்கள் சேர்க்கப்படுதல் போன்றவைகள் இடம் பெறுகின்றன. இந்த புத்தகத்தில் பேதுருவின் முந்தைய கால ஊழியம் முழுவதும், பவுலின் பிந்தைய கால ஊழியங்களும் இடம் பெறுகின்றன.

**பவுலின் நிருபங்கள் :** ரோமர் முதல் பிலமோன் வரை உள்ள 13 நிருபங்கள் பவுலின் நிருபங்கள் என அழைக்கப்படுகிறது. இவைகள் அப்போஸ்தலர் பவுலினால் எழுதப்பட்டது. இந்த நிருபங்கள் தனது மிஷனெரி பயணத்தின்போது சபைகளுக்கும் சுவிசேஷ ஊழியம்

செய்பவர்களுக்காகவும் எழுதினார். இதன் முக்கிய செய்தியானது கிறிஸ்தவத்தின் மதிப்பாகும். இதில் தெசலோனிக்கேயர் நிருபம் தான் முதலில் எழுதப்பட்டது. எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் போன்றவைகள் சிறை நிருபங்கள் எனப்படுகிறது.

**பொதுவான நிருபங்கள் :** எபிரெயர் முதல் யூதா வரையுள்ள 8 நிருபங்கள் பொதுவான நிருபங்கள் ஆகும். இவைகளும் பவுலின் நிருபத்தை போல நடைமுறை கிறிஸ்தவ மதிப்புகளை பற்றி பேசுகிறது.

**தீர்க்கதரிசன புத்தகங்கள் :** புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் வெளிப்படுத்தின விசேஷம் மட்டுமே தீர்க்கதரிசன புத்தகம் ஆகும். அப்போஸ்தலன் யோவான் பத்மு தீவுக்கு கடத்தப்பட்ட போது அங்கிருந்து கிபி 100 ல் எழுதப் பட்டது. இது கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் கடைசி நியாயத்தீர்ப்பு, சபை மகிமை அடைதல் போன்றவற்றைப் பற்றி போதிக்கிறது. இந்தப் புத்தகம், தரிசனங்கள் மற்றும் அடையாளங்களைப் பற்றிய புத்தகம் ஆகும்.

## முடிவுரை:

பழைய ஏற்பாட்டு சட்டங்கள் எந்த ஒரு ஆத்துமாவும் உடனடியாக கடைப் பிடிக்கக் கூடியது அல்ல. புதிய ஏற்பாட்டு மூலம் கிறிஸ்து நமது மனக் கண்களை திறந்து புதிய வழியை போதித்து உதவினால் ஒழிய நம்மால் முடியாது. பழைய ஏற்பாட்டில் வெளிப்படையான சட்டங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. புதிய ஏற்பாடு உள்ளான பரிசுத்தம் மற்றும் ஆவியின் படியும் உண்மையின் படியும் ஆராதிப்பதை வலியுறுத்துகிறது. (யோவான் 4:23) பழைய ஏற்பாடு எழுத 1500 ஆண்டுகளும் புதிய ஏற்பாடு எழுத 100 ஆண்டுகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டது. தேவனை அவருடைய வார்த்தைகளுக்காக நன்றி கூறுவோம்.

## கேள்விகள்:

1. பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் எத்தனை புத்தகங்கள் உள்ளது?
2. மேசியாவை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தது யார்?
3. புதிய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகள் என்ன?
4. நான்கு சுவிசேஷ புத்தகத்தில் இயேசு எவ்விதம் வர்ணிக்கபட்டுள்ளார்?
5. அப்போஸ்தல நடபடிகளில் வரும் இரண்டு முக்கிய அப்போஸ்தலர்கள் யார்?
6. பவுலினால் எழுதப்பட்ட முதல் நிருபத்தின் பெயர் என்ன?
7. வெளிப்படுத்தின விசேஷம் எப்படி எங்கு எப்போது எழுதப்பட்டது?
8. புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகத்தின் முக்கிய தலைப்புகள் என்ன?

## பாடம் 6
# தெய்வீக ஆண்டுகள்

***வேதபாகம் :*** சங்கீதம் 89:1-52.

***மனப்பாட வசனம் :*** இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (ஆமோஸ் 8:11)

***நோக்கம் :*** தேவன் ஒவ்வொரு நிகழ்வையும் தமது திட்டத்திற்கு ஏற்ப கட்டுப்படுத்தினார். அப்படியே இந்த அமைதி ஆண்டுகளிலும் தேவன் செயல்பட்டார் என்பதை பிள்ளைகள் அறியச் செய்தல்.



*முன்னுரை:*

பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமாகிய மல்கியாவிற்கும் கிறிஸ்துவின் பிறப்பிற்கும் இடையே அமைதியின் ஆண்டுகள் என்று அழைக்கப்படுகிற 400 ஆண்டுகள் இடைவெளி இருந்தது. மல்கியா பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி ஆவார். இதற்கு பின்பு எந்த தீர்க்கதரிசனமும் தெய்வீக வெளிப்பாடும் உண்டாகவில்லை. இந்த காலகட்டம் மௌன நூற்றாண்டுகள் என்றும் அழைக்கப்படுகிறது. இது வனாந்திரத்தில் சத்தமிட்ட யோவான் ஸ்நானன் மற்றும் இயேசு பிறப்பினால் உடைந்தது. பழைய ஏற்பாடு மல்கியாவுடன் முடியவில்லை, நெகேமியாவுடன்

முடிகிறது. தேவன் நூற்றாண்டுகளுக்குப் பின்பாக இருந்து மறைவாக தனது செயல்களை செய்து வந்தார். தேவன் வரப்போகிற மேசியாவிற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக ராஜாக்களையும் அதிகாரிகளையும் ஏற்படுத்தியும் கவிழ்த்தும் போட்டார். யூதேயாவை பெர்சிய சாம்ராஜ்யம் ஆண்டு வந்தது. பின்பு வீழ்ச்சி அடைந்தது. அதன் பின்பு கிரேக்க சாம்ராஜ்யம் யூதேயாவை ஆண்டு பின்பு அழிந்தது. இறுதியாக ரோம சாம்ராஜ்யம் எழுந்தது. இவர்களின் ஆட்சி காலத்தில் வாக்குப்பண்ணப்பட்டபடி மேசியா பிறந்தார்.

**பாட விளக்கம்:**

- **பெர்சிய பேரரசு**

(710-250 கி.மு) ஏறக்குறைய அமைதியின் ஆண்டுகளுக்கு 600 வருடங்களுக்கு முன்பு யூதர்கள் பாபிலோனால் சிறைபிடிக்கப்பட்டனர். பெர்சிய மன்னன் கோரேஸ் சிறையிருப்பின் 70 ஆம் ஆண்டில் யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல அனுமதியளித்தார். பின்பு யூதர்கள் பெர்சிய ராஜாவான 3ம் அர்தசஷ்டாவின் காலத்தில் அவர்களை எதிர்த்து புரட்சி செய்தனர். (நெகேமியா 2:1, எஸ்தர் 1:1)

- **மகா அலெக்ஸாண்டர் மற்றும் கிரேக்க பேரரசு**

கிமு 333 ல் பெர்சியாவை கைப்பற்றினார் அத்துடன் எகிப்து மற்றும் பாலஸ்தீன கிரேக்க பேரரசுடன் இணைத்தார். பின்னர் பாலஸ்தீனம் கிரீஸின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அலெக்சாண்டரின் நோக்கம் 2 ஆக இருந்தது. முழு உலகத்தையும் கைப்பற்றவேண்டும். கிரேக்க கலாச்சாரத்தையும் மொழியையும் எங்கும் பரப்ப வேண்டும். அலெக்சாண்டர் யூதர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். தனது 33 வயதிலேயே பாபிலோனில் மரித்தார். அலெக்சாண்டர் மரணத்திற்குப் பிறகு கிரேக்க பேரரசு சிறிய ஆசியா, மெசபதோமியா, எகிப்து மற்றும் சிரியா என நான்கு பகுதிகளாக பிளவுபட்டது. அவருடைய ராணுவ தளபதிகளான லிசி மாக்கஸ், கஸாண்டர், தாலமி, செலுக்கஸ் அதன் ஆளுநர்களாக மாறினார்கள். இதனால் கிரேக்க சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்தது.

- **தாலமிகள்**

கி.மு 320 தாலமி முதலாவதாக எருசலேமைக் கைப்பற்றினர். அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த யூதர்கள் தாலமி 5 ன் கீழ் (பிலதெல்பியா) பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பின் ஆயத்த வேலைகளை செய்தனர். பிற்காலத்தில் இது செப்து வஜிந்த் என்று அழைக்கப்படுகிறது. யூதர்களின் தாலமியின் கீழ் செல்வாக்குடன் வாழ்ந்தனர்.

• **செலுக்கஸ்**

சிரியாவை ஆண்டவர்கள் செலுக்கஸ் ஆவார்கள். இவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் தங்கள் பெயருடன் சேர்த்து செலுக்கஸ் ஆண்டி யோகஸ் என்று அழைத்தனர். ஆரண்டிஸ் நதிக்கரையில் இருந்த அந்தியோகியாவை ஆண்டனர். தாலமிகள் யூதர்களுடன் மென்மையான போக்கும் செலுக்கியர்களிடம் பிடிவாதமான போக்கும் கிரேக்க கலாச்சாரத்தை யூதர்கள் மீது திணிக்கிறதாக காணப்பட்டது.

• **ஆண்டியோகஸ் எபிபேனஸ்**

அந்தியோக்கியாவை ஆண்ட நான்காவது ஆண்டியோகஸ் ஆட்சியாளர் (கி.மு 175 முதல் 164-ல் யூதர்களை மிகவும் அதிகமாய் சித்திரவதை செய்தார். கி.மு 168-ல் எருசலேம் தேவாலய பலிபீடத்தில் பன்றியைப் பலி செலுத்தினான். வேதாகம பிரதிகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. யூதர்கள் விருத்த சேதனம் செய்வது போன்ற உரிமைகள் கூட தடை செய்யப்பட்டது. தேவனுடைய ஆலயத்தில் ஜீப்பிட்டருக்கு ஒரு பலிபீடமும் கிரேக்க கடவுளாகிய சூயஸ்க்கு ஆராதனைகளும் நடைபெற்றன. யூதர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு வரும்படி கட்டாயப்படுத்தப்பட்டு கொடிய உபத்திரவத்திற்கு ஆளாகினர். ஆஸ்மோனியன் வழிவந்த மத்தியா என்ற ஆசாரியன் யூதர்களை வலிமையாக தலைமையேற்று நடத்தினார்.

• **மக்கபேயர்கள்**

மக்கபேயர்கள் என்பவர்கள் கி.மு 166-ல் யூதர்களை உபத்திரவம் படுத்தினர். ஆண்டி யோகஸ் எபிபனேஸ்க்கு எதிர்த்துப் போராடிய தலைவர்கள். இவரது 5 மகன்கள் யூதா, யோனத்தான், சீமோன், யோவான் மற்றும் எலியேசர். இவர்கள் இணைந்து கி.மு 166 ல் ஆண்டியோகஸை எதிர்த்து சிரிய படையை தோற்கடித்தது. ஹேம்மர் என்று அழைக்கப்படுகிற யூதா மக்கபேயர் தலைமையில் வெற்றியை பிரகடனம் செய்தனர். அவன் எருசலேம் தேவாலயத்தை சுத்திகரித்து மீண்டும் பிரதிஷ்டை செய்தான். இவர்கள் பாலஸ்தீனத்தில் கி.மு 166 முதல் 63 வரை ஆண்டனர். சீமோன் மக்கபேயர் பிரதான ஆசாரியனாக, ராணுவ தளபதி, ஆளுநராக மாறினார். மக்கபேயர் குடும்பங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக யூதர்களின் அரசியல் சுதந்திரமும் ஆவிக்குரிய வைராக்கியமும் வீழ்ச்சியுற்றது. கி.மு 63 ல் ரோம ஆட்சியாளர் பாம்பி எருசலேமைக் கைப்பற்றினார்.

• **ரோம பேரரசும் மகா ஏரோது**

கி.மு 146 முதல் ரோமபேரரசு ஆட்சியைப் பிடித்தது. ஜூலியஸ் சீசர் மற்றும் அகஸ்டஸ் சீசர் கி.மு 63 முதல் 3 வரை பாம்பியின் இடத்தை கைப்பற்றினார். இயேசு பிறந்தபோது ரோமப் பேரரசன்

அகஸ்டஸ் சீசர் என்பவர் ஆண்டு கொண்டிருந்தார். இயேசு பிறந்த சில நாட்களுக்குப் பின்பு இவர் இறந்துவிட்டார். (லூக் 2:1 - 7 மத்தேயு 2:20) ஏரோது யூதர்களின் ராஜாவாக அழைக்கப்பட்டார். இயேசு யூதர்களுக்கு ராஜாவாக பிறந்து அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த ஏரோதை தள்ளினார். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட மௌனத்தின் நாட்கள் ஏரோதின் மரணத்தில் முடிந்தது. யோவான் ஸ்நானகன் மேசியாவை பற்றிய தனது செய்தியினால் இந்த மௌனத்தை கலைத்தார்.

**கேள்விகள்:**

1. அமைதியின் காலம் என்றால் என்ன?
2. மேற்கண்ட இந்த காலத்தில் காணப்பட்ட பேரரசுகள் என்னென்ன?
3. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து யூதர்களுக்கு திரும்பிச் செல்ல அனுமதி அளித்தது யார்?
4. அலெக்சாண்டரின் இரண்டு நோக்கங்கள் என்ன?
5. மகா அலெக்சாண்டரின் மரணத்திற்கு பின்பு கிரேக்க பேரரசில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
6. டாலமிஸ் மற்றும் ஆண்டிகஸ் எபிபனேஸ் யூதர்களிடம் எவ்விதம் நடந்து கொண்டனர்?
7. மத்தாதியாய் என்பவர் யார்?
8. அமைதியின் நாட்கள் யாரால் எப்பொழுது உடைக்கப்பட்டது?
9. இயேசுவின் பிறப்பின் போது பாலஸ்தீனத்தை ஆண்ட ரோமப் பேரரசன் யார்?

## பாடம் 7

# இயேசுவின் பிறப்பு முன் அறிவிக்கப்படுதல்

***வேதபாகம் :*** ஏசாயா 9:2-8 மத்தேயு 1:18-25; லூக்கா 1:26-38.

***மனப்பாட வசனம் :*** நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும். (ஏசாயா 9:6).

***நோக்கம் :*** விழுந்துபோன மனுக்குலத்திற்கு தேவனின் இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி மாணவர்கள் புரிந்து கொள்ளுதல்.



**முன்னுரை:**

ஏசாயா 9:2-9 ல் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை பற்றிய ஒரு அழகான தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலர் பெரும் பிரச்சினையில் இருக்கும் போது ஒரு ரட்சகனுக்காக தவித்துக் கொண்டிருந்தனர். அந்நேரம் தேவன் அவர்களுக்கு மேசியாவை பற்றி வாக்குத்தத்தத்தை கூறி நம்பிக்கையூட்டினார்.

மத்தேயு 1:18-25 ல் ஒரு மனிதன் மூலமும் லூக்கா 1:26-39 ல் ஒரு பெண்ணின் மூலமும் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது.

**பாட விளக்கம்:**

**1. தேவன் நமது ஜனங்களை ஆசீர்வதிக்கிறார். (ஆதி 3:15)**

மனிதனின் பாவத்திற்கு பின்பு தேவன் அவர்களை மிகுந்த மனவேதனையுடன் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றினார். ஏதேன் தோட்டத்தில் மனுஷன் அனுபவித்த பரலோக சந்தோஷத்தை சாத்தான் எடுத்துப் போட்டான். இருப்பினும் தேவன் ஒரு வாக்குத்தத்தத்தை வழங்கினார் (ஆதியாகமம் 3:15). இழந்த பரலோக மேன்மையை ஒரு குழந்தையின் மூலம் மீண்டும் தருவதாகக் கூறினார்.

**2. காத்திருந்த மக்கள்:**

இஸ்ரவேல் மக்கள் மேசியாவை பற்றிய வாக்குத்தத்தத்தை பெற்றிருந்த போதும் பல்வேறு சூழ்நிலைகளில் மிக கொடுமையாக துன்பப்பட்டார்கள். எகிப்திய அரசன் பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேசரால் அடிமைத்தனத்திலும் சிறை இருப்பிலும் ஒடுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட துன்பத்திலும் அவர்களுக்கு மேசியா வந்து நம்மை இரட்சிப்பார் என்ற வாக்குத்தத்தத்தை அதிகம் நினைத்து நம்பிக்கையோடு காத்திருந்தனர்.

**3. பல்வேறு மீட்பர்கள்:**

இஸ்ரவேலர்களை அநேக ராஜாக்கள் ஆண்டனர். சில ராஜாக்கள் ஜனங்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கினர். ஆனால் தாவீது ராஜா நாட்கள் பொற்காலமாக இருந்தது. தாவீது ராஜா மிகப்பெரிய வல்லமையுள்ள ராஜாவாக இருந்தார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஆட்சியை விட மிகவும் அதிகமாக இருந்தது. மேசியாவை பற்றி ஆலோசனைகர்த்தா வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா சமாதான பிரபு என்று கூறியிருந்தார்.

**4.தேவனின் தனித்துவம் உள்ள பாதை:**

ஜனங்கள் மேசியாவை ஒரு தலைவராக அரச குடும்பத்தில் தோன்றுவார் என எதிர்பார்த்து இருந்தனர். அவர்களின் கணிப்புகளுக்கு எதிராக சாதாரண குடும்பத்தில் இயேசு ராஜா பிறந்தார். இது அவர்களுக்குள் குழப்பத்தைத் உண்டாக்கியது.

**5. தெய்வீக திட்டத்திற்கு யோசேப்பும் மரியாளும் தேர்ந்தெடுக்கப்படுதல்:**

யோசேப்பு ஒரு நல்ல இளைஞன். மரியாளும் ஏழ்மை குடும்பத்தை சேர்ந்த அழகான பெண். அவர்கள் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றிருந்தது. தங்கள் திருமணத்திற்காக காத்திருந்தனர்.

அப்படிப்பட்ட நாட்களில் தேவன் மரியாளுடன் பேசி அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாள் என்று கூறினார். ஆரம்பத்தில் தயங்கினாலும் தேவனுடைய திட்டத்திற்கு “இதோ நான் என் ஆண்டவருக்கு அடிமை” (லூக்கா1:38) என்று கூறி அர்ப்பணித்தாள்.

மரியாள் கர்ப்பவதியானதை கேள்விப்பட்ட யோசேப்பு தான் நீதிமானாய்

இருந்ததினால் அவளை ரகசியமாய் தள்ளிவிட நினைத்தார்.(மத்தேயு1:20) தேவனுடைய திட்டங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. யோசேப்பும் இந்த தேவனுடைய திட்டம் மரியாளிடத்தில் நிறைவேறுவதை ஏற்றுக்கொண்டார். மனுக்குலத்திற்கு தேவன் செய்ய உள்ள இரட்சிப்பின் திட்டத்திற்கு இவர்கள் இருவரும் தங்களை அர்ப்பணித்தனர்.

**முடிவுரை:**

இஸ்ரவேலின் மீட்பிற்கு நேராய் தேவன் தீர்க்கதரிசிகளையும், நியாயாதிபதிகளையும், ராஜாக்களையும் நடத்தினார். இவர்கள் இதனை முழுமையாய் செய்யாதபடியினால் தேவன் தாமே ஒரு கன்னிகை மூலம் பூமியில் பிறக்க விரும்பினார். இந்த கிறிஸ்துவின் எளிய பிறப்பு, தேவனுடைய இரட்சிப்பின் திட்டம், தேவன் நம்மை நேசித்ததால் இதை செய்தார். அவரது பிள்ளைகளாக இருக்க விரும்புகிறார். அவரது திட்டத்தின் நமது பங்களிப்பை நாம் நிறைவேற்ற வேண்டும் (மீண்டும் மனப்பாட வசனத்தை சொல்ல வைத்து ஜெபித்து முடிக்கவும்).

**கேள்விகள்**

1. இஸ்ரவேலர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தது யார்?
2. தாவீதின் காலத்தை பொற்காலம் என்று ஏன் அழைக்கிறோம்?
3. தாவீதைவிட பெரிய ராஜா யார். அவருடைய சிறப்புகள் என்ன?
4. கிறிஸ்துவின் பிறப்பு ஜனங்களுக்குள்ளே எவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்தியது?
5. சாதாரண மக்களாகிய யோசேப்பும் மரியாளும் தெய்வீக திட்டத்திற்கு தங்களை அர்ப்பணித்தது எப்படி?
6. தேவன் தமது தெய்வீக சேவைக்கு உன்னை அழைப்பார் என்றால் நீ அதற்கு அர்ப்பணிப்பாயா?

பாடம் 8

# இதோ! எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம்

***வேதபாகம் :*** மத்தேயு 2:1-23 லூக்கா 2:1 -38 யோவான் 1:1-14.

***மனப்பாட வசனம் :*** அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோவான் 1:11,12)

***நோக்கம் :*** தேவன் உண்மையுள்ளவர் என்பதை புரிந்து கொள்ளுதல்.



## முன்னுரை:

இஸ்ரவேலர்கள் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளை புறக்கணித் தனர். தேவன் அவர்களை மீட்பதற்கு தமது சொந்த குமாரனை பலியா கும்படி செய்தார். தமது குமாரனை ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படி அருள் செய்திருக்கிறார். ஆம் அவருடைய பிறப்பு எல்லோருக்கும் பெரிய சந்தோஷமாகும்.

## பாட விளக்கம்:

### 1) முன்னணை பாலகன்:

மேசியாவின் பிறப்பைப் பற்றி ஜனங்கள் பல்வேறு சொந்த கற்பனைகளை கொண்டிருந்தனர். அவருடைய பிறப்பானது ராஜரீகமான, மகிமையான மற்றும் ஆடம்பரமாக இருக்கும் என நினைத்தார்கள்.

ஆனால் மேசியாவின் பிறப்பு வித்தியாசமாக இருந்தது. அவர்களுடைய ராஜா முன்னணையில் துணிகளால் சுற்றப்பட்டு கிடத்தப்பட்டிருந்தார். அநேகர் அவரை அடையாளம் காணவோ அங்கீகரிக்கவும் முடியாமல் போனது.

### 2) எதிர்ப்புகள்:

இயேசுவின் பிறப்பு ஏரோது மற்றும் முழு எருசலேமிற்கும் கலக்கத்தை உண்டாக்கியது. ஏரோது அவரைக் கொலைசெய்ய தேடினான் (மத் 2:13). அவருடைய வயதிலிருந்த அனைத்து பிள்ளைகளையும் கொலை செய்ய கட்டளையிட்டான் (மத் 2:16).

### 3) ஞானிகள்:

ஞானிகள் மற்றும் வல்லுனர்களின் ஞானம் அவர்களுக்கு உதவவில்லை. அது அவர்களை தவறாக நடத்தியது. அவர்கள் இயேசுவை ஒரு சாதாரண ஸ்திரியின் மகனாக முன்னணையில் தேடாமல் ஏரோதின் அரண்மனைக்குச் சென்று தேடினர். ஏரோது ராஜாவும் உதவவில்லை தேவனால் படைக்கப்பட்ட நட்சத்திரம் ஞானிகளை வழிநடத்தியது. அவர்கள் இயேசுவை ராஜாவாக புரிந்து கொண்டனர். அவர்கள் பிள்ளையைக் கண்டு பணிந்து வணங்கி தங்கள் பரிசுகளை கொடுத்தனர் (மத் 2:11). வேறு வழியாக தங்கள் ஊருக்கு திரும்பிச் சென்றனர்.

### 4) யோசேப்பு மற்றும் மரியாள்:

இவர்கள் இருவரும் தேவதூதன் தங்களுக்கு சொன்ன அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கிற குமாரனை மரியாள் பெற்றெடுப்பாள் என்ற வார்த்தையை நம்பினார்கள்.

### 5) மேய்ப்பர்கள்:

கிறிஸ்துவின் பிறப்பாகிய நற்செய்தியை பரலோக தூதர்கள் மேய்ப்பர்களிடம் சென்று “எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷம்” என்று கூறினார்கள். அவர்கள் பெத்லகேமிற்கு சென்று பிள்ளையை பார்க்கும்படி தெரிவிக்கப்பட்டது. அவர்களும் அப்படியே சென்று பிள்ளையை கண்டு பணிந்து கொண்டனர்.

### 6) சிமியோன்:

இயேசுவை அறிந்து கொண்ட மனிதர்களில் சிமியோனும் ஒருவர். இவர் ஒரு தீர்க்கதரிசியும் ஆசாரியனும் இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருந்தவரும் ஆவார் (லூக்கா 2:25). ஆண்டவராகிய இயேசுவை காணும் முன் மரிப்பதில்லை என்று தேவன் அவருக்கு வாக்கு பண்ணியிருந்தார். இந்த நம்பிக்கையுடன் எதிர்பார்ப்புடன் சிமியோன் வாழ்ந்து வந்தார். நீங்களும் கூட உங்கள் எதிர்காலத்தைப் பற்றிய பல நம்பிக்கையுடன் இருப்பீர்கள். பெரிய படிப்புகளைப் படிக்க வேண்டும், வீட்டை கட்டவேண்டும். விளையாட்டுத்துறையில் பெயர் பெற வேண்டும்

இது போன்ற கனவுகள் இருக்கலாம். உங்கள் லட்சியம் நிறைவேறும் வரை நம்பிக்கையை விட்டுவிட வேண்டாம். சிமியோன் நம்பிக்கையையோ மேசியாவை பற்றியது. நமது சில நம்பிக்கைகள் உலக வாழ்வைப் பற்றியது. சிமியோனின் நம்பிக்கையை தேவன் நிறைவேற்றினார். சிமியோன் தேவ ஆவியினால் நடத்தப்பட்டு ஆலயத்திற்கு வந்தார். அப்போது இயேசுவின் பெற்றோர்கள் அவரை கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவரை கண்டு ஆவியில் நிரப்பப்பட்டு அவர் தேவ குமாரன் என்று உணர்ந்து (லூக் 2.32) புறஜாதிகளுக்கு ஒளியாகவும் எல்லா ஜனத்திற்கும் இரட்சிப்பையும் தருவார் என்று கூறினார்.

### 7) தீர்க்கதரிசியாகிய அன்னாள்:

அன்னாள் தனது 84 ஆவது வயதில் தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் ஜெபம் பண்ணி உபவாசம் செய்து ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் இயேசுவைக் கண்டு இவர் எருசலேமை மீட்கப் போகிறவர் என்று சொல்லி தேவனை துதித்தாள்.

### முடிவுரை:

இயேசு முன்னணையில் பிறந்தாலும் ராஜாவும் அனைவருக்கும் இரட்சகராகவும் பிறந்தார். மேய்ப்பர்கள்போல எளியவர்களுக்கும் வல்லுநர்கள் போல ஞானிகளுக்கும் சிமியோன் அன்னாள் போன்ற அனைவருக்கும் இரட்சகராக பிறந்தார்.

கிறிஸ்துவின் பிறப்பு இரட்சகரின் பிறப்பாகும். ஒருவரின் பிறப்பு எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகிறது. அவரின் பிறப்பின்போது அவருக்குச் சொந்தமானவர்கள் கூட ஏற்காமல் இருப்பினும் இப்போது ஆயிரம் ஆயிரமானவர்கள் அவரை இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொண்டுள்ளனர். (மனப்பாட வசனத்தை கூறவும்)

### கேள்விகள்:

1) முன்னணையில் பிறந்த குழந்தையை ராஜாவாக அங்கீகரிக்க யூதர்கள் தயங்கியது ஏன்?
2) இயேசுவின் பிறப்பைப் பற்றி ஏரோது பயந்தது ஏன்?
3) ஞானிகள் அளித்த பரிசுகளின் முக்கியத்துவத்தை விவரி.
4) தேவ தூதர்கள் மேய்ப்பர்களிடம் கூறியது என்ன?
5) சிமியோன் கொண்டிருந்த தனித்தன்மை உள்ள நோக்கமென்ன?
6) இயேசு எங்கு பிறந்தார். அந்த நேரம் ஆட்சி செய்த ராஜா யார்?

### செயல்திட்டம்:

உனது வீட்டில் அல்லது ஊரில் ஒரு கிறிஸ்துமஸ் விழாவை ஏற்பாடு செய்து ஒரு நாள் மாலையில் கிறிஸ்துவைப் பற்றி தெரியாத நண்பர்களை அழைத்து அவர்களுக்கு கிறிஸ்மஸ் முக்கியத்தையும் அவர் மூலம் வரும் இரட்சிப்பையும் பற்றி பகிர்ந்துகொள்ள திட்டமிடு.

## பாடம் 9

# இயேசு வாழ்விடத்தின் முக்கியத்துவங்கள்

***வேதபாகம் :*** மத்தேயு 4:12-15; லூக்கா 8:26.

***மனப்பாட வசனம் :*** பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. (சங்கீதம் 24:1)

***நோக்கம் :*** எருசலேம், கலிலேயா, பாலஸ்தீனம் போன்ற இடங்கள் கற்பனையினால் உருவாக்கப்பட்ட இடங்கள் அல்ல. அவைகள் பூமியின் மத்தியில் அமைந்துள்ள இடங்கள் ஆகும். நாம் சென்று அந்த இடங்களை சுற்றிப் பார்க்கவும் முடியும் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.




### முன்னுரை:

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரவேல் தேசமானது பூமியின் மையப்பகுதியில் ஆசிய கண்டத்தின் பெரிய மேற்குக் கரைப் பகுதியில் மத்தியதரைக் கடலின் காலநிலையை கொண்ட பகுதியாகும். பூமியில் உள்ள எவரும் எளிதில் சென்று வரக்கூடிய பகுதியாகும்.

### பாட விளக்கம்:

### 1. பூலோக அமைப்பு

இந்த பாலஸ்தீனம் நிலநடுக்கோட்டிற்கு வடக்கில் 30-33 டிகிரியிலும் கிழக்குத் தீர்க்க ரேகை 35 டிகிரியிலும் அமைந்துள்ளது. யோர்தான் நதி வடக்கிலிருந்து தெற்காக பாய்கிறது. இது நாட்டிற்குள்ளேயே பாய்கின்ற நதியாகும். இது வேறு நதிகளிலோ,

கடலிலோ கலப்பதில்லை. கலிலேயா கடல் என்ற ஏரியும் இதில் உள்ளது. இஸ்ரவேல் தேச வரைபடத்தில் வடக்கு தெற்காக 260 கிமீ குறுக்காக 156 கிமீ அளவும் கொண்டது. இது மேற்கில் மத்தியதரைக் கடலும் தெற்கில் சீனாய் வனாந்தரத்தாலும் கிழக்கே யோர்தான் நதியாலும் வடக்கில் சிரியவாலும் சூழப்பட்டுள்ளது. வடக்கில் செங்கடல் வரை செல்ல எலாட் துறைமுகமும் மத்திய தரைக்கடல் பகுதியில் ஹாய்பா துறைமுகமும் முக்கியமானதாகும்.

## 2. காலநிலை:

மத்தியதரைக்கடல் காலநிலை ஆகும். குளிர்காலத்தில் மழையும் கோடைகாலத்தில் தெளிவான வானமும் காணப்படும். திராட்சை (எண் 13:23) ஆரஞ்சு போன்றவைகள் அதிகமாக வளர்கின்றன. ஒலிவமரம், கேதுரு மற்றும் தேவதாரு மரங்கள் சாதாரணமாக காணப்படுகின்றன.

## 3. விவசாயம் மற்றும் தொழில் துறைகள்:

கோதுமை, கேழ்வரகு போன்றவை வியாபாரத்திற்காக அதிகம் பயிரிடப்படுகின்றன. செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் மற்றும் பலவகை மாடுகள் புதிய தொழில்நுட்பத்துடன் வளர்க்கப்படுகின்றன. பெட்ரோலும் இங்கு பிரித்தெடுக்கப்படுகிறது. கடலில் இருந்து ஏராளமான உப்புகள் உரங்கள் எடுக்கப்படுகிறது. வேதாகம இடங்களை பார்க்க அநேக மக்கள் வருவதாலும் நல்ல வருவாய் கிடைக்கிறது.

## 4. மக்கள் தொகையும் வாழ்க்கைமுறையும்:

கி.பி 2002 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 6,029,529 பேர்கள் உள்ளனர். யூதர்கள் மற்றும் அரேபியர்கள் கலந்து வாழ்கின்றனர். அரேபியர்கள் அண்டை நாடுகளிலிருந்து வேலைக்காக வந்துள்ளனர்.

## 5. வரலாற்று பின்னணி:

கர்த்தருடைய தூதனானவர் யாக்கோபை சந்தித்தபின் வழங்கப் பட்ட புதிய பெயர் இஸ்ரவேல் ஆகும்.(ஆதி 32:28) இவர் ஆபிரகாமின் குமாரனான ஈசாக்கின் குமாரன். இவரின் 12 பிள்ளைகள் 12 கோத்திரங்களாக மாறி இஸ்ரவேலர்களாக சுதந்தரித்தார்கள். யோசுவா வின் தலைமையின் கீழ் பெலிஸ்த்தியா எனப்பட்ட பாலஸ்தீனத்தை பிடித்தார்கள். இதன் பின்பு சாலமோன் ராஜாவின் காலத்தில் ராஜ்யம் பிளவுபட்டு இஸ்ரவேல் - யூதா என இரண்டாகப் பிளவுபட்டது. இவர்கள் கர்த்தருக்கு உண்மை இல்லாமல் போனதாலும் இப்படி ஏற்பட்டது. பாலஸ்தீனம் என்ற பெயர் பெலிஸ்தியா பெயரில் இருந்து தோன்றியது. கி.மு 610இல் இஸ்ரவேலர்கள் பாபிலோனுக்கு சிறையாக கொண்டு போகப் பட்டார்கள். அப்பொழுது முதல் 2600 ஆண்டுகளாக தங்கள் சொந்த

தேசத்திற்கு திரும்பிச் செல்லும் கனவுடன் இருந்தனர். கி.பி 1917 இல் பிரிட்டன் வெளியுறவு அமைச்சரின் உறுதிமொழியின்படி கி.பி 1948இல் பாலஸ்தீனமும் அரேபிய பகுதியும் இணைந்து தனி தேசமாக அறிவிக்கப்பட்டது. இஸ்ரவேல் அரபு நாடுகளுடன் 1948, 1954, 1967 போன்ற ஆண்டுகளில் தனது நிலத்திற்காக போரிட்டது. இப்போது மிக வலிமையான தேசமாக மாறிவிட்டது. அத்திமரம் துளிர் விடும் என்று இயேசு சொன்னார் இஸ்ரவேல் அத்திமரம் என அழைக்கப்பட்டது. சாலமோன் ராஜா கட்டின ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கு முயற்சித்துக் கொண்டுள்ளனர்.

**முடிவுரை:**

இஸ்ரவேலின் அடையாள சின்னங்களை பாருங்கள். 7குத்துவிளக்கு, தாவீதின் நட்சத்திரம், அவர்களின் பழைய தலைநகர் எருசலேம், புதிய தலைநகர் டெல்ஆவிவ் (TelAviv) பாலஸ்தீனம் ஒரு ஜனநாயக அரசாக செயல்பட்டு வருகிறது.

**கேள்விகள்:**

1. உலக வரைபடத்தில் இஸ்ரவேல் தேசத்தை குறிக்கவும்.
2. இஸ்ரவேல் தேசம் அமைந்துள்ள அட்சரேகை மற்றும் தீர்க்கரேகையைப் பற்றி கூறு,
3. யோர்தான் நதி மற்றும் பிற நதிகளுக்கும் இடையில் உனக்குத் தெரிந்த வித்தியாசங்களை கூறு,
4. பாலஸ்தீனம் எந்த கண்டத்தில் அமைந்துள்ளது,
5. பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்ற வழங்கப்பட்டதின் பெயர் என்ன,
6. எப்பொழுது இஸ்ரவேல் தேசமாக மாறியது,
7. வேதாகம நிலங்களைப் பற்றிய படங்களை சேகரிக்கவும்.

பாடம் 10

# நாசரேத்தில் இயேசு

***வேதபாகம் :*** மத்தேயு 2:19-23; மாற்கு 6:3; லூக்கா 2:39-52.

***மனப்பாட வசனம் :*** நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம் பண்ணினான். நசரேயன் எனப்படுவார் என்று, தீர்க்கதரிசிகள் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத்தேயு 2:23)

***நோக்கம் :*** இயேசுவின் குழந்தைப் பருவம் மற்றும் மத பின்னணியை போதித்தல்.



**முன்னுரை:**

இயேசுவின் குழந்தை மற்றும் இளமைப் பருவத்தைப் பற்றி வேதாகமத்தில் அதிகமான தகவல்கள் இல்லை. அவர் குழந்தைப் பருவத்தில் நாசரேத்தில் இருந்தார் என தெரிகிறது. தனது 12வது வயதில் தனது பெற்றோர்களுடன் தேவாலயத்திற்கு போய்வந்தார். தனது 30 வயதில் ஞானஸ்நானம் பெற்று ஊழியத்திற்குள் நுழைந்தார். அவருடைய தந்தை ஒரு தச்சன். ஆகவே அவருக்கு உதவியாக இருந்திருப்பார்.

**பாட விளக்கம்:**

### 1. நாசரேத்து கிராமமும் அதன் வாழ்க்கையும்:

நாசரேத்து என்பது மலைகள் மேல் அமைந்துள்ள சிறிய கிராமம். அந்த கிராமம் அமைந்துள்ள மலைப் பகுதியில் நின்று பார்த்தால் மேற்கில் மத்தியதரைக் கடல் பகுதியும் கிழக்கில் கலிலேயா கடலும்

தெரியும். அருகில் பாலஸ்தீனத்திலிருந்து சிரியா பின்பு எகிப்திற்கு செல்லும் வாணிப பாதைகளும் உள்ளது. யூதர்களின் அநேக முக்கிய சரித்திர இடங்கள் நாசரேத்தில் உள்ளது.

## 2. வீடுகளின் அமைப்புகள்:

நாசரேத்தில் வீடுகள் சிறியதாகவும் உயரம் குறைவானதாகவும் தட்டையான கூரை உடையதாகவும் உள்ளது. மேல் தளத்திற்கு செல்ல படிகள் கட்டப்பட்டுள்ளது. சில வீடுகளில் ஒரே ஒரு அறை மட்டுமே உள்ளது. வீட்டில் உள்ள ஒரே அறையை மட்டும் 10 அங்குல உயரத்திற்கு ஓய்வெடுப்பதற்காக தரைவிரிப்புகள் போடப்பட்டு இருக்கும். வீட்டு உபயோகப் பொருட்கள் பெரிய பெட்டி, மேஜை, பாய்கள் மேலும் தரைவிரிப்புகள் போன்றவைகளாலும், ஜாடிகள், தண்ணீர் மற்றும் தானியங்களை சேகரிக்கவும். விளக்கு மற்றும் சமையல் பாத்திரங்கள் போன்றவை உள்ளன. அவர்களின் வீட்டின் பின்பக்கத்தில் ஆடு மாடுகளுக்கான கொட்டகை உண்டு. இவர்கள் மிகக் கட்டுப்பாடான குடும்ப உறவை உடையவர்கள். அவர்களின் வீடுகள் யூத மதகோட்பாடுகளை போதிக்கிற ஆரம்ப கால பயிற்சி மையமாக விளங்குகிறது. பிள்ளைகள் வேதவசனங்களை ஒருவர் சொல்ல திரும்ப சொல்லும் முறையிலேயே படிக்கின்றனர் (உபா 6:4,5,7). ஆண் சிறுவர்கள் குடும்ப ஜெபம் மதரீதியான வழிபாடுகள், வழக்கமான சடங்குகள், ஓய்வுகள், சட்டங்கள் போன்றவை வீட்டிலேயே பயிற்சி பெறுகின்றனர்.

## 3. ஜெப ஆலயங்களில் வழிபாடுகள்:

ஜெப ஆலயம் என்பது எருசலேம் சபை கிளையாக கருதப்படுகிறது. அதனை செவ்வக வடிவத்தில் கட்டினார்கள். அதன் ஒரு பக்கத்தில் உயர்ந்த மேடை பகுதியும் வேத வசனங்களை வைக்கும் மேஜையும் வைக்கப்பட்டது. வேத சுருள்களை வைக்கும் பெரிய பெட்டியும் உண்டு. பிரசங்கியார் உட்கார்ந்து கொண்டும் பேசலாம். மற்றவர்கள் நின்று கொண்டு கேட்பார்கள். ஆண்கள் முன்பாகவும் பெண்கள் பின்பாகவும் நிற்பார்கள்.

## 4. எருசலேம் தேவாலயம்:

மிகப்பிரமாண்டமாக நேர்த்தியாக பளிங்கு கற்களால் கட்டப்பட்டு சுவர்களும் மேற்கூரையும் சுத்த பொன்னால் மூடப்பட்டது. அங்கு பலிகள் செலுத்தப்படுவதும் மக்கள் கூட்டம் கூட்டமாக செல்வதும், வெள்ளியினால் செய்யப்பட்ட எக்காளங்கள் ஊதும் ஓசையும், அழகாக உடை அணிந்து உள்ள ஆசாரியர்களின் சடங்குகளும் பார்ப்பதற்கு மிக பரவசமாக இருக்கும். யூதர்கள் குறைந்தபட்சம் பஸ்கா பண்டிகை, புத்தாண்டு, அறுப்புக்கால பண்டிகை ஆகியவைகளில் கட்டாயம் ஆலயம் செல்வார்கள். தென்னிந்தியாவில் கேரள மாநிலம் கொச்சியில்

யூதர்களின் ஜெப ஆலயம் இன்றும் உள்ளது. முந்திய காலத்தில் குடியேறிய யூதர்களால் கட்டப்பட்டது.

**கேள்விகள்:**

1. நாசரேத் கிராமத்தைப் பற்றி கூறு.
2. நாசரேத் வீட்டின் அமைப்பைப் பற்றிக் கூறு.
3. ஜெப ஆலயம் என்றால் என்ன?
4. ஜெப ஆலயத்தில் உட்பகுதிகள் பற்றி கூறு?
5. இந்தியாவின் யூதர்களின் பழமையான ஜெப ஆலயம் எங்கு உள்ளது?

| |
|---|
| If God is your partner, make your plans BIG<br>*D L Moody* |

# கேள்வித்தாள் - 1

**மதிப்பெண்கள் : 50**

**I. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளி** (10 x 1 = 10)

1. உலகத்திலேயே பழமையான புத்தகம் எது?
2. டாபிப்லா என்பதன் பொருள் என்ன?
3. மறுமலர்ச்சியின் விடிவெள்ளி என்று அழைக்கப்படுவது யார்?
4. அப்போஸ்தலர் பவுலால் எத்தனை நிருபங்கள் எழுதப்பட்டது?
5. லத்தின் வல்கேட்டை தயாரித்தது யார்?
6. வேதாகமத்தை எழுதிட அதன் ஆசிரியர்கள் பயன்படுத்திய இடங்கள் எது?
7. இஸ்ரவேல் தேசத்தின் பொற்காலம் என அழைக்கப்படுவது யாருடைய காலம்?
8. இதோ இந்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று சொன்னது யார்?
9. பாலஸ்தீனம் அமைந்துள்ள கண்டம் எது?
10. கிபி 1811-ல் வெளியான ஆங்கில வேதாகமத்தின் பெயர் என்ன?

**II. ஏதாவது ஐந்திற்கு பதில் எழுதவும்** (5 x 5 = 25)

11. செப்துவஜிந் மொழிபெயர்ப்பின் பொருள் என்ன?
12. கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமத்தை உருவாக்கியது யார்?
13. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் குழந்தை இயேசுவிற்கு கொடுத்தது என்ன?
14. அமைதியின் ஆண்டுகள் என்றால் என்ன, இதனை உடைத்தெறிந்தவர் யார்?
15. இயேசுவின் பிறப்பைப் பற்றி கூறு.
16. ஹிந்தி வேதாகம மொழிபெயர்ப்பில் வில்லியம் மற்றும் ஒய். டி டிவாரி-யின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது?

**III. இந்த காலாண்டில் நீங்கள் படித்த 5 மனப்பாட வசனங்களை எழுதுக.** (1 x 5 = 5)

**IV.** பழைய ஏற்பாடு எப்படி பிரிக்கப்படுகிறது, முதல் ஐந்து புத்தகங்களை எழுதியது யார்? (1 x 5 = 5)

**V.** பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களையும் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களும் வரிசையாக எழுதுக. (1 x 5 = 5)

# காலாண்டு II

# இயேசுவின் இளமை வாழ்க்கையும் போதனைகளும்

## பாடம் 11

## எருசலேம் தேவாலயத்தில் இயேசு

***வேதபாகம் :*** மாற்கு 6:3; லூக்கா 2:39-52.

***மனப்பாட வசனம் :*** இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக்கா 2:52)

***நோக்கம் :*** பிள்ளைகள் இயேசுவைப் போல் வளரவேண்டும்.



**பாட விளக்கம்:**

**1. இயேசு எருசலேமிற்கு செல்லுதல்:**

சிறுபிள்ளையாக இயேசு எகிப்தை விட்டு நாசரேத் வந்தார். இப்போது அவருடைய வயது 12. இந்த பன்னிரண்டாவது வயதில் ஒரு யூத ஆண்மகன் நியாயப்பிரமாண சட்டத்தின் மகனாக மாறிவிடுகிறான். அதன்படி அவைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இந்த வயதில் தங்கள் மகன்களை தேவாலயத்திற்கு பண்டிகைகளுக்கும் அழைத்துச் செல்வது பெற்றோர்களின் வழக்கம் மற்றும் மகிழ்ச்சியாகும்.

அதன்படி இயேசுவிற்கு எருசலேம் செல்லும் வாய்ப்பு வந்தது.

### 2. நாசரேத்திலிருந்து எருசலேமிற்கு பயணம்:

நாசரேத்திலிருந்து எருசலேம் செல்ல ஏழு நாட்கள் ஆகும். இது இயேசுவின் முதலாவது எருசலேம் பயணமாக இருந்திருக்க வேண்டும். இந்த நாட்களுக்கு தேவாலயத்தில் செய்யவேண்டிய வழக்கமான சடங்குகளை பற்றிய அறிவை இயேசு பெற்றிருந்தார். பெற்றோர்கள் கருத்துடன் இதனை போதிப்பார்கள். யூதர்கள் தங்கள் கிராமங்களில் உள்ள ஜெப ஆலயங்களில் ஆராதனைகள் செய்துகொண்டிருந்தனர். இருப்பினும் எருசலேமுக்குச் சென்று வழிபடுவதே சந்தோஷமும் திருப்தியானதாக நினைத்தனர். ஜெப ஆலயங்களில் ஜெபம் மற்றும் போதனைகள் மட்டுமே வழங்கப்பட்டது. பலிகள் செலுத்தப்படாது. ஒரு சிறுவன் தனது 12 வயதை அடைந்த பின் பிற ஆண்களுடன் சேர்ந்து மத சடங்குகளில் ஈடுபடலாம். இயேசு இந்த எருசலேம் பயணத்தை விரும்பினார்.

### 3. எருசலேமின் போதகர்களை பிரமிக்கவைத்தல்:

எருசலேமிற்கு நாசரேத்தில் இருந்து திரும்பி வரும்போது இயேசு தங்களுடன் இருப்பதாகவே அவருடைய பெற்றோர்கள் நினைத்தனர். ஆனால் இயேசுவோ எருசலேமிலேயே இருந்துவிட்டார். எருசலேம் தேவாலயத்தில் சம்பந்தமுடைய நிகழ்வுகளைப் பார்த்து கவரப்பட்டார். மரியாளும் யோசேப்பும் இயேசுவை தேடிக்கொண்டு எருசலேமுக்குத் வந்துவிட்டனர்.

எல்லோரும் வேடிக்கை பார்க்கும் இடங்களில் இயேசு இருப்பார் என்று எண்ணி தேடினர். தேடியும் கிடைக்கவில்லை. அதற்கு பதிலாக ஆலய போதகர்கள் நடுவில் இயேசு உட்கார்ந்துகொண்டு கேள்விகள் கேட்பதையும் பதில்களை சொல்வதையும் பார்த்தார்கள். அவர்கள் வியந்து போகும் வண்ணம் இயேசு தனது ஞானத்தையும் அறிவையும் வெளிப்படுத்தினார். வேத பண்டிதர்களை ஆச்சரியப்பட வைத்த இந்த சிறுவன் யார். இந்த ஞானம் அவருக்கு ஒரு நாளிலோ ஒரு வாரத்திலோ கிடைக்கவில்லை. தனது சிறுவயதிலிருந்தே பயிற்சி பெற்று வந்தார். பெற்றோர்களின் ஊக்கமான பயிற்சி ஜெப ஆலயங்களில் பெற்ற அனுபவங்கள் அவரிடத்தில் இருந்தது.

இயேசு மன வலிமையோடு கூட அவருடைய பெற்றோர் அவரை விட்டு விட்டுச் சென்ற போதும் குழம்பிப் போகாமல் கவலைப்படாமல் இருக்கும் படி உடல் வலிமையையும் பெற்றிருந்தார். இயேசு தமது பெற்றோர்களை பார்த்து என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்று கேட்டதில் இருந்து இயேசு நல்ல ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்தார் என்பதை நிச்சயம் கூறமுடியும். 12

வயதில் இத்தகைய வளர்ச்சி அடைந்த இவரை நமக்கு ஒரு முன் மாதிரியாக வைக்க வேண்டும். சிறுவர் பள்ளி பாடங்கள் நாம் இவ்விதம் வளர நமக்கு உதவி செய்கிறது.

**4. இயேசு அதிகதிகமாய் விருத்தியடைந்தார்:**

இயேசு 12-30 வயது வரை பெரும்பாலான காரியங்களை வேதாகமம் கூறவில்லை. இந்த இரண்டு குறிப்புகள் போதுமானதாக உள்ளது. இயேசு தமது பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார். (லூக்கா 2:51). ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமாய் வளர்ந்தார். (லூக்கா 2:52). இயேசுவின் வளர்ச்சி சுமாராக அல்ல ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. இயேசுவின் 12 வது மற்றும் முப்பதாவது வயது சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவரது வயதிற்குரிய வளர்ச்சிகளை பெற்றிருப்பது கடினமானது அல்ல.

**5. இயேசு குடும்ப பொறுப்புகளை வகித்தார்:**

இயேசுவின் 12 வது வயதிற்கு பின்பு யோசேப்பை பற்றி எந்த குறிப்புகளும் இல்லை. யோசேப்பு உயிரோடு இருந்தாரா இல்லையா என்பது தெளிவாக தெரியவில்லை. ஒருவேளை அவர் மரித்து இருந்தால் மரியாள் இயேசு ஊழியத்தை துவங்கும் முன்னரே விதவையாக இருந்திருப்பார். மரியாளையும் பிற சிறு குழந்தைகளையும் பராமரித்து யார், இயேசுவுக்கு இளைய சகோதரர்கள் உண்டு என்பது உனக்குத் தெரியுமா, அவர்கள் பெயர்களை தெரிந்து கொள்ளுங்கள் (மாற்கு 6:3). இயேசு தனது குடும்பத்திற்காக உண்மையுடன் கடினமாக உழைத்து அவர்களை பராமரித்து இருப்பார். இயேசுவைப்பற்றி ஜனங்கள் இவர் தச்சனுடைய குமாரன் அல்லவா, (மாற்கு 6:3) என்று சொன்னதிலிருந்து இயேசு ஒரு தச்சராக அறியப்பட்டிருந்தார், தன் குடும்பத்திற்காக வேலை செய்தார். நீங்கள் உங்கள் வீட்டில் உதவி செய்கிறீர்களா?

**6.தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் தயவு பெறும் விதத்தில் இயேசு நடந்துகொண்டார்:**

இயேசு அனைத்து தரப்பு மக்களிடம் நன்றாக பேசி பழகி வந்தார். அவர் போதகர்களிடம் மட்டும் பேசுவதை தேவனுக்கு பிரியமானது என்று எண்ணாமல் சாதாரண மனிதனோடு. தொழிலாளர்களோடு, அதிகாரிகள் குடும்ப மனிதர்கள் மற்றும் பெண்கள் போன்ற பல தரப்பு உலக மக்களிடம் பேசி பழகி அவர்கள் தயவை பெற்று வந்தார். மாணவர்களே நீங்களும் உங்கள் பள்ளி வாழ்க்கையில் தேவனை தெரியப்படுத்த தீர்மானிக்க வேண்டும். இயேசுவும் தேவனை பிரியப்படுத்தவும் மனுஷனுடைய தயவை பெறவும் தீர்மானித்திருந்தார்.

## 7. இயேசு ஒழுங்காக தேவாலயத்திற்குச் சென்றார் (லூக்.4:16)

இயேசு தனது பன்னிரண்டாவது வயதில் தேவாலயத்திற்குச் சென்றார். ஆண்டுதோறும் இப்படி சென்று தேவனை வழிபடுவது அவர்களின் வழக்கம். இப்படிப்பட்ட நாட்களில் இயேசு தம் பிதாவுடன் ஐக்கியப்பட நேரம் எடுத்தார். எப்போதும் அந்த உறவு வலிமையாகவும் தகர்ந்து போகாததாகவும் இருந்தது. மேலும் இயேசு தனது கிராமத்திலும் வீட்டிலும் ஆலயத்திலும் வேலை ஸ்தலத்தில் மனத்திலும் ஜெபம்பண்ணி தேவனோடு ஐக்கியப்பட்டிருந்தார்.

## 8. உங்கள் தீர்மானம்:

நாம் உலகில் வசித்து வருகிறோம். பல படிப்புகளை படித்து வருகிறோம். இதன் மத்தியில் நமது மனதிலும் எண்ணங்களிலும் பக்தியான காரியங்களில் அதிக நாட்டம் கொள்ள வேண்டும். நாம் நம் சபையில் மட்டுமின்றி நாம் பயிலும் இடங்களில் கூட நமது பக்தியையும் உண்மையையும் வெளிக்காட்ட வேண்டும்.

இயேசு தனது 12-30 வயதிற்கு உட்பட்ட 18 ஆண்டுகால ஆழமான வேத வாசிப்பு தியான பயிற்சியை மேற்கொண்டிருந்தார் என்பது அவரது ஊழிய நாட்களில் அவர் குறிப்பிட்ட மிகச்சரியான பழைய ஏற்பாட்டு வசனங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

## கேள்விகள்:

1. ஒரு 12 வயது யூத சிறுவனுக்கு கொடுத்த பெயர் என்ன?
2. இயேசு தனது 12 மற்றும் 30 வயதிற்கிடையில் செய்தது என்ன?
3. இயேசுவுக்கு எத்தனை இளைய சகோதரர்கள் இருந்தனர்?
4. எருசலேம் தேவாலயத்தில் இயேசு செய்தது என்ன?
5. நீங்கள் என்னை ஏன் தேடினீர்கள், இதை விளக்கவும்?

## பாடம் 12
# இயேசு சோதிக்கப்பட்டார்

***வேதபாகம் :*** மத்தேயு 4:1-11; லூக்கா 4:1-6; எபி 4:12-16.

***மனப்பாட வசனம் :*** ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். (எபி 2:18)

***நோக்கம் :*** நாம் சோதனைகளை ஜெயிப்பதற்கு இயேசு உதவி செய்வார் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.



**முன்னுரை :**

இயேசு தனது முப்பதாவது வயதில் ஆசாரியத்துவத்திற்காக பொறுப்பை பெற்றுக் கொண்டு தனது ஊழியத்தை துவங்கினார். தேவனால் தம்மிடம் நம்பி கொடுக்கப்பட்டுள்ள இந்த ஊழியத்தை செய்வதற்காக உபவாசித்து ஜெபிக்க தீர்மானித்தார். 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்தார். நாற்பதாவது நாளில் சாத்தான் தந்திரமாக அவரை சோதித்தான். மூன்று வகையான சோதனைகளை அவர் முன்வைத்து அவர் ஊழியத்திற்கு நுழைய விடாமல் தடுக்க முயற்சித்தான். இயேசு சாத்தானை திறமையுடன் எதிர்கொண்டார்.

**பாட விளக்கம்:**

**1. சோதனை என்றால் என்ன?**

சத்தியத்திலிருந்து விலகச்செய்கிற ஏதாவது எண்ணமோ, செயலோ,

வார்த்தையோ அல்லது விருப்பமோ சோதனையாகும். தேவனுடைய சித்தத்திற்கு எதிராக ஏற்படும் செயல் சோதனை என்றும் சொல்லலாம்.

## 2. இயேசு சோதிக்கப்பட்டார்:

அநேக மக்கள் இயேசு தெய்வீக சுபாவம் உள்ளவர் என்று கருதுகின்றனர். இயேசு தேவனுடைய ரூபமாகவும் மனிதனுடைய ரூபத்தை உடையவராகவும் இருந்தார். அவர் நம்மில் ஒருவரைப் போல ஒரு மனிதனாக பிறந்து குழந்தை பருவம், இளமைப் பருவம், வாலிபப் பருவத்தை அடைந்தார். அவர் நம்மை போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டு பாவம் இல்லாதவராக இருந்தார். (எபி 4:15) அவர் பசியாய் இருந்தார் (மாற்கு 11:12, மத் 21:18). தாகமாகவும் களைப்புடனும் இருந்தார். (யோவான் 4:5-7) சந்தோஷப்பட்டார் (லூக்கா 10:21). வேதனையுற்றார் (யோவான் 11:38). கண்ணீர் விட்டார் (லூக்கா 19:41). கதறி அழுதார் (யோவான் 11:35). துன்பப்பட்டார் (லூக்கா 12:50). துயருற்றார் (லூக்கா 22:44). இயேசு சாத்தானின் ஒவ்வொரு சோதனையையும் ஜெயித்தார். இயேசுவின் இந்த வெற்றி இக்கால கிறிஸ்தவர்களின் வெற்றி வாழ்க்கைக்கு பலன் தருவதாக உள்ளது.

## 3. சோதனைகள்:

### முதல் சோதனை: (லூக்கா 4:1-4)

நீர் தேவனுடைய குமாரனானால் இந்த கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும் (லூக்கா 4:3) என்று சொல்லி தனது சோதனையை துவங்கினான். சாத்தான் சொல்ல வந்தது என்னவென்றால் இப்பொழுது நீ பசியாய் இருக்கின்றாய். இந்த கல்லுகளை அப்பங்களாக்க உனக்கு வல்லமை உண்டு. நீ முதலில் உன் சரீரம் தேவையை பூர்த்தி செய்து திருப்திபடுத்திகொள். நீ உனது தேவையை திருப்திப்படுத்திக் கொண்டால், மற்றவர்களும் இந்த அற்புதத்தால் உன்னை நம்பி பின்பற்றுவார்கள். தேவனுடைய ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கவும் இது உதவியாக இருக்கும். சாத்தானின் பொய்யில் மறைந்திருக்கிற தந்திரத்தை இயேசு புரிந்துகொண்டார். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்று சொன்னார்.

### இரண்டாவது சோதனை:

பிசாசானவன் அவரை உயர்ந்த மலைக்கு கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நொடியில் காண்பித்து (லூக்கா 4:6) இயேசுவை நோக்கி இவற்றின் எல்லா அதிகாரமும் மகிமையும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் விரும்புகிறவனுக்கு இதை கொடுப்பேன். எனவே நீ என்னை வணங்கினால் எல்லாம்

உன்னுடையதாக மாறும். இந்த சோதனையின் பொருள் என்ன, நீர் தேவனுடைய ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்க விரும்புகிறீர். நானோ இந்த பூமியின் அதிபதி. அன்பு, சமாதானம் பொறுமையினால் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க இயலாது. அதற்கு பதில் என்னை ஆராதிப்பதன் மூலம் என்னுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு பணிந்து கொண்டால் நடக்கும் என்று சாத்தான் கூறினான்.

இயேசு சாத்தானின் இந்த சோதனையையும் புரிந்துகொண்டார். உடனடியாக அவனுக்கு பதிலாக உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று கூறினார். (லூக் 4:8) இந்த பதிலின் மூலம் தேவனை ஆராதிப்பதும், சேவிப்பதும் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு முக்கியமானதாகும். இதனை உலகத்தின் முறைகளிலும் சாத்தானின் தந்திரத்திலும் செய்திட முடியாது என்று சொன்னார்.

**மூன்றாவது சோதனை: (லூக் 4:9-12)**

சாத்தான் இயேசுவை தேவாலயத்தின் உச்சியில் கொண்டு போய் நிறுத்தி "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்" என்று சொன்னான். மேலும் அவன் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு உம்மைக் காக்கும்படி உமக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார் என்று சொன்னான். இந்த சோதனையின் மூலம் இயேசு தனது அற்புத சக்தியினால் ஜனங்களை தன் பக்கம் கவர்ந்திட முடியும் என்று சொன்னான். இயேசுவோ அற்புதத்தினால் ஏற்படும் தாக்கம் குறுகிய காலத்திற்கு மட்டுமே தேவனுடைய ராஜ்யமோ என்றென்றைக்கும் உள்ளது. தேவன் எந்த அற்புதத்தையும் வேடிக்கை காட்டுவதற்காக செய்யவில்லை. ஒருவேளை இயேசு கீழே குதித்து விட்டு தன்னை காப்பாற்றும்படி பிதாவிடம் கேட்டிருந்தால் தேவனுடைய வல்லமையை வேடிக்கைக்காக சோதிப்பதாக இருந்திருக்கும். ஆகவே இயேசு "உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக" என்று சொன்னார்.

**நாம் அறிந்துகொள்ள வேண்டியது:**

1. இயேசு சாத்தானின் சோதனைகளை தோற்கடிக்க தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தினார். ஒவ்வொரு சோதனையை ஜெயிக்க தேவனுடைய வார்த்தை நமக்கு தெய்வீக ஞானத்தை தருகிறது. (சங்கீதம் 119:11)
2. இயேசு இந்த சோதனைகளுக்கு தன்னை விட்டுக் கொடுக்காமல் எந்த தீமைக்கும் உடன்படாதவராக இருந்தார். தேவன் நம்மையும் இந்த உலகத்தின் பாவங்களுக்கு விலக வேண்டும் என்றும் விரும்புகிறார்.
3. இயேசுவுக்கு பயன்படுத்தின அதே தந்திரத்தை சாத்தான்

நமக்கும் எதிராக பயன்படுத்துகிறான். தவறான வழிகளின் மூலம் செல்வம், உயர்வு, மதிப்பு, உணவை சம்பாதிக்கும் படி நம்மை தூண்டுகிறான். தேவன் விரும்புகிறவைகள் உண்மை மற்றும் நேர்மை நாம் இன்று சந்திக்கிற எல்லா சோதனைகளும் இயேசுவினால் தோற்கடிக்கப்பட்டவை. நமக்கு உதவி செய்பவராக அவர் இருக்கிறார். (மனப்பாட வசனத்தை பார்க்கவும்)

**கேள்விகள்:**

1. கிறிஸ்தவர்களின் பார்வையில் சோதனை என்பதன் பொருள் என்ன?
2. இயேசு மனிதனாக இருந்தார் என்பதற்கான ஐந்து ஆதாரங்களைக் கூறு?
3. இயேசு மற்றும் மனிதனுக்கு சோதனை நேரத்தில் காணப்படும் வித்தியாசங்கள் என்ன?
4. முதல் சோதனை எது, சாத்தான் இதனால் சொல்ல வந்தது என்ன,
5. இரண்டாவது சோதனை எது?
6. மூன்றாவது சோதனை எது?
7. தேவனுக்கு எதிராக பாவம் செய்யாதபடி நான் செய்ய வேண்டியது என்ன?

**செயல்திட்டம்:**

சுலபமாக சிலவற்றை அடைய குறுக்கு வழியில் செல்வது சரியா, (எடுத்துக்காட்டு: பரீட்சையில் பார்த்து எழுதுதல்)

பாடம் 13

# இயேசு ஒரு மனிதன்

***வேதபாகம் :*** பிலிப்பியர் 2:6-11.

***மனப்பாட வசனம் :*** தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. (1 தீமோ 2:5,6).

***நோக்கம் :*** இயேசு இந்த பூமியில் முழுமையான மனிதனும் முழுமையான தேவனுமாக இருந்தார் என்ற சத்தியத்தை சொல்லி தருதல்.



**முன்னுரை :**

மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் பிறப்பு மற்றும் வம்சவரிசை அட்டவணை உள்ளது. இயேசு ஆபிரகாமின் வம்சவரிசையைச் சேர்ந்தவர். இயேசு யாக்கோபின் வித்து மற்றும் தாவீதின் வித்து என்றும் அறிமுகம் செய்யப்பட்டார். இயேசு பூமியில் பிறந்து, வளர்ந்து தமது "மாம்சத்தாலும், இரத்தத்தாலும்" சாத்தானை தோற்கடித்தார். இது மனிதனுக்கு உரியதாகும்.

**பாட விளக்கம்:**

**1. இயேசுவுக்கு மனித பெயர்கள் கொடுக்கப்பட்டது**

- அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக (மத்தேயு 1:21) என்று கட்டளையிடப்பட்டதோடு, தேவதூதன் (மத்தேயு 1:23) இயேசு என்ற

மனிதர்களுக்கு உரிய பெயரையே பயன்படுத்தினான்.

- இயேசு மனிதனாக ஏற்கனவே குறிக்கப்பட்டார். (1 தீமோ 2:5,6)
- மனுஷகுமாரன் என்ற பதம் அவர் ஒரு மனிதன் என்பதை காட்டும்படி 72 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (லூக்கா 9:10)
- ஸ்தேவான் தான் இரத்த சாட்சியாய் மரிக்கும்முன், பிதாவின் வலதுபாரிசத்தில் இயேசு நிற்பதைக் கண்டு அவரை மனுஷகுமாரன் என்று அழைத்தார். (அப்.7:56)

### 2. வம்சவரிசை அட்டவணையில்:

- அவள் (மரியாள்) தனது முதல் பேறான குமாரனை பெற்றாள். (மனுஷி) (லூக்கா 2:7)
- தாவீதின் வேரும் சுதந்திரவாளியானவர். (மத்தேயு 1:17; அப்.13:23; கலா.4:4)
- ஆபிரகாம் என்ற மனிதனுடைய வரிசையில் வந்த மனிதர். (மத்தேயு 1:1-16)

### 3. மாம்ச சுபாவத்தை பெற்றிருந்தார்:

- வார்த்தை தேவனாக இருந்தது (யோவான் 1:1). அந்த வார்த்தை மாம்சமாக மாறியது. (சுபாவம்) (யோவான் 1:14).
- பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாக இருக்க அவரும் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். (எபி 2:14)
- எல்லா ஆவிகளும் இயேசு மாம்சத்தில் வந்த தேவன் என்று அறிக்கை செய்தது. (1 யோவான் 4:2).

### 4. நிலைகள், ஒழுங்குகள், இயற்கையான வளர்ச்சி:

- இயேசு சக மனிதனைப் போல மழலைப் பருவம், குழந்தைப் பருவம், வாலிபப்பருவம் போன்ற நிலைகளை கடந்து சென்றார்.
- இயேசு மனிதனைப் போல தனக்கு தெரியாததை கேள்விகளாக கேட்டு தெரிந்து கொண்டார்.
- ஞானத்தில் வளர்ந்தார். (லூக்கா 2:52)
- கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார். (எபி 5:8)
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தார். (லூக்கா 2:51)
- பாடுபட்டார். (எபி 2:10,11)
- தச்சனாக வேலை பார்த்தார், வாழ்ந்தார். (மாற்கு 6:3)
- அவருடைய வயது 12,30 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (லூக்கா 2:42, லூக்கா 3:23)
- ஒரு மனிதனாக சோதிக்கப்பட்டார். (மத்தேயு 4:11; எபி 4:15)
- மனித உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் கொண்டிருந்தார்.

### 5. மனிதர்களைப் போல மனம் மற்றும் உடல் ரீதியான உணர்ச்சிகளை இயேசு பெற்றிருந்தார்:

- பசி (மாற்கு 11:12) • களைப்பு (யோவான் 4:6 -8)
- கலங்கினார் (யோவான் 11:38) • மனதுருக்கம் (மத்தேயு 9:36)
- துக்கப்பட்டார் (மத்தேயு 26:38) • ஜெபித்தார் (மத்தேயு 26:36)
- இரத்தமும், தண்ணீரும் அவர் சரீரத்தில் இருந்தது. (யோவான்19:34)
- மனிதனைப் போல எல்லா விதத்திலும், எண்ணங்களிலும் உணர்ச்சியிலும் சோதிக்கப்பட்டார். (எபி 4:15) • பாடுபட்டார் (எபி 2:20)
- தாகமாயிருந்தார் (யோவான் 4:7, யோவான் 19:28)
- தூங்கினார் (மாற்கு 4:38) • அன்பு (மாற்கு 10:21)
- கோபப்பட்டார் (மாற்கு 10:14)•கண்ணீர் விட்டார் (யோவான் 11:35)
- கைவிடப்பட்டார். (மத்தேயு 26:39)

### 6. படைக்கப்பட்ட மனிதன்:

மனிதன் ஆவி-ஆத்துமா-சரீரம் என்ற மூன்று கூறுகள் ஒன்றாக இணைக்கப்பட்டவனாக படைக்கப்பட்டான்.

- இயேசு சரீரத்தில் இருந்தார். (யோவான் 1:14; எபி. 2:14) அவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டது. (லூக்கா 21:52-56).
- இயேசு ஆத்துமாவை பெற்றிருந்தார். (மாற்கு 15:37; மத்தேயு 20:28)
- இயேசு ஆவியை உடையவராக இருந்தார். (லூக்.23:46; யோவா 19:28)
- இயேசு பரிசுத்த ஆவியில் நிறைந்து இருந்தாலும் அவரின் பிறப்பு, வாழ்க்கை மற்றும் மரணம் பிற மனிதர்களை போலவே இருந்தது.

### 7. மனிதனுக்கு நியமிக்கப்பட்ட மரணத்தின் வழியாக அவரும் கடந்து சென்றார்:

(எபி 9:27; மாற்கு 15:44; அவரின் மரித்த சரீரம் அடக்கம் செய்யப்பட்டது. லூக்கா 23:52; யோவான் 19:40-42).

### கேள்விகள்:

1. இயேசுவின் வம்சவரிசை இடம்பெறும் சுவிசேஷ புத்தகங்களின் பெயர்கள் என்ன?
2. இயேசுவின் மனித பெயர்கள் என்ன?
3. இயேசுவைப்பற்றி யோவான் எவ்விதம் கூறுகிறார்?
4. இயேசு மனிதனுடைய உணர்வுகள், உணர்ச்சிகள் உடையவராக இருந்தார் என்பதற்கான 6 உதாரணங்களைக் கூறு?
5. இயேசு சரீரம் ஆத்துமா ஆவி உடையவராக இருந்தார் என்பதற்கு ஆதாரங்களை கூறு?

பாடம் 14

# இயேசு பாவமில்லாத பரிசுத்தர்

***வேதபாகம் :*** பிலிப்பியர் 2:1-12.

***மனப்பாட வசனம் :*** அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. (1 பேதுரு2:22)

***நோக்கம் :*** இயேசு பூரணமான மனிதனாக, முன்மாதிரியாக வாழ்ந்தார் என்பதை கற்றுத்தருதல்.



**முன்னுரை :**

மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் பிறப்பு மற்றும் வம்சவரிசை அட்டவணை உள்ளது. இயேசு ஆபிரகாமின் வம்சவரிசையைச் சேர்ந்தவர். இயேசு யாக்கோபின் வித்து மற்றும் தாவீதின் வித்து என்றும் அறிமுகம் செய்யப்பட்டார். இயேசு பூமியில் பிறந்து, வளர்ந்து தமது "மாம்சத்தாலும், இரத்தத்தாலும்" சாத்தானை தோற்கடித்தார். இது மனிதனுக்கு உரியதாகும். இயேசு அவரது வாழ்க்கை முழுவதும் பாவம் இல்லாதவராக வாழ்ந்தார். அவர் எந்த பாவத்தையும் செய்யவில்லை. அவர் ஒருவர் மட்டுமே தனது சொல், செயல், சிந்தனையில் பாவம் இல்லாதவராக வாழ்ந்தார்.

**பாட விளக்கம்:**

**1.பாவமற்ற தன்மை என்றால் என்ன?**

தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ்வது பாவமற்ற வாழ்க்கை ஆகும்.

**2. இயேசுவின் பாவமற்ற தன்மையை குறிப்பிடும் வசனங்கள்:**

- தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். (எபி 10:7)
- நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளை செய்து முடித்தேன். (யோவான் 17:4)
- பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும் (எபி 7:26)
- குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலை யேறப்பெற்ற இரத்தத்தினாலே (1 பேதுரு 1:19)
- பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து. (எபி 9:14)
- அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை. (1 பேதுரு 2:22)
- அவரிடத்தில் பாவமில்லை. (1 யோவான் 3:5)
- பாவம் அறியாத அவரை. (2 கொரி 5:21)
- எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவ ராயிருக்கிற (எபி 4:15)
- அவர் பரிசுத்தமானவராய் இருந்தபோதிலும்(1 யோவான் 3:5).

**3. இயேசுவின் பாவமற்ற தன்மைக்கான சாட்சிகள்:**

- “உங்களில் யார் என்னை குற்றப்படுத்த கூடும்,” (யோவான் 8:46) ஆதாம் பாவத்தில் விழுந்த நாள் முதல் இவ்விதமாய் சாட்சி பகர்ந்த நபர் வேறு எவருமில்லை. இயேசு எந்த பாவமும் செய்யவில்லை. தனது பாவத்திற்காக பிதாவை நோக்கி மன்னிப்பு கேட்க வேண்டிய தேவையும் ஏற்பட்டதில்லை. அவருடைய வாழ்க்கை பரிபூரணமாக இருந்தது.
- நீதிபதியாக இருந்து பிலாத்து வெளிப்படையாக “இவரிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் காணவில்லை” என்று கூறினான். (யோவான் 19:6)
- பிலாத்துவின் மனைவி அவரிடம் “நீர் இந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்” என்று சாட்சி கூறினார். (மத் 27:19)
- அவரோடு கூட சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவன் “இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே” என்று சொன்னான். (லூக்கா 23:41)
- அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து “குற்றமில்லாத

இரத்தத்தை காட்டிக் கொடுத்தேன்" என்றான் (மத்தேயு 27:4). அவருடைய சீஷர்கள் இயேசுவை நன்றாக புரிந்து இருந்தனர். யூதாசும் அவர்களில் ஒருவன். யூதாஸ் அவரை காட்டிக் கொடுத்த போதிலும் அவர் பாவம் செய்யாதவர் என்று புகழ்ந்து பேசினான்.

- ரோம நூற்றுக்கு அதிபதியின் சாட்சி
  மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் (லூக்கா 23:47). அவன் இப்படி சொன்னதும் மட்டுமன்றி தேவனை மகிமைப்படுத்தினான். அதிகாரங்களில் இருந்த உலக மக்கள் கூட இயேசு பாவம் செய்யாதவர், நீதிமான் என்று சான்றுரைத்தனர்.

## கேள்விகள்:

1. கீழ்க்கண்ட வாக்கியங்களின் சூழ்நிலையை எழுது.
   நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த மனுஷன் தகாததொன்றையும் செய்யவில்லை. மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமான் தான். இவரிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை.
2. பாவம் இல்லாத தன்மை என்றால் என்ன?
3. இயேசு தனது பாவங்களுக்கு தேவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை?
4. இயேசுவினிடத்தில் பாவமில்லை என்பதற்கான ஐந்து வசன ஆதாரங்களை கூறு,
5. பிற மத ஸ்தாபகர்களுடன் ஒப்பிட்டு இயேசுவின் தனித்தன்மைகளை எழுதுக.

பாடம் 15

# இயேசு அப்போஸ்தலர்களை நியமித்தார்

***வேதபாகம் :*** மத்தேயு 10:1-42; மாற்கு 1:14-20; மாற்கு 3:6-9; லூக்கா 6:12-17

***மனப்பாட வசனம் :*** அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்கள் தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாக தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும் அவர்களை ஏற்படுத்தினார். (மாற்கு 3:14,15).

***நோக்கம் :*** இயேசு அவருடைய ஊழியத்தை செய்ய அவருடன் நல்ல வேலையாட்கள் தேவைப்பட்டனர். ஆகவே சிறுபிள்ளைகள் தாமாக முன்வந்து அவரது ஊழியத்தில் பங்குபெற வேண்டும் என்பதை போதித்தல்.



**முன்னுரை :**

யோவானால் எழுதப்பட்ட நான்காவது சுவிசேஷத்தில் மட்டும் இயேசுவின் சீஷர்கள் பெயர் பட்டியல் இடம்பெறவில்லை. புதிய ஏற்பாட்டு பவுல், பர்னபா, இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு ஆகியோருக்கு "அப்போஸ்தலன்" என்ற பெயரை வழங்கி இருக்கிறது. ஆனால் மத்தேயு சுவிசேஷம் முழுவதும் சீஷர்கள் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.

குரு - சீஷர்கள் என்ற அர்த்தம் மிகச் சரியாக பொருந்துகிறது. இயேசுவின் சீஷர்களும் அப்போஸ்தலர் ஆவார். சீஷன் என்ற கிரேக்க

பதத்திற்கு "மத்திடஸ்" (Mathetes) அதாவது கற்றுக் கொள்கிறார்கள் என்று பொருள். அப்போஸ்தலர் நடபடியில் "சீஷர்கள்" என ஆதிகால கிறிஸ்தவர்களும் (30 முறைகள்) அழைக்கப்பட்டனர் .

## பாட விளக்கம்:

### 1. இயேசு சீஷர்களை நியமித்தல்:

தேவன் மனிதனை நேசிக்கிறார் என்பதை தெரிவித்து அவருக்காக ஜனங்களை ஆயத்தப்படுத்தவும் நற்செய்திப் பணி செய்யவும் இயேசு விரும்பினார். தம்மைக் குறித்து மக்கள் அறிந்துகொள்ள தான் மட்டுமின்றி 12 சீஷர்களையும் ஏற்படுத்தினார். அவர்கள் பல்வேறு பின்னணியில் இருந்து வந்த சாதாரணமானவர்கள். என்னைப் பின்பற்றி வா என்று இயேசு சொன்ன அழைப்பிற்கு இணங்கி எல்லாவற்றையும் விட்டு பின்பற்றினவர்கள்.

இயேசு இரவுமுழுதும் ஜெபம் செய்த பின்பு 12 சீஷர்களை நியமித்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். சிறு பிள்ளைகள் 12 அப்போஸ்தலர்கள் பெயர்களை வரிசையாக கற்றுக்கொள்ளட்டும்.

### 2. சீஷர்கள் ஊழியம் செய்த விதம்:

"காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத் 10:6). இஸ்ரவேலர்கள் பரிசுத்த வேத வாக்கியங்கள், நியாயப்பிரமாணத்தை பெற்றிருந்த போதும் இயேசு அவர்களை காணாமல் போன ஆடுகள் என்றும் சீஷர்கள் முதலாவது அவர்களிடத்தில் செல்ல வேண்டுமென்றும் புறஜாதிகள் மற்றும் சமாரியர்களிடம் செல்ல வேண்டாம் என்றும் கூறினார். இயேசு பெரும்பாலும் யூதேயாவின் பகுதிகளிலேயே பயணித்தார். எப்பொழுதாவது அவர் சமாரியா மற்றும் புறஜாதியார் பட்டணங்களுக்கு சென்றார்(மாற் 7:24-37; மாற் 8:22). இயேசு ஏன் அவர்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் அளித்தார் என்று இதனால் நமக்கு புரிகிறது.

இயேசு எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் சுவிசேஷத்தை பரப்ப எண்ணாமல், ஒழுங்காகவும், ஜாக்கிரதையாகவும், முறைப்படியாகவும் யூதேயா முழுவதும் முதலாவது நற்செய்தி பரவ செய்து பின்பு பிற பகுதிகளுக்கு கொண்டு செல்ல விரும்பினார். அந்த நாட்களில் யூதர்கள் புறஜாதியாரோடு எந்த தொடர்பும் வைத்திருக்கவில்லை. இதை முறியடித்த முதல் யூதன் இயேசு ஆவார். இயேசு யூதரிடத்திலும், புறஜாதியாரிடத்திலும் ஒரே விதமான அன்பை உடையவராக இருந்தார். (மத் 21:31-33).

### 3. பணப்பை வேண்டாம்:

குறைந்த சுமை சுகமான பயன் என்ற வார்த்தையின்படி இயேசுவின் சீஷர்கள் தமக்கு கொடுப்பவனவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். தேவன் அவர்களை நியமிக்கும் போது நிறைய சுமையை கொண்டுபோக வேண்டியது என்ன, என்று கேட்டார்.

**4. பாதங்களில் படிந்த தூசி (மத் 10:14):**

இயேசு சீஷர்களுக்கு கொடுத்த மற்றொரு கட்டளை "உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களின் இடத்தை விட்டு உடனே சென்று விடுங்கள் என்பதாகும்." அவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிவிட்டு போக வேண்டும் என்றார்.

**5.சீஷர்கள் வல்லமை அடைதல் (மத் 10:1):**

இயேசு அசுத்த ஆவிகளை துரத்தவும் சகல வியாதிகளையும், நோய்களையும், குணமாக்கவும் வல்லமை பெற்றிருந்தார். இந்த வல்லமையை சீஷர்களுக்கு அளித்தார். நற்செய்தியின் மூலம் இலவசமாக ஆசீர்வாதங்களை பெற்றவர்கள் இலவசமாகக் கொடுத்தார்கள் சுவிசேஷம் என்பது அவர்களின் தனிப்பட்ட பலனுக்காக அல்ல முழு உலகத்திற்கும் உரியது .

**6. ஓநாய்கள் மற்றும் ஆடுகள் (மத் 10:16):**

ஓநாய்களுக்கு நடுவில் ஒரு ஆடு நடுங்கி கதறுவதை உன்னால் கற்பனை செய்ய முடியுமா? பழிகள், உபத்திரவங்கள், தவறான குற்றச் சாட்டுகளின் நடுவே ஆடுகளைப்போல சீஷர்கள் இயேசுவின் நிமித்தம் வாழ்ந்தனர். பிதாவின் சித்தம் இல்லாமல் ஒன்றும் நேரிடாது என்று நம்பின சீஷர்களை இவைகள் ஒன்றும் செய்யமுடியவில்லை. இயேசு சீஷர்களிடம் அவர்கள் வாழ்க்கையில் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும் பயப்படாமல் உறுதியாய் இருக்கும்படி கூறினார்.

**7. நானும் இயேசுவின் சீஷன்:**

இது இயேசுவின் விருப்பம். நமக்கு தெரியாத ஒரு நபர் மூலம் பரலோகம் நற்செய்தியைக் கேட்டு நாம் கிறிஸ்தவர்களானோம். நான் சீஷனாக மாறும்படி எனக்கு இந்த வாய்ப்பை தேவன் தந்திருக்கிறார். நான் இலவசமாய் பெற்ற நற்செய்தியை இலவசமாய் பிறருக்குச் சொல்லவும் இயேசுவுக்கு இன்னொரு சீஷராக அவர்கள் மாறட்டும்.


**கேள்விகள்:**

1. ஒரு அப்போஸ்தலன் மற்றும் சீஷனுக்கான வித்தியாசத்தை கூறு.
2. அப்போஸ்தலர்கள் என்ற பெயர் யாரால் அழைக்கப்பட்டது?
3. அப்போஸ்தலர் நடபடிகளில் சீஷர்கள் என்ற வார்த்தை எத்தனை முறை வருகிறது?
4. இயேசுவின் 12 சீஷர்களின் பெயர்கள்.
5. காணாமல் போன ஆடுகள் யார்?
6. ஓநாய்களுக்குள்ளே ஆடுகளை விளக்கவும்.
7. சீஷர்கள் தங்கள் பணப்பையை கொண்டுவர வேண்டாம் என்று சொன்னது யார்?
8. சீஷருக்கு இயேசு வல்லமையை ஏன் அளித்தார்?

பாடம் 16

# பாக்கியவசனங்கள்

***வேதபாகம் :*** மத்தேயு 5:1-12; லூக்கா 6:20-26.
***மனப்பாட வசனம் :*** நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். (மத்தேயு 5:17 )
***நோக்கம் :*** பரிபூரண வாழ்வின் ஆசீர்வாதங்களை தெரிந்துகொள்ளவேண்டும்.



## முன்னுரை :

இயேசுவின் ஆரம்ப ஊழியங்களில் தமது பெரும்பாலான போதனைகளை யூத ஜெப ஆலயங்களில் செய்தார். நாளடைவில் பொது இடங்களிலும் இந்த ஊழியம் பரவியது. அவரது ஊழியங்களின் ஆரம்பகட்ட போதனைகள் மலைப்பிரசங்கம் என அழைக்கப்படுகிறது. இயேசு தமது 12 சீஷர்களை தேர்வு செய்த உடனே இந்த போதனைகளை அறிவித்ததாக (லூக்கா 6:12-20) குறிப்பிடுகிறார். அர்ப்பணிப்பின் பிரசங்கம் என்றும் அழைக்கலாம். இதன் முக்கிய செய்தி தேவனுடைய ராஜ்ஜியம் என்பதாகும். இந்த செய்தியானது இவைகளால் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவோம் என்று சொல்லாமல் தேவனுடைய ராஜ்யத்தை பெற்றுக்கொண்டவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை குறிப்பிடுகிறது.

சமவெளியால் சூழப்பட்ட மலை ஒன்றில் இது பேசப்பட்டது. பாரம்பரிய கருத்துப்படி அந்த மலை கெரன் ஹாதீம் (Keren Kathim)

என்று அழைக்கப்படுகிறது. மத்தேயு 5,6,7 ல் உள்ள மலைப் பிரசங்கத்தின் முக்கிய சாரம் மத்தேயு 5:1-12 ல் உள்ளது. தெய்வீக பண்புகள் அல்லது பாக்கிய மொழிகள் என்றும் அழைக்கப்படுகிறது.

ஏசாயா 40 முதல் 55 வரை உள்ள அதிகாரம் மேசியாவை பற்றிய தீர்க்கதரிசனங்களை வலியுறுத்துவதாக உள்ளது. இந்த வாக்கியங்கள் ஒரு பரிபூரண மனிதனின் தரத்தை விளக்குகிறது. இவைகள் பல வித்தியாசமான குணங்களை அல்ல, ஒரு முழுமையான பூரண வாழ்வை குறிக்கிறது. ஒவ்வொரு வாக்கியமும் ஆசீர்வாத வாக்குடன் முடிகிறது.

**பாட விளக்கம்:**

தேவனுடைய ராஜ்யத்தில் நுழைய விரும்புகிறவர்களுக்கு சில தகுதிகள் இருக்கிறது. ஒரு நாடு தமது குடிமக்களுக்கென்று சட்டங்களை, ஒழுங்குகளை வைத்துள்ளது. அதை தெரியாதவர்கள் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். இவைகள் தேவனுடைய ராஜ்யத்தின் மக்களுக்கான சட்டங்கள் முறைகளாகும். இப்பொழுது அதை கற்போம்.

எட்டு நற்பண்புகள் உள்ளன. நாம் அவைகளை, அடிப்படைக் கருத்துகளை எட்டு விதமான குணங்களாக அல்லாமல் கிறிஸ்துவ குணத்தின் எட்டு அம்சங்களாக புரிந்துகொள்வோம். நாம் அதை ஒவ் வொன்றாக படிப்போம்.

**1.ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது மத்தேயு 5:3:**

ஆவியில் எளிமையுள்ளவர்கள் என்றால் ஆவிக்குரிய தேவனை பற்றிய கவனத்துடன் இருப்பவர்கள் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வெறுமையை உணர கூடியவர்கள். தேவனுடைய ராஜ்யம் இந்த வாஞ்சையோடு இருப்பவர்களுக்கு உண்டு. பூரணமாக முயற்சிக்காதவர்களுக்கு இல்லை.

**2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடை வார்கள் மத்தேயு 5:4 :**

உண்மையாக துயரப்படுகிறவர்கள் யாரெனில் தாகத்தோடு உள்ளவர்கள், துன்மார்க்கத்தையும், உலகத்தீமையையும், வெறுப்பவர்கள், தீமையை விலக்கவேண்டும் என விரும்புகிறவர்கள். இப்படிப்பட்டவர்களை இயேசு ஆறுதல் அடைய செய்கிறார்.

**4.சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் மத்தேயு 5:5:**

சாந்தம் என்பது ஒரு பலவீனம் அல்ல. இது ஒரு தாழ்மையின் குணம். பிறர் செய்யும் செயல்களால் பொறாமை, கோபம், பெருமை ஏற்படாமல் இருப்பது மெய்யான சாந்தம். இது ஒரு பெரிய சக்தி

ஆகும். இந்த உலகில் அவர்கள் பலவீனர்களாக இருக்கலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேல் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க இது தேவை. தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுக்கு உடையது.

**4. நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். மத்தேயு 5:6:**

நீதி என்பது ஒரு மனித குணம் அல்ல. இது தெய்வீகமான மற்றும் தேவனுடைய கிருபை ஆகும். நீதி என்பது சட்டத்தை மதிப்பதோ அல்லது நன்மை செய்வதோ அல்ல. இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றிருப்பதே உண்மையான நீதியாகும்.

**5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் மத்தேயு 5:7:**

இரக்கம் என்பது ஒரு தெய்வீகத்தன்மை. தேவன் இந்த இரக்கம் மனிதனிடத்திலும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். நல்ல சமாரியன் இரக்கத்தை வெளிப்படுத்தினான். இவ்வகை மனிதர்கள் தேவனுடைய இடத்தைப் பெறத் தகுதியுள்ளவர்கள். இப்படி இரக்கம் காட்டுவதால் நாம் இரக்கம் பெற தகுதி பெறுவோம் என்று பொருள் அல்ல அதை அவர்கள் எதிர்பார்க்காமல் செய்தார்கள்.

**6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் மத்தேயு 5:8:**

நிச்சயமாகவே இந்த உலகில் ஒருவரும் பூரணர் இல்லை. அதை அறிந்த இயேசு மனுக்குலத்தின் பாவத்தை நீக்கவும், தெய்வீக சுகத்தின் மீது வாஞ்சையும் தேவனோடு ஐக்கியத்தையும் விரும்புகிறவர்களுக்கு உதவும்படி வந்தார். தேவனை ஒருவரும் கண்டதில்லை. இப்பொழுது ஒரு கண்ணாடியின் வழியாக பார்க்கிறோம். ஒரு நாள் வரும் அப்பொழுது முகமுகமாய் தரிசிப்போம்.

**7. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள். மத்தேயு 5:9:**

தேவன் சமாதானத்தின் தேவனாக இருக்கிறார். ஒருவரும் சமாதானத்தை விருப்பத்தினால், உழைப்பினால், விடுதலையினால், பின்பற்றுவதால் அடைய இயலாது. மாறாக யாரெல்லாம் சமாதானத்தை விரும்பி அதை பின்பற்றி பிறருக்குள்ளும் அதை உண்டுபண்ணுபவர்கள் எவர்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

**8. நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. மத்தேயு 5:10-12:**

குற்றம் சாட்டுதல், அவதூறு செய்தல், எதிராக வாதாடுதல் போன்ற

மூன்று வகையில் துன்பப்படுவதை மத்தேயு கூறுகிறார். இயேசுவின் நிமித்தம் பழி கூறுதல் மற்றும் எல்லா தீமையான வார்த்தையையும் பொய்யாக கூறுவது என்று லூக்கா 6:22 குறிப்பிடுகின்றது. இவைகள் நாம் புலம்புவதற்காக அல்ல. சந்தோஷப்படுவதற்காக கொடுக்கப்பட்டது. இவைகளுக்கு பலன் உண்டு. அதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடையுங்கள்.

**கேள்விகள்:**

1. கெரன் ஹாதீம் என்றால் என்ன?
2. மலைப் பிரசங்கத்தின் முக்கிய கருத்து எது?
3. பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கு தகுதிகள் என்ன?
4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் - எதற்காக துயரப்படுகிறார்கள் என்பதை பற்றி கூறு
5. நீதியின் நிமித்தம் துன்பப்படுவது என்றால் என்ன?
6. பூமியை சுதந்தரிக்கபோவது யார், தெய்வீக பண்புகளை கற்றுக் கொள்வோம் மத்தேயு 5:1-12
7. நீதிமான் யார்?
8. இரக்கம் காட்டுதலுக்கு வேதம் கூறும் உதாரணம் என்ன?
9. சமாதானம் பண்ணுகிறவர்கள் பொருள் என்ன?

பாடம் 17

# உவமைகள்

***வேதபாகம் :*** மத்தேயு 5:13-16; மாற்கு 4:21; லூக்கா 8:16

***மனப்பாட வசனம் :*** இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)



**முன்னுரை:**

இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் அடங்கியுள்ள தெய்வீக குணங்களை பற்றி படித்த நாம் இப்பூமியின் உரியவர்கள் பரலோகத்திற்கு உடையவர்களாக இருக்கிறோம் என்று புரிகிறது. எனினும் நாம் இந்த பூமியில் பிறருக்கு சாட்சிகளாக இருக்கவேண்டும். ஆகவே இயேசு நீங்கள் பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள் என்று சொன்னார். உப்பு மற்றும் வெளிச்சத்திற்கு ஈடாக எதையும் வைக்க முடியாது. இந்த உலகத்திற்கு ஆசீர்வாதம் உண்டாகச் சீஷர்களை தவிர வேறு எவராலும் முடியாது. ஆகவே அவர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் மறந்து விடவே கூடாது.

**பாட விளக்கம்:**

**1. நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள் மத்தேயு 5:13**

- இயேசு நான் பூமிக்கு உப்பாக இருக்கிறேன் என்று சொல்லவில்லை
- நீங்கள் ஒருவேளை உப்பாக மாறலாம் என்றும் சொல்லவில்லை.

• உங்களுக்கு உப்பு இருக்கிறது என்றும் சொல்லவில்லை.

ஆனால் நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள் என்றார். எந்த குழப்பத்திற்கும் இடமில்லாமல் இதை கூறினார்.

உப்பு ஒரு விலைமலிவானது. ஆனால் அன்றாட முக்கியமாக தேவைப்படுகிறது. தலைவர்களோ, சமுதாயமோ சீஷர்கள் என்றால் ஏழைகள் அல்லது படிக்காதவர்கள் அல்லது புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று நினைக்கின்றனர். ஆனால் இந்த பூமிக்கு முக்கியமானவர்கள் அவர்கள்தான்.

உப்பு சுத்தம் செய்வதற்கு, பதப்படுத்துவதற்கு, சுகம் ஆக்குவதற்கு மற்றும் மறு ருசி கொடுப்பதற்கு பயன்படுகிறது. கிறிஸ்துவின் சீஷர்கள் தாங்கள் அவரிடத்தில் கண்ட கேட்ட, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை பூமியில் செய்யும்போது தனிப்பட்ட குடும்ப உறவுகளுக்குள்ளே நித்திய ஜீவனும், நன்மைகளும், சந்தோஷமும் உண்டாகும். சமுதாயம் சந்தோஷத்தையும், அன்பையும் உணர்ந்து கொள்ளும்.

தாங்கள் உப்பாக மாறுவதற்கு அல்லது மாறாமல் இருப்பதற்கு சீஷர்கள் அனுமதி தர வேண்டியதில்லை. அவர்கள் உப்பாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தார்கள். எனவே இயேசு அவர்களை நீங்கள் உப்பாக இருக்கிறீர்கள் என்றார்.

**2. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்:**

மத்தேயு 5:14

இயேசு நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன் என்றால் தம்முடைய அன்பான சீஷர்களை நீங்கள் என்னை போலவே உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றார்.

வெளிச்சம் என்பது காணக்கூடியது. விளக்கின் கடமை வெளிச்சம் தருவதாகும். நீங்கள் வெளிச்சமாக மாற வேண்டும் அல்லது மாறக்கூடாது என்று சொல்லாமல் நீங்கள் ஒளி வீசக்கூடியவர்களாக இருக்கிறீர்கள் என்று சொன்னார். இதன் பொருள் சீஷர்கள் விளக்கு போல ஒளி வீச வேண்டும். இயேசுவுக்காக வெளியரங்கமான சாட்சியாக எந்த மறைமுகமும் இன்றி வாழ வேண்டும். தங்கள் வாழ்க்கைக்காகவே அல்ல தங்கள் நல்ல செயல்கள் மூலம் வெளி உலகத்தில் தேவனுக்கு மகிமையை உண்டாக்க வேண்டும்.

இருளில் உள்ளோர் இப்படிப்பட்ட வாழ்க்கை மூலம் ஒளியைக் காணட்டும். ஒரு சீஷன் என்பவன் மலைமேல் உள்ள பட்டணம் போல இருக்கிறான். அவர் இயேசுவைப் பின்பற்றுகிறவன் என்று எல்லோராலும் அங்கீகரிக்கப்படவேண்டும்.

### 3. நம்பகத்தன்மை:

உப்பையும் வெளிச்சத்திற்கு பதிலாக வேறு எதையும் ஈடாக கொடுக்க யாராலும் முடியாது. இயேசுவின் சீஷர்களின் இடத்தையும் வேறு ஒருவராலும் பிடிக்க இயலாது. ஏனெனில் அவர்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார்கள்.

### 4. ஒரு வேதனை தரும் செய்தி:

எல்லாவற்றிலும் உப்பானது ருசி ஏற்படுத்துகிறது. கெட்டுப் போகாமல் பாதுகாக்கிறது. ஆனால் தமது சாரத்தை இழந்து விடுவதால் அது யாதொன்றையும் பாதுகாக்க முடியாது. வெளியே வீசப்பட்டு எல்லாராலும் மிதிக்கும்படி கொட்டப்படும். சீஷர்கள் ஆகிய நாமும் இந்த உலகத்திற்கு வெளிச்சமாய் பயனாய் இருப்பதை நிறுத்திவிடும் போது நாம் தமது வெளிச்சத்தை இழந்துவிடுகிறோம். வெளிச்சம் இல்லை எனில் நாமும் இருளுக்குள் சென்று விடுவோம்.

### கேள்விகள்:

1. நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள் என்று இயேசு உரைத்ததின் பொருள் என்ன?
2. உப்பின் நான்கு பண்புகள் என்ன?
3. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்பதின் பொருள் என்ன?
4. இரண்டு நற்காரியங்களை விவரி?
5. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள் என்பதன் பொருள் என்ன?
6. எரியும் விளக்கு ஒன்றை ஒன்றின் கீழ் மறைத்து வைத்து சோதனை செய்து பார்க்கவும்.

பாடம் 18

# என்னுடைய வீடு ஒரு ஜெபவீடு

***வேதபாகம் :*** நெகேமியா 2:12-18; மத்தேயு 21:12-17; மாற்கு 11:15-18; லூக்கா 19:28-40

***மனப்பாட வசனம் :*** என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா, நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்கு சொல்லி உபதேசித்தார். மாற்கு 11:17

***நோக்கம் :*** பாடத்தின் மூலம் தேவனுடைய ஆலயத்தை மதிக்கவேண்டும் என்றும் சபைகளில் சிறுவர்கள் எவ்விதம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் போதித்தல்.



**முன்னுரை:**

பழைய ஏற்பாட்டில் உள்ள நெகேமியா புஸ்தகம் தேவனுடைய நகர மாகிய எருசலேமிற்காக வைராக்கியம் கொண்ட தேவமனிதனை பற்றி விவரிக்கிறது. நெகேமியா சிறையிருப்பில் இருந்தாலும் பரிசுத்த நகரமும் தமது சொந்த தேசமாகிய எருசலேமின்மீது கரிசனை கொண்டிருந்தார். பாபிலோனில் இருந்த சில யூதர்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்தனர். இருப்பினும் தங்கள் தாயகம் திரும்பி செல்ல அவர்களுக்கு விருப்பமில்லை.

இயேசுவினால் அநேக சாதாரண மக்கள் தேவனுடைய

ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்க முன்வந்தனர். அவர்கள் அநேகரால் கடிந்து கொள்ளப்பட்டு, விரோதிக்கப்பட்டு வெறுக்கப்பட்டார்கள். அப்படி எதிர்த்தவர்களில் அநேகர் யூத மத அடிப்படைவாதிகள். இவர்கள் தங்கள் அன்பையும் திறமையையும் அளிக்கவில்லை. அவர்கள் பொறாமையும் இயேசுவோடு வாதாடிகொண்டும் இருந்ததினால் மக்களின் மதிப்பை இயேசு பெற்றது போல் அவர்கள் பெறவில்லை. தங்கள் வெளித்தோற்றத்தில் பக்தியாக இருப்பது போல் நடித்தனர். இவர்கள் மீது இயேசுவுக்கு நாளுக்குநாள் அதிருப்தி உண்டானது.

## பாட விளக்கம்:

### 1. இயேசுவின் வலிமையான தீர்மானம் :

ஒருநாள் இயேசு தமது சீஷர்களிடம் எருசலேமிற்கு செல்லலாம் என்றார். இதை கேட்டவுடன் சீஷர்கள் அதிர்ந்து போனார்கள். இயேசு எருசலேமில் பாடுபடுவதை அறிந்திருந்தனர் (லூக்கா 18:31-33). ஏதாவது காரணத்தை காட்டி இயேசுவைப் பிடிக்க எதிர்பார்த்து காத்திருந்தனர். அவரை கல்லெறியவும், மலை உச்சியில் இருந்து தள்ளிவிடவும் முயற்சி செய்தனர். (மத்தேயு 12:14; மாற்கு 14:1; லூக்கா 4:28,29, லூக்கா 6:11; யோவான் 5:18, யோவான் 8:59, யோவான் 10:31).

இப்படிப்பட்ட நேரத்தில் சீஷர்கள் தனக்கு ஆதரவாகவோ எதிராகவோ மாறும் நேரம் என இயேசு அறிந்திருந்தார். அதேநேரத்தில் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்றும் தீமையோடு எந்த சமரசமும் இருக்கக்கூடாது என்றும் சீஷர்களுக்கு கூறினார். சீஷர்களும் அவருடன் இணைந்து அவரோடு மரிக்கும்படி நாமும் போவோம் என்று ஒரு சீஷன் சொன்னான். (யோவான் 11:16)

### 2. ஒரு ராஜ பவனி:

இந்தியாவில் ராஜாக்கள் யானைகள் மேல் ஏறி பவனியாக சென்று தங்கள் மகிமையை வெளிப்படுத்துவார்கள். இந்திய சாலையில் கழுதையின் மீது பவனி வருபவரை மதிக்கமாட்டார்கள். முன்னொரு காலத்தில் கழுதை ஒரு கனத்திற்குரிய மிருகமாக இருந்தது. ஆனால் அரேபியா, பாலஸ்தீனம் மற்றும் வடமேற்கு இந்திய பகுதிகளில் கழுதை கனம் உள்ளதாக இருந்தது. சாலமோன் கோவேறு கழுதையின் மீது ஏறி பவனியாக கொண்டுவரப்பட்டார். (1ராஜாக்கள் 1:38)

இயேசு கழுதைமீதில் பவனியாக சென்றது மக்கள் நடுவில் மகிமையாக கருதப்பட்டது. அவருக்கு முன்பாக சென்ற மக்கள் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா கர்த்தருடைய நாமத்தில் வருபவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என ஆர்ப்பரித்தனர். பவனியின் ஆர்ப்பரிப்பு சத்தம், இயேசு ராஜா என மக்கள் புகழ்ந்தது, அநேகர் கூடி வந்தது,

மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கியது. முழு நகரமே அசைந்தது.

தங்கள் ஆண்டவரும், போதகரும், ராஜாவும் ஆகிய இயேசுவுக்கு மக்கள் அளித்த மிகப்பெரிய வரவேற்பிற்கு சீஷர்களும் சந்தோஷப் பட்டனர். யூத தலைவர்களோ இயேசுவே! உம்முடைய சீஷர்களை அதட்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு இயேசு பதிலாக இவர்கள் பேசாதிருந்தால் இந்த கல்லுகளே கூப்பிடும் என்றார் (லூக்கா 19:39,40).

### 3. இயேசு தேவாலயத்தை சுத்திகரித்தல்:

யூத அதிகாரிகளின் எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டே இருந்த சமயம் இயேசு எருசலேமில் இருந்தார். அவர் ஆலயத்தில் பார்த்த காட்சிகள் கோபத்தை உண்டாக்கியது. முறையான செயல்கள் ஆலயத்தில் நடைபெறவில்லை. ஆலயத்தில் புறாக்கள், மிருகங்களை வாங்குவது விற்பது நடந்துகொண்டிருந்தது. காசுகாரர்கள் அதிக பணத்தை வசூலித்து கொண்டிருந்தனர். அந்த ஆலயம் முழுவதும் சந்தை போலவும் துர்நாற்றம் ஆகவும் இருந்தது.

நீதியான மனசாட்சி அவருக்கு வெகுண்டெழுந்தது. ஆலயத்தைப் பற்றிய வைராக்கியம் அவருக்குள் பற்றி எழுந்தது. விற்கின்றவர்களையும், வாங்குகின்றவர்களையும் அவர் விரட்டினார். காசுகாரர்களின் பலகைகளை கவிழ்த்து புறா வியாபாரிகளின் ஆசனங்களை தள்ளிவிட்டார். இவ்விதமாய் இயேசு தேவனுடைய ஆலயத்தில் பரிசுத்தத்தையும், தூய்மையும் புறக்கணித்தவர்கள் மேல் தமது கோபத்தை வெளிப்படுத்தினார்.

### 4. நம்மை நாமே கேட்டுக் கொள்வோம்:

நாம் ஒருவேளை எருசலேமிற்கு சென்ற கூட்டத்தில் இருந்தால் எந்த கூட்டத்தில் இருந்திருப்போம். ஓசன்னா என்று ஆர்ப்பரித்த கூட்டம், பார்த்துக்கொண்டிருந்த கூட்டம், எதிர் குரல் கொடுத்த கூட்டம்.

நீங்கள் தேவனுடைய ஆலயத்தை மதிக்கிறீர்களா, பரிசுத்தத் தையும் ஒழுங்கையும் கடைபிடிக்கிறீர்களா, பரிசுத்த தேவ ஆலயத்தைப் பற்றி வைராக்கியமாய் இருக்கிறீர்களா, நீங்கள் தூய்மையான மனதோடு இருந்தால் மட்டுமே இயேசுவைப் பின்பற்ற முடியும். பரலோகத்தில் அவர் ஆளுகை செய்யும்போது உங்களுக்குள் ஆளுகை செய்ய இடம் அமைப்பாயா, இயேசுவை ஏற்றுக்கொண்ட நாம் அவருடைய ஆலயமாக மாற்றப்படுகிறோம்.

**கேள்விகள்:**

1. நெகேமியா புத்தகம் விவரிக்கும் முக்கியமான கருப்பொருள் என்ன?
2. இயேசுவின் எதிரிகள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர்?
3. இயேசுவைப்பற்றி வெறுப்பு அதிகமாக காரணம் என்ன?
4. இயேசுவின் தீர்மானம் என்ன?
5. இந்தியா மற்றும் பிற தேசங்களில் கழுதையை பற்றிய கருத்துக்கள் என்ன?
6. வார்த்தையை விளக்குங்கள்
    - பேசாதிருந்தால் இந்த கல்லுகளே கூப்பிடும்
    - இது ஆண்டவருக்கு வேண்டும்
    - கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்
7. இயேசு தேவாலயத்தை ஏன் சுத்திகரித்தார்?
8. ஆராதனைக்கு பதிலாக தேவாலயத்தில் நடைபெற்றது என்ன?
9. இயேசுவின் எருசலேமை நோக்கிய பயணத்தை பார்த்த மூன்று வகை மக்கள் யார்?

## பாடம் 19

# என்னை நினைவுகூறுங்கள்

***வேதபாகம் :*** மத்தேயு 26:20-29; லூக்கா 22:14-20; 1 கொரிந்தியர் 11:23-32.

***மனப்பாட வசனம் :*** புத்தியில்லாத கலாத்தியரே! நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கியவன் யார், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தி யட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே (கலாத்தியர் 3:1).

***நோக்கம் :*** கர்த்தர் நாம் அனுசரிக்கும்படி சொல்லியிருக்கிற கர்த்தருடைய பந்தி அல்லது கர்த்தருடைய இராப்போஜனம் என்பதன் முக்கியத்துவத்தை தெளிவாக சொல்லித்தருதல்.



**முன்னுரை :**

இயேசு இவ்வுலக வாழ்க்கையில் சந்தித்த இறுதி மாலைப்பொழுது தமது சீஷர்களுடன் இராபோஜனம் செய்யும்படி உட்கார்ந்தார். அந்த இரவு என்ன சம்பவிக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார். சீஷர்களால் அவர்களின் எஜமான் இயேசு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு கொலை செய்யப்படுவார் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. ஆனால் இதைப்பற்றி அறிந்தவராய் தம்மை மனிதகுலத்திற்கு மீட்பு உண்டாவதற்காக ஆயத்தப்படுத்தினார். இந்த இராப்போஜன வேளையில் தம்மை அர்ப்பணிக்கும் விதமாக செய்த செயல் என்றும் அவரை நினைவு

கூறுவதாக உள்ளது.

(இப்பாடத்தில் கர்த்தருடைய இராபோஜனம், இறுதி உணவு வேளை, திருவிருந்து, இறுதி இரவு உணவு யாவும் ஒரே பொருள் உடையவை).

## பாட விளக்கம்:

### 1. இராப்போஜனம்:

ஆயத்தம் செய்யப்பட்ட எருசலேமின் மேல்வீட்டறையில் தமது சீஷர்களுடன் இயேசு சேர்ந்துகொண்டார். அப்பமும் திராட்சைரசமும் இயேசுவுக்கு முன்வைக்கப்பட்டது. இயேசு தமது சீஷர்கள் தமக்கு நடைபெறப்போகும் பாடுகளை எவ்வாறு ஏற்றுக்கொள்ள போகிறார்கள் என்பதை பார்க்கும்படி அவர்கள் ஒவ்வொருவரின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பது போல ஒரு கற்பனை செய்து பார்,

இயேசு தமது கரத்தில் அப்பத்தை எடுத்தார், ஆசீர்வதித்தார், சாப்பிட்டார், பரிமாறும்படி அவர்களிடம் கொடுத்தார். வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காக கொடுக்கப்பட்ட எனது சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தை எடுத்து நன்றி சொல்லி அவர்களிடம் கொடுத்து இதை குடியுங்கள். இது உங்கள் அனைவருடைய பாவங்களுக்காக சிந்தப்பட இருக்கிற புது உடன்படிக்கையின் இரத்தமாய் இருக்கிறது என்றார்.

### 2. முக்கியத்துவம்:

இயேசு தமது சீஷர்களிடம் நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இந்த அப்பம் எனது சரீரமாக இருக்கிறது என்றார். ஏற்கனவே இயேசு தமது சீஷர்களிடம் ஜீவ அப்பம் நானே என்றார். இந்த திராட்சைரசம் சிந்தப்படுகிற எனது இரத்தமாயிருக்கிறது என்றும் சொன்னார். இயேசு தமது சீஷர்களிடம் இந்த அப்பத்தை சாப்பிட்டு திராட்சை இரசத்தை குடிப்பதன் மூலம் எனது சரீரத்தையும் மற்றும் இரத்தத்தையும் நினைவு கூறுகிறீர்கள் என்றார்.

## இவற்றையெல்லாம் எல்லாம் இயேசு செய்வதற்கான நோக்கம் என்ன?

இயேசு தனது சரீரம் பிய்க்கப்படுவதையும் தன் ரத்தம் சிந்தப்படுவதையும் தனது கண்ணீர், பாடுகள், மரண வேதனை யாவையும் தமது சீஷர்கள் நினைவு கூர வேண்டும் என விரும்பினார். இயேசு தனது சிலுவை மரணத்தை ஒரு பலியாகவும் ஞாபகச் சின்னமாகவும் வைத்திருக்க விருப்பம் கொண்டிருந்தார். தனது சீஷர்களும் இந்த கருத்தை புரிந்து வாழ வேண்டும் என்று விரும்பினார். சிலுவையில் அறையப்பட்ட இயேசு அவர்கள் முகத்திற்கு முன்னின்று மறைந்து விடக்கூடாது என்றும் தம்மைப் பற்றிய ஞாபகமும் தான் மனித வர்க்கத்தின் பாவங்களை

எல்லாம் சுமந்து தீர்ப்பவர் என்பதை மறந்து விடவோ மங்கி விடவோ கூடாது என எண்ணினார்.

### 3. பஸ்கா பண்டிகையும் இறுதி இரவு உணவும்:

பஸ்கா பண்டிகை நேரத்தில் இயேசு தனது சீஷர்களுடன் இரவு உணவு சாப்பிடும்படி உட்கார்ந்திருந்தார் (மத்தேயு 26:19). இராப்போஜனம்). அவர்களின் முற்பிதாக்கள் 1400 ஆண்டுகளுக்கு முன் எகிப்து தேசத்தில் நள்ளிரவில் கடைபிடித்த முதல் பஸ்கா அவர்கள் நினைவிற்கு வந்தது. அவர்கள் ஒவ்வொரு நிகழ்வையும் மீண்டும் ஞாபகப்படுத்தி தங்கள் பிதாக்களுக்கு தேவன் பண்ணின வாக்குத்தத்தம் தங்கள் கண்முன் நிறைவேறுகிறது என்று நினைத்திருப்பார்கள்.

- சங்காரத் தூதனிடம் இருந்து தப்பித்துக்கொள்ள பஸ்கா ஆட்டுக் குட்டியின் இரத்தம் இரண்டு வாசல் நிலைகளிலும் மேற்சட்டங்களிலும் பூசப்படுத்தல்.
- பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை கசப்பான கீரையோடு புசித்தார்கள். (அவசரமான இந்த பயணத்தில் அவர்கள் சோர்ந்து விடுவார்கள் என்று எண்ணி அவர்கள் சரீரம் பெலமாக இருக்கும்படியாக கூட இந்த அறிவுரையை கூறியிருக்கலாம்).
- பஸ்கா அனுசரித்தல் விளைவாக எகிப்தின் கொடிய அடிமைத்தனம் நிறைவுற்றது.

### 4. காத்தருடைய இராப்போஜனம் ஒரு புதிய உடன்படிக்கை:

- நாம் கர்த்தரை நினைவு கூறுகிறோம் (1கொரிந்தியர்11:24)
- கர்த்தருடைய மரணத்தை தெரிவிக்கிறோம் (1கொரிந்தியர்11:24-26) சிலுவை மரணம் கிறிஸ்துவுக்கு தோல்வியல்ல. மரணத்தின் அதிபதியாகிய சாத்தானின் மேல் தனது மரணத்தின் மூலம் மேற்கொண்டு மாபெரும் வெற்றியடைந்தார்.

### 5. நம்மை நாம் நிதானிக்க வேண்டும்:

- தகாத விதத்தில் திருவிருந்தை அனுசரித்து வியாதியையும் பலவீனத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடாது.
- நாம் புசிக்கிற அப்பம் கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரம். இது நமக்கு கிறிஸ்துவின் ஜீவனையும் வல்லமையும் ஆசீர்வாதத்தையும் தருகிறது.
- நாம் குடிக்கின்ற திராட்சைரசம் இயேசு நமக்காக சிந்தின இரத்தம் ஆகும். எல்லா பாவங்களிலிருந்து நம்மை சுத்திகரித்து நம்மை குணமாக்க சிந்தப்பட்ட இரத்தம் ஆகும்.
- கிறிஸ்துவின் சரீரம் என்பது கிறிஸ்தவ அங்கத்தினர்களை கொண்ட சபையாகும். நாம் ஒவ்வொருவரையும் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளவும் அங்கீகரிக்கவும் வேண்டும்.
- நாம் நம்மை ஆராய்ந்து பார்க்காவிட்டால் கிறிஸ்துவின் சரீரத்தைப்

பற்றி குற்றம் உள்ளவர்களாய் இருப்போம்.

**நாம் கடைபிடிக்க வேண்டியவைகள்:**

நாம் இந்த கர்த்தருடைய பந்தி அல்லது இராப்போஜனத்தையும் தகுதியான முறையில் அனுசரிக்க வேண்டும். அப்படி செய்யும்போது சுத்திகரிப்பையும் வியாதியிலிருந்து சுகத்தையும் பெறுவோம். நமது மனதிலும் ஆவியிலும் கிறிஸ்துவைப் போல் இருப்போம்.

**கேள்விகள்:**

1. கீழ்க்கண்டவைகள் எந்த சூழலில் சொல்லப்பட்டது:
   "வாங்கி புசியுங்கள்", "நீங்கள் அனைவரும் பானம்பண்ணுங்கள்"
2. நீ பரிசுத்த கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கின்றாயா?
3. இயேசு தனது இறுதி உணவு வேளையில் செய்த செயல்களின் நோக்கம் என்ன?
4. பழைய ஏற்பாட்டில் பஸ்கா பண்டிகை என்றால் என்ன?
5. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற நாம் முன்கூட்டி செய்ய வேண்டியவைகள் என்ன?

பாடம் 20

# யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்தல்

***வேதபாகம் :*** மத்தேயு 26:14-16,47-56; மத்தேயு27:3-5; லூக்கா 22:1-23,39-53.

***மனப்பாட வசனம்:*** என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான். என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். மத்தேயு 12:30

***நோக்கம் :*** கிறிஸ்துவின் அன்புக்குள் பிள்ளைகள் நிலைத்திருக்க உந்தப்பட வேண்டும்.



**முன்னுரை :**

அந்த நாள்களில் இயேசுவுக்கு எதிரான எதிர்ப்பு மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது. இயேசுவை எதிர்த்தவர்கள், ரோமர்களோ, கொடுமைக்காரர்களோ, பிறமத போதனையர்களோ அல்லது சமுதாயத் தில் உள்ள செல்வந்தர்களோ இல்லை. தங்களை ரபிகள் என்றும் மதத்தலைவர்கள், வேதபாரர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள்.

**பாட விளக்கம்:**

**1. ஞாயிறு முதல் வெள்ளிக்கிழமைக்கு இடைப்பட்ட சம்பவங்கள்:**

இயேசு எருசலேம் நோக்கி கழுதை மீது பவனியாக சென்று திரள்கூட்ட மக்களால் கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்ற ஆர்ப்பரித்து வரவேற்றது ஞாயிற்றுக்கிழமையில் நடந்தது. அதே வாரம் வெள்ளி அன்று இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.

### இதற்கு இடைப்பட்ட நாட்களில் இயேசு செய்தது என்ன?

இயேசுவிடம் சில நபர்கள் வந்து ராயனின் படம் பதித்த ஒரு நாணயத்தை காண்பித்து வரி செலுத்துவது சரியா, என்று கேட்டனர். அதற்கு இயேசு ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள் என்று தம்மிடம் குற்றம் காணும்படி நபர்களை அனுப்பின பரிசேயர்களுக்கு பதிலுரைத்தார்.

(a) ஒரு ஸ்திரீ 7 நபர்களை திருமணம் செய்திருந்தாள் முதல் கணவர் இறந்துவிட்டார். பின்னும் இரண்டாவது மூன்றாவது என்று எல்லாருக்கும் பின் அந்த ஸ்திரியும் இறந்துவிட்டாள். இப்படி இருக்க யாருக்கு அவள் மறுமையில் மனைவியாக இருப்பாள் என்ற முட்டாள்தனமான கேள்வியை தன்னிடம் கேட்ட மக்களுக்கும் இயேசு பதில் அளித்தார். (லூக்கா. 20:27-40).

### 2. இயேசு காட்டிக்கொடுக்கப்படுதல்:

இயேசுவின் செல்வாக்கு நாளடைவில் பெருகினதால் அவர் மீது பொறாமை ஏற்பட்டது. அவர்களது போலியான முகத்திரையை இயேசு கிழித்தெறிந்தார். மிகுந்த கோபமும் அவர்மீது உண்டானது. அவர்கள் தேவனுடைய ஆலயத்தில் தவறாக மக்களை ஏமாற்றி சம்பாதித்தவைகளை இயேசு கெடுத்துவிட்டார் என்ற வெறுப்பு அவர்களுக்கு இருந்தது. ஆனால் இவை எல்லாம் இருந்தாலும் இயேசுவால் தங்கள் பதவி பறிபோய்விடும் என்று பயந்தார்கள். ஆகவே இயேசுவை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று ஏதாவது காரணம் தேடிக் கொண்டிருந்தனர். இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது யூதாஸ் அவர்களிடம் வந்து ஒரு ராத்திரி அவரை காட்டிக் கொடுப்பதாக சொன்னான். தங்கள் பல முயற்சிகள் தோற்றுப்போன நிலையில் யூதாஸின் இந்த வார்த்தை அவர்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக் காசு தருவதாக ஒத்துக்கொண்டனர். அந்நேரம் முதல் கூட்டம் இல்லாத நேரத்தில் இயேசுவை காட்டிக் கொடுக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

### 3. இயேசு தனக்கு சம்பவிக்க போகும் அனைத்தையும் அறிந்திருந்தும் அதை மாற்றவோ விட்டுவிடவோ விரும்பவில்லை:

இயேசு தனக்கு எதிராக நடக்கும் எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் கொஞ்சம் முன்னதாக தமது சீஷர்களுடன் வரும்போது தன்னை காட்டிக் கொடுப்பான் என்பதை இயேசு அறிந்திருந்தார். பஸ்கா பண்டிகையை மோசே காலத்தில் இருந்து கடைப்பிடிக்கப்படுகிற வழக்கமாகும். உங்களில் ஒருவன் என்னை காட்டிக்கொடுப்பான் என்று இயேசு சொன்னது சீஷர்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இந்த பஸ்காவில் யூதாஸ் பங்கு பெற்றிருந்தும் எல்லாவற்றையும் பற்றி

அறிந்திருந்தும் பயத்தினால் அவர் ஓடவில்லை. அந்த பண்டிகை இயேசுவுக்கு வழி அனுப்பும் விழாவாக இருந்தது. யாருக்கும் எந்த சந்தேகமும் வராத அளவு யூதாஸ் இயேசு கொடுத்த அப்பத்தைப் புசித்து விட்டு எழுந்து சென்று விட்டான்.

### 4. இயேசுவின் தனி ஜெபமும் வேதனையும்:

பஸ்கா பண்டிகைக்கு பிறகு இயேசுவும் சீஷர்களும் பெத்தானியா என்ற சிறிய கிராமத்திற்கு அருகில் இருந்த கெத்சமனே தோட்டத்திற்கு சென்றார்கள். அது ஒரு பிந்தைய இரவு பொழுதாக இருப்பினும் இயேசு அங்கு ஜெபித்தார். இது இயேசுவுக்கு வழக்கமான ஜெபிக்கும் இடம் என்பது யூதாசுக்கு நன்றாகத் தெரியும். அவர் ஜெபிக்கையில் அவருடைய வியர்வை இரத்தத் துளிகளாய் தரையில் விழுந்தது (லூக்கா 22:44). சீஷர்களோ தூங்கினார்கள். இயேசு மட்டுமே ஜெபித்தார்.

### 5. இயேசு கைது செய்யப்படுதல்:

இயேசு ஜெபத்தை முடிந்த உடனே யூதாஸ், பிரதான ஆசாரியர் வேதபாரகர் மற்றும் அவர்களால் அனுப்பப்பட்ட போர்வீரர்கள் பட்டயத்தோடும் தடிகளோடும் திரளான மக்களோடும் வந்தனர். இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி அவரை முத்தமிட்டான். இருட்டில் இயேசுவை காண இதுவே அடையாளம் என அவன் சொல்லி இருந்தான்.

இயேசு யூதாஸிடம் மனுஷகுமாரனை “முத்தத்தாலேயோ காட்டிக் கொடுக்கிறாய்” என்று அவனிடம் கேட்டும் அவன் தனது மனதை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த கொடுமையான காட்டிக்கொடுத்தல் சரித்திரத்தில் தனித்தன்மையான குற்றமாக மாறிவிட்டது. பேதுரு வீரர்களை எதிர்க்க முற்பட்டார். இயேசு அவரை தடுத்தார். இயேசுவோ தனது வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய தேவ திட்டத்திற்கு தன்னையே கொடுத்தார்.

### 6. சிதறி ஓடிய சீஷர்கள்:

இயேசு கைது செய்யப்பட்டதை கண்ட சீஷர்கள் சிதறி ஓடினார்கள். பேதுரு தூரத்தில் அவரை பின்பற்றினான். யோவானோ அவரோடு கூடவே இருந்தான். பேதுரு மூன்றுமுறை இயேசுவை மறுதலித்தான். ஆனாலும் தனது குற்றத்தை உணர்ந்து மனம் கசந்து அழுது மனம் திரும்பினான்.

### 7. யூதாஸிற்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டதா?

பேதுருவை காட்டிலும் யூதாஸ் தான் செய்த தவறை நினைத்து மனச்சாட்சியில் குத்தப்பட்டான். இயேசு தனது போதனையில் சத்துருக்களை நேசியுங்கள், உபத்திரப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் கொடு என்று சொல்லி இருக்கிறார். இப்படிப்பட்டவர் யூதாஸையும் மன்னிப்பார்.

இயேசுவிடம் மனம்திரும்புவதற்கு பதில் தன்னையே தூக்கிலிட்டுக் கொண்டான். சரித்திரத்தில் மிகவும் வெறுக்கப்பட்ட பாத்திரமாகவும் மாறிவிட்டான்.

**8. காட்டிக்கொடுத்த யூதாஸின் பிறப்பும் வளர்ப்பும்:**

இப்படி ஒரு கொடிய காட்டிக் கொடுப்பவனாக மாறுவது ஒரு நாளில் நடந்துவிடும் காரியமல்ல. அவன் தனது ஆரம்பத்தில் உண்மையுள்ளவன் ஆகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் ஆகவும் இருந்தான். இல்லையெனில் இயேசு அவனை பொக்கிஷதாரராக தேர்வு செய்து இருப்பாரா, இந்த வாய்ப்பை வேறு யாருக்கும் தராமல் தொடர்ந்து அவனுக்கே கொடுத்தார். ஆனால் ஆசை அவனை இறுதியாக காட்டிக் கொடுப்பவன் ஆக மாற்றியது.

## கேள்விகள்

1. ஓசன்னா ஞாயிறு அன்று நடந்தது என்ன?
2. இயேசுவை வார்த்தையில் குற்றம் பிடிக்க பரிசேயர்கள் கேட்ட கேள்விகள் என்ன?
3. மேற்கண்ட கேள்விக்கு இயேசுவின் பதில் என்ன?
4. யூத தலைவர்கள் இயேசுவை ஒழித்துக்கட்ட ஏன் முடிவு செய்தார்கள்?
5. இயேசுவை காட்டிக்கொடுத்தது யார்? அவன் பெற்ற கூலி என்ன?
6. பின்வரும் பகுதிகளை விளக்குக.
   - "ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள்"
   - "உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான்"
7. ஜெபம் பண்ண இயேசு பயன்படுத்திய இடம் எது?

You are the only Bible some
unbelievers will ever read
*John Mac Arther*

# கேள்வித்தாள் - 2

## மதிப்பெண்கள் : 50

(10 x 1 = 10)

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சில வார்த்தைகளில் விடையளி**

1. எந்த சுவிசேஷங்களில் இயேசுவின் வம்சவரலாறு உள்ளது?
2. எருசலேமில் நுழைவதற்கு இயேசு பயணித்த மிருகம் எது?
3. இயேசுவை கைது செய்ய யூதர்கள் செய்தது என்ன?
4. இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அவர் நீதிமான் என்று சாட்சி கூறிய இருவரை கூறு?
5. இயேசு ஒரு மனிதன் என்று நிரூபிக்கிற மூன்று வார்த்தைகள் என்ன?
6. கேரன் ஹாத்தின் என்றால் என்ன?
7. தொலைந்து போன ஆடு என்று இயேசு குறிப்பிட்டது யாரை?
8. அப்போஸ்தலர்கள் என்றால் யார்?
9. 12 வயது சிறுவனுக்கு கொடுத்த பெயர் என்ன?
10. ஒருவர் எப்பொழுது தேவனை தரிசிப்பார்கள்?

**II. யார் யாரிடம் கூறியது?** (5 x 2 = 10)

11. இவரிடத்தில் யாதொரு குற்றத்தையும் காணோம்.
12. வாங்கிப் புசியுங்கள்.
13. உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான்.
14. ஆண்டவரோ நானோ.
15. ஸ்திரியே அவரை நான் அறியேன்.

**III. ஏதாவது 5-க்கு விரிவான விடையளி** (5 x 3 = 15)

16. இயேசு எருசலேம் தேவாலயத்தை எவ்வாறு சுத்திகரித்தார்?
17. இயேசு மனிதனாக வாழ்ந்தார் என்பதை விவரி.
18. சுவிசேஷம் அறிவிக்க சீஷர்களுக்கு இயேசு சொன்ன அறிவுரைகள் என்ன?
19. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் அல்லது நீங்கள் உலகிற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் விளக்குக.
20. கர்த்தரின் பந்தியை அனுசரிக்கும் முன் செய்யவேண்டிய ஆயத்தங்கள் என்ன?
21. இயேசுவின் எருசலேம் பவனியை கவனித்துக் கொண்டிருந்த மூன்று வகை மக்கள் யார்?

**IV. இந்த காலாண்டில் படித்த 5 மனப்பாட வசனங்கள் என்ன?** **(5x2=10)**

**V. சாத்தானால் ஏற்பட்ட மூன்று சோதனைகளை இயேசு எவ்வாறு மேற்கொண்டார்?** (5)

## காலாண்டு III

# சிலுவையில் அறையப்படுதல்

### பாடம் 21

# பேதுரு இயேசுவை மறுதலித்தல்

***வேதபாகம் :*** ஏசாயா 53:1-12; லூக்கா 22:54-62.

***மனப்பாட வசனம் :*** ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. எபிரெயர் 10:35,36

***நோக்கம் :*** நாம் அவரை மறுதலிக்கையில் அவர் எந்த அளவு வேதனை அடைகிறார் என்பதைப் போதித்தல்.



**முன்னுரை:**

பேதுருவும் சகசீஷர்களும் ரோம சாம்ராஜ்ஜியத்திடமிருந்து யூதேயாவை பிரித்து சுதந்திர தேசமாக நிலை நிறுத்துவார் என எண்ணியிருந்தனர். இயேசு தாம் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு சிலுவையில் அறையப்படுவேன் என்றும் சொன்னது பேதுருவுக்கு ஏமாற்றமாக இருந்தது. இப்படிப்பட்ட சம்பவம் நடக்கக்கூடாது, நடக்கவே கூடாது என்று நினைத்தார். அந்த நாள் முதற்கொண்டு இயேசுவின் மீது வைத்திருந்த நம்பிக்கையில் குறைந்து கொண்டே போனார்.

அவர் இயேசுவுடன் இணைந்து கொண்டதை குறித்து வெட்கப்பட்டார். அவருக்கு சீஷராக மாறியது பெரிய தவறு என்று எண்ணினார்.

**பாட விளக்கம்:**

**1. இயேசு- வேதனைப்படும் உயிர்:**

இயேசு இவ்வுலகத்திற்கு தேவனையும் தேவ அன்பையும் வெளிப் படுத்த வந்தார். அந்த அன்பின் நிமித்தம் வியாதிகளை சுகமாக்கி, துயரமடைந்தவர்களை ஆறுதல்படுத்தி, பாவிகளின் பாவத்தை மன்னித்து, சமுதாயத்தால் வெறுத்து தள்ளப்பட்டவர்களையும் கடின இருதயம் கொண்ட பாவிகளையும் மன்னித்து அவர்களுக்கு சிநேகிதர் ஆனார். ஆனால் சமுதாயம் அவரை துன்பப்படுத்தி வேதனையைக் கொடுத்தது. பரிசேயர்கள், வேதபாரகர்கள், மூப்பர்கள் மற்றும் பிரதானஆசாரியர்கள் இயேசுவினிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கும்படி பல முயற்சி செய்தனர். இவை எல்லாவற்றையும் விட யூதாஸின் காட்டிக்கொடுத்தல் அவருக்கு மிகுந்த வேதனையை தந்தது. பேதுரு அவரை மறுதலிக்கமாட்டேன் என சொல்லியும் திரும்ப திரும்ப மறுதலித்தான். இது சரீர வேதனையுடன் மனதளவில் மிகுந்த வேதனையடையவைத்தது.

**2.பேதுரு மறுதலித்தல்:**

இயேசுவின் மிக சிநேகிதனும் சீஷருமான பேதுரு ஒன்றுக்கு மூன்று முறை அவரை மறுதலித்தான் என்பது ஒருவேளை நம்ப முடியாததாக கூட இருக்கலாம். இது எப்படி பேதுருவால் முடிந்தது அவரது மனம் எப்படி மாறியது என பார்ப்போம். இயேசு பேதுரு மற்றும் அவன் சகோதரன் அந்திரேயாவை அழைத்து என்னை பின்பற்றுங்கள். நான் உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

இயேசு தம் அன்பினிமித்தம் கிருபையினிமித்தம் செய்த அற்புதங்களையும், நற்கிரியைகளையும் அவருடைய போதனைகளையும் பேதுரு கவனித்துக் கேட்டார். இயேசு தேவனுடைய குமாரன் என புரிந்து கொண்டு அதை பிறருக்கு முன்பாக அறிக்கையும் செய்தார். தீர்க்கதரிசிகளால் முன் உரைக்கப்பட்ட மேசியா இயேசு என நம்பினார். அவர் மீண்டும் யூதா ராஜ்ஜியத்திற்கு சுதந்திரம் பெற்று ராஜாவாக மாறுவார். தான் அவருடன் ஒரு மந்திரியை போல் இருப்பேன் என்று கூறி நம்பி இருப்பார். இப்படியெல்லாம் பேதுரு கற்பனையில் இருக்கும்போது மனுஷகுமாரன் பாடுபட்டு மரிப்பார் என்று இயேசு கூற ஆரம்பித்தார். இதை பேதுருவால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. இயேசுவின் உண்மையான நம்பிக்கைக்குரிய சிநேகிதனாக இருந்தான். இயேசுவைப் பிடிக்க வரும்போது அவர்களை தாக்க பட்டயத்தை வைத்திருந்தான்.

ஆனால் இயேசு தம்மைப் பிடித்துக்கொண்டு போகவும் பிரதான ஆசாரியர் முன்பு விசாரிக்கப்பட கொண்டு போகவும் ஒப்புக்கொடுத்த

போது அவன் அவர்மேல் வைத்த எல்லா நம்பிக்கையும் சிதறிப்போனது. இயேசு பெலவீனமானவரா? தன்னை பாதுகாக்க இயலாதவரா? அவர் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பவரல்லவா? இப்படி பல சந்தேகங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அவனுடைய மனதுக்குள் எழுந்தது. தான் இயேசுவைப் பின்பற்றினது மிகப்பெரிய முட்டாள்தனம் என்று கூட அவன் தன்னை கேட்டிருப்பான். அதனால் தான் வேண்டுமென்றே நான் அவரை அறியேன் என்று பதிலுரைத்தான்.

### 3. இயேசுவின் வியாகுலமும் பேதுருவின் கண்ணீரும்:

இது ஒரு நாடகத்தின் தொடர்ச்சி போல உள்ளது. உன்னால் இதை கற்பனை செய்து பார்க்க முடியுமா, இன்று சேவல்கூவும் முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு சொல்லி வெகு நேரம் ஆகவில்லை. அதற்குள் அப்படியே மூன்று முறை மறுதலித்தான். அதற்குப் பின் நடந்தது என்ன?

இயேசு துயரம் நிறைந்த கண்களுடன் பேதுருவை பார்த்தார். பேதுருவும் இயேசுவை பார்த்தான். இரண்டு கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன. உடனே பேதுருவின் உள்ளம் உடைந்து உருகி மெழுகானது. தனது குரு தன்னால் கவலை அடைந்ததுடன் கைவிடப்பட்டார் என்பதை உணர்ந்ததால், உடனே மனம் கசந்து அழுது ஆழ்ந்த துயரம் அடைந்தான். இவைகளுக்கு பின்பு தன் வாழ்நாள் முழுவதும் பேதுரு இயேசுவை மறுதலிக்கவில்லை. மாறாக அவருக்காக பழிகளை சுமக்கவும் இரத்த சாட்சியாய் மாறினான்.

### 4. நாம் இயேசுவை மறுதலிக்கிறோமா?

நாம் வெளிப்படையாக நான் இயேசுவை அறியேன் என்று சொல்லி அவரை மறுதலிப்பதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் போல் நடந்து கொள்ளும்போது இயேசுவை மறுதலிக்கிறோம். வேலைக்காகவும், படிப்பு காரியங்களுக்காகவும் சில சூழ்நிலைகளில் தனது பெயரை கிறிஸ்தவர் அல்லாதவர்களின் பெயராக மாற்றிக் கொள்ளும் போதும் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம். நாம் சொந்த ஊரிலோ, வீட்டிலோ ஒரு நல்ல ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாய் நாம் வாழும் போது இவ்வுலகில் ஒரு அந்நிய தேசம் என்று அறிக்கை செய்கிறவர்களாயிருக்கிறோம்.

நீங்கள் எப்பொழுதாவது உங்கள் ஆண்டவரின் பெயரை வெட்கப் படுத்தி, இழிவுபடுத்தி அதனால் அவரை துக்கப்படுத்தியதுண்டா? நாம் இயேசுவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ துக்கப்படுத்தும் போது அவரின் இருதயம் வேதனை அடைவதற்கு நாமே காரணமாகி விடுகிறோம். நாம் அவரை கடிந்து கொண்டு சிலுவையிலும் அடிக்கிறோம். அவரது காயங்களில் திரும்பவும் ஆணிகளை அடிக்கிறோம். இதற்காக

நாம் உண்மையாக துக்கப்பட்டு மனம் திரும்பினால் மட்டுமே அவர் மகிழ்ச்சியடைவார்.

**கேள்விகள்:**

1. இயேசுவைக் குறித்து சீஷர்களின் எதிர்பார்ப்புகள் என்ன?
2. இயேசு சமுதாயத்திற்கு என்ன செய்தார்?
3. இயேசு பற்றி பேதுரு கொண்டிருந்த எதிர்பார்ப்புகள் என்ன? இது பிற்காலத்தில் எப்படி மாறியது? இதனால் ஏற்பட்ட ஏமாற்றம் என்ன?
4. எத்தனை முறை பேதுரு இயேசுவை மறுதலித்தார்? யாரெல்லாம் அவரை கேள்வி கேட்டார்கள்?
5. பேதுரு இயேசுவை மறுதலித்தது இரவிலா? பகலிலா? ஏன்?
6. பேதுரு எப்படி மனம் திரும்பினான்?
7. ஒருவன் கிறிஸ்துவின் சீஷன் என்று வார்த்தையிலும், செயலில் கிறிஸ்துவின் எதிரியாகவும் இருக்க முடியுமா?

### பாடம் 22

# இயேசு பிலாத்திற்கு முன்பாக விசாரிக்கப்படுதல்

***வேதபாகம் :*** மத்தேயு 27:11-13; யோவான் 18:28-40; 19:1-16.

***மனப்பாட வசனம் :*** அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமல் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். 1 பேதுரு 2:22,23.

***நோக்கம் :*** இச்சமுதாயத்தில் கிறிஸ்தவத்தை அடக்கும்படி கிறிஸ்துவை புறக்கணிக்கும்படி எப்படிப்பட்ட சூழல் எழும்பினாலும் நாம் அதற்கு உடன்படாமல் கிறிஸ்துவுக்காக நிற்பவர்களாய் இருக்கவேண்டும் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.



**முன்னுரை:**

யூதத் தலைவர்கள் இயேசு சொன்னதின் கருத்தை தவறாக மாற்றி ரோம ஆட்சிக்கு எதிராக இவர் கலகம் செய்தார் என்று நீதிமன்றத்தில் புகார் அளித்தார்கள். ஒருங்கிணைந்து ஒரு பூமிக்குரிய ராஜ்யம் உருவாக்க வரவில்லை. தேவன் இயேசுவை அபிஷேகித்து உலகத்திற்கு அனுப்பினார். அதற்கு முன்பாக விசாரிக்கப்படும்போது கூட இதை மறுக்காமல் யூதருடைய ராஜாவா என்ற கேள்விக்கு தைரியத்துடன் நீ சொன்னபடிதான் என்று பதிலளித்தார்.

**பாட விளக்கம்:**

**1. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு:**

இயேசுவின் காலத்தில் யூதேயா ஒரு மாகாணமாக ரோம ஆட்சிக்குக்கீழ் இருந்தது (கி.மு.200 - கி. பி. 450). ரோம ஆளுநர் அலுவலக பணியாக யூதேயாவிற்கு வருவார்கள். யூதேயாவில் ஏதாவது கலவரம் ஏற்படுமோ என்ற அச்சத்தில் யூதர்களின் மத உரிமைகளில் தலையிடமாட்டார். அதோடு கலவரம் ஏற்படுத்துகிறவர்களை தண்டித்தார்.

இந்த காலத்தில் இயேசுவைப் பற்றி முழு யூதேயாவிலும் பரவியது. பிலாத்து இயேசு பிரபலமாவதை கேள்விப்பட்டான். அவர் வியாதிகளை குணப்படுத்தி, மரித்தோரை எழுப்பி, குஷ்டரோகிகளை சுகமாக்குவதையும் கேள்விப்பட்டான். பிலாத்துவின் மனைவி இயேசுவின் ஊழியத்தை கவனித்து வந்தாள்.

இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரை யூதர்களின் நியாய சங்கத்திற்கு முன்பு நிறுத்தினார்கள். அவர்கள் எல்லாரும் இந்த இராத்திரியிலே இயேசுவை விசாரித்து தீர்த்துக்கட்ட வேண்டும் என்று துடித்தார்கள். பொழுது விடிந்துவிட்டால் மக்கள் எல்லோரும் இயேசு பிடிக்கப்பட்டார், கைது செய்யப்பட்டார், மரண தண்டனைக்கு உட்பட்டார் என்பதை அறிந்தால் பெரும் கலவரம் ஏற்படும் என்று பயந்தார்கள். அவர்கள் இயேசுவை மரண தண்டனைக்கு உட்படுத்தி விட வேண்டும் என்று போராடினார்கள்.

**2. இயேசுவினிடத்தில் எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை:**

இயேசு தனது வாயைத் திறவாமல் பிலாத்துவிற்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார். அவர் யூதர்களுக்கு ராஜா என சொன்னதாகக் கூறி தொடர்ந்து அவர் மேல் குற்றம்சாட்டினார்கள். பூமிக்குரிய சிம்மாசனத்தில் அமர வரவில்லை. மாறாக தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாக மனிதர்களின் இருதய சிம்மாசனத்தில் அமர விரும்பினார். இயேசு ஒரு ராஜா என்பது மக்கள் மத்தியில் பல வேறுபட்ட கருத்துக்களை ஏற்படுத்தியது. இயேசு அமைதியாக இருந்தார். அவரை சிலுவையில் அறைய வேண்டும் என ஓயாமல் குரல் எழுப்பிக்கொண்டும், தவறான குற்றங்களை சொல்லிக் கொண்டும் இருந்தனர். (யோவான் 19:4; லூக்கா 23:14)

பிலாத்து நியாயாசனத்தில் அமர்ந்து இருக்கையில் அவனது மனைவி ஒருவனை அனுப்பி இந்த நீதிமானை நீர் ஒன்றும் செய்யவேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்றாள். இயேசுவைக் கொலை செய்ய துடிக்கும் அந்த கும்பலுடன் தனது கணவரும் சேர்ந்து அந்த பாவத்தை பங்கு போட்டுக்கொள்ளக்கூடாது என நினைத்தாள். எந்த சட்டவிரோத செயலும் அவரிடத்தில் காணவில்லை

என்று அவன் மனைவி சொன்னது அவன் நினைவில் இருந்தது. எனினும் மறுபக்கம் யூதத்தலைவர்கள் இரண்டில் ஒன்று என முடிவெடுக்கும்படி அவனை கட்டாயப்படுத்தினர். ஆகவே உடனடியாக ஒரு தீர்ப்பை அளிக்க வேண்டியதாயிருந்தது.

பிலாத்து கூட்டத்தை பிரியப்படுத்த விரும்பினான். ரோம அரசாங்கத்தையும் திருப்திப்படுத்த வேண்டும் என எண்ணினான். இயேசு குற்றமற்றவர் என்று அறிந்த மாத்திரத்தில் அவரை உடனே அவன் விடுவிக்கவேண்டும். ஆனால் அவன் குழம்பிப்போனான். அவனது மனம் அலைகடல்போல் இருந்தது

## 3. பிலாத்து விட்டுவிட தீர்மானித்தல்:

திடீரென பிலாத்துவின் மனதில் ஒரு யோசனை வந்தது. பண்டிகை நேரங்களில் ஒரு குற்றவாளியை விடுவிப்பது அவர்கள் வழக்கமாயிருந்தது. இன்றும் சில நாடுகளில் இப்படி நடைபெறுகிறது. இந்த பாரம்பரிய முறைப்படி இயேசு விடுவிக்கப்படுவார் என்ற நம்பிக்கையில் மக்களின் கருத்தையும் கேட்டான். ஆனால் மக்களோ பரபாசை விடுதலை செய்து இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என கேட்டார்கள்.

மக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்திய ஒரு பயங்கரமான குற்றவாளி விடுவிக்கும்படி ஒருபோதும் யாரும் கேட்டதில்லை என்று பிலாத்து வியந்தான். இயேசுவுக்கு ஆதரவாக சிலர் குரல் எழுப்பினாலும் எதிர்ப்புகள் அதிகமாக இருந்தது. இயேசுவை விடுவிக்க பயந்தான். வேறு வழியில்லாமல் தனது சுய விருப்பத்திற்கு மாறாக அவரை விடுதலை செய்ய தனக்கு அதிகாரம் இருந்தும், அவர் எந்த தவறும் செய்யாத நீதிமான் என்று அறிந்தும், அவரை விடுதலை செய்வதற்கு பதில் அவருடைய சத்துருக்களிடம் ஒப்புக்கொடுத்தான். கூடியிருந்த அவர்களுக்கு முன்பாக பிலாத்து தனது கைகளை கழுவி இந்த நீதிமானின் இரத்தபழிக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறினான். இப்படி பிலாத்து கிறிஸ்துவுக்கு தவறாக தீர்ப்பை வழங்கினான்.

## 4. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்:

- நாம் இயேசுவை அறியாமல் இருக்கிறோமா?
- கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்களின் பக்கமா? ஆதரவாக அவருக்கு இருந்தவர்களின் பக்கமா, யார் பக்கத்தில் இருக்கிறோம்?
- நீங்கள் இயேசுவை மறுதலிக்கிறீர்களா?
- நீங்கள் இயேசுவை காட்டிக் கொடுத்தீர்களா?
- நீங்கள் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டீர்களா? அநேகர் இயேசுவை மறந்தும் மறுதலித்தும் கொலை செய்கின்றனர்.

எப்படி எனில் நாம் பொய் சொல்லும் போதும், திருடும் போதும், பொறாமை கொள்ளும் போதும், அவரை மறுதலிக்கிறோம். காட்டிக் கொடுக்கிறோம். சிலுவையில் அறைகிறோம்.

பொல்லாதவர்களின் கூட்டத்திற்கு பயந்து இயேசுவை எதிரிகளிடம் ஒப்படைத்தான் பிலாத்து. நாமும் கூட பிலாத்துவை போல பல வேளைகளில் மனிதர்களை பற்றிய பயத்தில் அவரை ஒப்புக் கொடுத்து விடுகிறோம். நாம் அவரை நேசிப்பதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் இயேசுவுக்காக நிற்கும்போது உலகம் முடியும் வரை இயேசு நமக்காக நம்முடன் இருப்பார்.

**கேள்விகள்:**

1. முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தையும் யூதேயாவையும் ஆண்டது யார்?
2. ரோம அரசாங்கங்கள் யூதரின் மத காரியங்களுக்கு ஏன் தலையிடாது?
3. பிலாத்து இயேசுவை பற்றி கேள்விப்பட்டது என்ன?
4. பிலாத்துவின் மனைவி இயேசுவைப் பற்றி அவரிடம் கூறியது என்ன?
5. இயேசுவை இரவில் ரகசியமாய் விசாரித்தது ஏன்?
6. சோதனை ஏற்படும் நேரமெல்லாம் இயேசு அமைதியுடன் இருந்தது ஏன்?

பாடம் 23

# இயேசு சிலுவையில் அறையப்படுதல்

***வேதபாகம் :*** மத்தேயு 27:27-54; மாற்கு 15:1-41; லூக்கா 23:13-33.

***மனப்பாடவசனம்:*** நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நாமெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். (ஏசாயா 53:6)

***நோக்கம் :*** இயேசு நமக்காக எவ்வளவு பாடுபட்டார் என்பதையும் அவர் நம் மீது வைத்துள்ள அன்பே இத்தனை பாடுகளையும் சகிக்க வைத்தது என்பதை மாணவர்கள் அறிய செய்தல்.



**முன்னுரை :**

வெள்ளிக்கிழமை அதிகாலை வரையிலும் சோதனைகளால் பாடுபட்டார். அவர் கேலி செய்யப்பட்டார். அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். முகத்தில் காறி உமிழ்ந்தார்கள். அவரது கண்களை கட்டி அடித்தவன் யார் என்று கேட்டனர். சைகை செய்து கிண்டல் செய்தனர். சட்டத்திற்கு புறம்பாக அவர்களால் நடத்தப்பட்டார்.

நீதிபதி ஆகிய பிலாத்து நான் இந்த நீதிமானிடம் எந்த குற்றத்தையும் காணேன் என்று எல்லாருக்கும் முன் சொல்லியிருந்தாலும் இயேசுவை விடுவிக்கவில்லை.

தனது மனதை திருப்திப்படுத்திக் கொள்ள எல்லாருக்கும் முன் கைகழுவி விட்டான். இயேசு அப்பொழுது நடைமுறையில் இருந்த

ரோம அரசு சட்டத்தின்படி விசாரிக்கப்படவில்லை. பிலாத்து இயேசுவை அவர்களின் விருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்தான்.

**பாட விளக்கம்:**

**1. பிலாத்து இயேசுவை கைவிடுதல்:**

அவருடைய எதிராளிகளின் விருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்தான்.

- போர்ச்சேவகர் கூட்டம் முழுவதையும் இயேசுவை சுற்றி நிறுத்தினார்கள். (மத். 27:27).
- அவரை வாரினால் அடித்து நிர்வாணமாக்கினார்கள். (மத். 27:28).
- முட்கள் பின்னி அவர் தலையில் வைத்து அழுத்தினார்கள். இயேசுவை இகழ்ந்தார்கள். (மத்.27:29).
- அவர் முகத்தில் காறி உமிழ்ந்தார்கள். கோலினால் தலையில் அடித்தார்கள். (மத். 27:30).
- சுமக்கும்படி சிலுவையை அவர் மீது வைத்தார்கள். (யோவான் 19:19). (மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இப்படி சிலுவை சுமப்பது வழக்கமாயிருந்தது)
- கசப்பும் புளிப்புமான ரசத்தை குடிக்க செய்தார்கள். (மத். 27:33).

இயேசு எந்த குற்றமும் செய்யாதவராக இருந்தும் நம் ஒவ்வொருவரின் அக்கிரமங்களுக்காக நமக்கு பதிலாக தண்டனையை தாமாகவே ஏற்றுக்கொண்டு தண்டிக்கப்பட்டார். (ரோமர் 5:8)

**2.சிலுவையில் அறையப்படுத்தல்:**

எபிரேய மொழிகளில் கொல்கொதா என்கிற "கபாலஸ்தலம்" என்று பொருள் கொண்ட இடம் நோக்கி இயேசு பாரமான சிலுவையை சுமந்து சென்றார். அங்கே அவருடைய கைகளை கால்களை சேர்த்து சிலுவையில் வைத்து அடித்தனர். இயேசுவை சிலுவையில் ஆணி அடித்து பின்பு சிலுவையை உயர்ந்து நிற்க செய்தனர். சிலுவையில் இயேசு தாங்க முடியாத வலியால் துடித்தார். மலைமேலே இரண்டு கள்ளர்கள் மத்தியில் தொங்கினார். யோவான் 19:18

**3.இயேசு தமது ஆவியை விடுதல்: (மத்தேயு 27:51-52)**

- ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பது மணி நேரம் வரை அப்பகுதி முழுவதும் பயங்கர இருள் சூழ்ந்து கொண்டது. (இந்திய நேரப்படி பகல் 12 முதல் 3 மணி வரை)
- தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது.
- பூமி அதிர்ச்சிகள் உண்டாயின.
- பாறைகள் உடைந்தன.
- கல்லறைகள் திறக்கப்பட்டு அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.

### 4. விளைவுகள்:

- நூற்றுக்கு அதிபதி
  மெய்யாகவே இந்த மனுஷன் தேவகுமாரன். மத்தேயு 27:54
- சீஷர்கள்
  சீஷர்கள் நம்பிக்கையை இழந்து குழம்பிப்போனார்கள். ராஜ்யம் உருவாக்கப்படும் என்று கொண்டிருந்த நம்பிக்கை இத்துடன் முடிந்தது. தாங்கள் இயேசுவை ஏன் சந்தித்தோமோ என்று புலம்பினார்கள். தங்களை சந்தித்தது, என் பின் வாருங்கள் என்று சொன்னது, அதன்படி எல்லாவற்றையும் விட்டு அவர் பின்னே சென்றது, இந்த சம்பவங்கள் துர்பாக்கியம் என எண்ணி வருந்தினர்.
- மூப்பர்கள்:

இவர்களோ பெருமூச்சு விட்டு ஆறுதல் அடைந்தனர். தங்களுக்கு ஏற்பட்ட பெரிய தலைவலி ஒழிந்தது. தங்களின் பொய் முகத்தை கிழித்து, சமுதாயத்தில் தங்களை சிக்கவைத்த, தங்கள் அதிகாரத்தை கேள்வி கேட்ட மனிதன் அழிந்தான் என சொன்னார்கள். இயேசு மரித்தார், தோற்றார் என ஆர்ப்பரித்தார்கள். மக்கள் அவர்களோடு சேர்ந்துகொண்டு, அவன் இல்லை, அவன் ஒன்றும் இல்லை, தேவ குமாரன் இல்லை என்று சொன்னார்கள். சில நாள்கள் நிம்மதியாக தூங்கலாம் என்று மூப்பர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் மிகப்பெரும் தவறிழைத்துவிட்டனர்.

### கேள்விகள்:

1. பின்வரும் வார்த்தையை விளக்கி பொருள் கூறுக.
   - நான் இவரிடத்தில் எந்த குற்றத்தையும் காணேன்
   - மெய்யாகவே இந்த மனுஷன் தேவகுமாரன் தான்
2. எல்லாருக்கும் முன்பாக பிலாத்து ஏன் கைகளைக் கழுவினான்?
3. இயேசுவினிடத்தில் எந்த குற்றமும் இல்லை என்று தெரிந்தும் ஏன் பிலாத்து அவரைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்தான்?
4. இயேசுவுக்கு ஏற்பட்ட 3 மனரீதியான துன்பங்கள் பற்றி எழுது.
5. புளிப்பும் கசப்பும் கலந்த திராட்சை ரசம் ஏன் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது?
6. இயேசு தன் சரீரத்தில்பட்ட பாடுகளை பற்றி பத்து வரிகள் எழுதுக.
7. ஆவியை விடும் போது ஏற்பட்ட சம்பவங்கள் என்ன?
8. இயேசுவின் மரணத்துக்குப் பின்பு சீஷர்களின் மனநிலை என்ன?
9. சிலுவை மரணத்தைப்பற்றி யூத மூப்பர்கள் எண்ணம் என்ன?
10. நீங்கள் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் உட்பட்ட காலத்தில் இருந்திருந்தால் எவ்விதம் சிந்தித்து இருப்பீர்கள்?

பாடம் 24

# எல்லாம் முடிந்தது

***வேதபாகம் :*** யோவான் 19:17-30.

***மனப்பாட வசனம் :*** நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8)

***நோக்கம் :*** முழு மனுக்குல இரட்சிப்பிற்காக தேவனுடைய திட்டமானது இயேசுகிறிஸ்து சிலுவையில் செய்த தியாகத்தினால் எப்படி நிறைவேறியது என்பதை பற்றி விளக்குதல்.



**முன்னுரை :**

முதலாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. செய்திகள் அனுப்புவதில் ராணுவத்திற்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டது. ராணுவ அதிகாரி ஒருவர் ஒரு வீரனை அழைத்து, இதனை சரி பார்க்கும்படி அனுப்பினார். அவன் சென்ற கொஞ்ச நேரத்தில் இணைப்புகள் சீராகிவிட்டது. எல்லாரும் மகிழ்ச்சி அடைந்தனர். அந்த வீரனோ திரும்பவில்லை. எனவே அவனை தேடி மீட்பு குழுவினர் சென்று தேடி கண்டுபிடித்தார்கள். அவன் தனது கைகளால் ஒயர்களை இணைத்தபோது எதிராளிகளின் குண்டு அவன் மீது பாய்ந்து இறந்து கிடந்தான். தனது உயிரை பொருட்படுத்தாமல் தனக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்றினான்.

இயேசுவானவர் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே அறுந்து கிடந்த உறவை மீண்டும் இணைக்கும் படியாக சிலுவையில் மரித்தார். இயேசு ஒரு பிரதிநிதியாக மாறி தனது சொந்த ஜீவனையே நமக்காக தந்தார்.

**பாட விளக்கம்:**

## 1. இயேசு ஏன் இவ்வுலகத்திற்கு வந்தார்?

இயேசு இவ்வுலகத்திற்கு மரிக்கும்படியாக வந்தார். 3 சூழ்நிலைகளில் தாம் மரிக்கபோகிற செய்தியை சீடர்களுக்கு சொன்னார். (மத்தேயு 16:21,22; 17:21-23; 20:17-19)

இயேசு சொன்னார், “நான் என்னுடைய ஆடுகளுக்காக என்னுடைய ஜீவனைக் கொடுக்கிறேன்” (யோவான் 10:18). இந்த மரணம் இயேசு தனது சுயவிருப்பத்துடன் ஏற்றுக்கொண்டது (யோவான் 10:15, 18). இயேசு சிலுவையில் அறையப்பட்ட தினமானது, யூதர்கள் தாங்கள் எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்தும், அழிவிலிருந்தும், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தால் விடுதலை பெற்றதை நினைத்து பஸ்காவை கொண்டாடும் நாளாகும். பழுது இல்லாத ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டது. இயேசு பழுதற்ற குற்றமில்லாத ஆட்டுக்குட்டியானவர்.

இயேசு தாம் ஏசாயா 53ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பாடுபடும் வேலைக்காரன் என்பதை புரிந்துகொண்டார். மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார் என்பதை இயேசு அறிந்திருந்தார். இப்படிப்பட்ட வேதனை மரணத்தில் இருந்து விடுபட வேண்டும் என இயேசு விரும்பினார். கெத்சமெனே தோட்டத்தில் தன் பிதாவை நோக்கி, உமக்குச் சித்தமானால் இந்த பாத்திரம் நீங்கும்படி செய்யும். உபத்திரவம், மரணம் என்னைவிட்டு கடந்து போகட்டும் என்றார். இருப்பினும் பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்து தனது சித்தத்தை கைவிட்டார்.

## 2. துன்பத்தின் பாதையின் வழியாக...

யோவான்19 இரட்சகரின் சிலுவைப் பாதையை எடுத்துரைக்கிறது. அக்கால முறை என்னவெனில் சிலுவையில் அறையப்படுபவர் அதன் நீள சட்டத்தை வைத்துவிட்டு குறுக்கு கட்டையைத் தோளில் சுமந்து கொண்டு சிலுவையில் அடிக்கப்படும் இடம் வரை கொண்டு போகவேண்டும். இயேசுவும் அதன்படி சுமந்து சென்றார்.

இப்படி சுமந்து செல்லும் வழியெல்லாம் ரோம வீரர்கள் இயேசுவை அடித்தார்கள். அவர் கூட்டத்தோடு எருசலேமிலிருந்து வேதனையின் பாதை என்று அழைக்கப்படும் வழியாக சிலுவையை தாங்கமுடியாத வலி யோடும் அவமானத்தோடும் சுமந்து சென்றார். அப்பாதை முடியும் இடம் கொல்கெதா மலை என்றும் கபாலஸ்தலம் என்றும் அழைக்கப்படுகிறது. அம்மலை மண்டையோடுபோல காணப்படுவதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

### 3.நசரேயனாகிய இயேசு யூதர்களின் ராஜா:

இயேசு இரண்டு கள்ளர்களுக்கு இடையில் சிலுவையில் அறையப்பட்டார். அக்கிரமகாரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்ற வேத வாக்கியம் நிறைவேறும்படி இது நடந்தது. (மாற்கு 15:28)

பிலாத்து இயேசுவின் சிலுவைமேல் நசரேயனாகிய இயேசு யூதர் களின் ராஜா என்று எழுதிமாட்டினான். அக்காலமுறைப்படி சிலுவையில் அறையப்படும் குற்றவாளிகளின் பெயர் மற்றும் அவன் செய்த குற்றத்தை அவ்விதம் எழுதிவைப்பார்கள். ரோமர்களால் இந்தபிரதி தலைப்பு என அழைக்கப்படும் மூன்று மொழிகளில் எழுதப்படும். எபிரெய யூத மொழி, லத்தீன் ரோம மொழி, கிரேக்கு பயிற்று மொழி. இயேசுவின் பிறப்பின் போது வெகு சிலர் மட்டுமே அவர் யூதருடைய ராஜா என்று அறிந்திருந்தனர். அவருடைய சிலுவையில் அவர் யூதருடைய ராஜா என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இயேசு யூதர்களின் ராஜாவாக பிறந்தார்!

இயேசு யூதர்களின் ராஜாவாக மரித்தார்!

யூதர்களுக்கு ராஜாவாக பிறந்த இயேசு மிகுந்த வலியோடு சிலுவையில் தொங்கினார். இறுதியில் மிகுந்த சத்தமிட்டு தனது ஜீவனை பிதாவின் கையில் ஒப்படைத்தார். எல்லாம் முடிந்தது என்றார் (லூக்கா 23:46; மாற்கு 15:37). இயேசு பிதாவானவர் என்னை நம்பி எனக்கு கொடுத்த வேலையை நிறைவேற்றி முடித்தேன் என்று மனநிறைவோடு தனது இறுதி மூச்சை விட்டார். தனது ஆவியை பிதாவிடம் ஒப்படைத்தார்.

### 4. எலும்புகள் முறிக்கப்படுவதில்லை:

இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களுடைய கால் எலும்புகள் முறிக்கப்பட்டது. ஏனெனில் ஓய்வுநாள் சட்டத்தின்படி சிலுவையிலிருந்து சரீரத்தை அன்று மாலைக்குள் அப்புறப்படுத்த வேண்டும். சிலுவையில் அறையப்பட்ட அவர்கள் இன்னும் சாகாமல் இருந்தால் அவர்கள் கால் எலும்புகளை முறிப்பது வழக்கம். இப்படி இயேசுவிடம் வந்த போது அவர் ஏற்கனவே மரித்துவிட்டபடியால் அவர் கால் எலும்புகள் முறிக்கப்படவில்லை. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி இது நடந்தது.

அதே நேரத்தில் ஒரு போர் சேவகன் ஈட்டியினால் அவரது விலாவில் குத்தினான். இரத்தமும் நீரும் புறப்பட்டு வந்தது. "தன் விலாவில் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்" என்ற வேதவசனம் நிறைவேறிற்று.

**கேள்விகள்:**

1 தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த நல்லுறவு எப்போது முறிந்தது?
2. ஏன் இயேசு இந்த பூமிக்கு வந்தார்?
3. இயேசு பாடுபடும் சேவகன் என்பதை நிரூபிக்கும் 5 குறிப்புகளை எழுது.
4. சிலுவைப்பாதை என்பதன் பொருள் என்ன?
5. இயேசு ஏன் கள்ளர்களுக்கு இடையே சிலுவையில் அறையப்பட்டார்?
6. சிலுவையில் அவருக்கு மேலாக எழுதி வைக்கப்பட்டது என்ன?
7. எந்த மொழிகளில் எழுதப்பட்டது?
8. எல்லாம் முடிந்தது விளக்குக.
9. ஏன் இயேசுவின் எலும்புகள் முறிக்கப்படவில்லை?

பாடம் 25

# அரிமத்தியனாகிய யோசேப்பின் புதிய கல்லறை

***வேதபாகம் :*** மத்தேயு 27:57-60; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42; ஏசாயா 53:9-10.

***மனப்பாட வசனம் :*** எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிற வர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவு மில்லை. 1கொரிந்தியர்2:9

***நோக்கம் :*** ஒரு நபர் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் போது அவன் தேவனால் கனப்படுத்தப்படுவான் என்பதை போதித்தல்.



**முன்னுரை :**

இயேசு ஐஸ்வர்யம் உள்ளவராய் இருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார். அநேகரை மகிமையில் சேர்க்க பாடுகளை ஏற்றுக் கொண்டார். ஆகவே தேவன் அவருடைய மரணத்தில்கூட அவரை கனப்படுத்தினார். இராஜாதி இராஜாவான இயேசு கிறிஸ்துவின் அடக்கத்தை ஐஸ்வரியவானும் ஆலோசனைகாரனின் தலைவனுமான யோசேப்பு ஏற்றுக்கொண்டான்.

**பாட விளக்கம்:**

**1. மரியாதைக்குரிய முறையில் அடக்கம் செய்யப்படுதல் :**

பொதுவான வழக்கம் என்னவெனில் சிலுவையிலிருந்து சரீரத்தை இறக்கி அதனை பறவைகளுக்கு இரையாக இன்னோம் (Hinnom) பள்ளத்தாக்கில் வீசிவிடுவது. தேவன் இத்தகைய செயல் நடைபெற அனுமதிக்கவில்லை. இயேசு சரீரம் அடக்கம் செய்யப்பட தனித்தன்மையான திட்டத்தை தேவன் உண்டு பண்ணி இருந்தார்.

இயேசு மிகச்சிறந்த கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவதை கண்டு எல்லோரும் அதிர்ந்து, வியந்து போனார்கள். தேவன் இச் சம்பவத்தில் மௌனமாய் இருந்திடாமல் தமது ஒரே பேரான குமாரன் சரீரம் நல்லடக்கம் செய்யப்பட கனத்திற்குரிய முறையில் ஆயத்தம் செய்தார். இதுவும் தீர்க்கதரிசனம் நிறைவேறுதலாய் அமைந்தது. (ஏசாயா 53:9).

தேவன் இந்த பணியை செய்யும்படி யூதர்களின் தலைவனும் ஆலோசனைகாரனுமாகிய அரிமத்தியனாகிய யோசேப்பையும், பரிசேயர் களுக்கு தலைவனும் இயேசுவை பகலில் சந்திக்க தயங்கினவனுமாகிய நிக்கொதேமுவையும் தேர்ந்துகொண்டார். அவர்கள் பிலாத்துவின் அனுமதி பெற்று இயேசுவின் சரீரத்தை வழக்கத்தின்படி மெல்லிய துணியால் சுற்றினார்கள். நிக்கொதேமு தனது சொந்த செலவில் 100 பவுண்ட் எடை கொண்ட பெரும் வாசனை திரவியத்தை கொண்டு வந்தான். இப்படிப்பட்டவைகள் மிகுந்த செல்வந்தர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இவ்விதமாய் தேவன் இயேசுவின் அடக்கத்தை கனத்திற்குரியதாக மாற்றினார்.

**2. அவசரமான சூழ்நிலை:**

இச்செயலை மிக அழகாக நேர்த்தியாக செய்ய போதுமான நேரம் இல்லாதிருந்தது. எல்லாவற்றையும் இருட்டுவதற்கு முன்பாகவும் ஓய்வுநாள் தொடங்குமுன் முடிக்க வேண்டும் என்பதற்காக துரிதமாக செய்யப்பட்டது. யோசேப்பு நிக்கொதேமு ஆகிய இருவருமே இதனை முடித்தார்கள்.

**3. புதிய கல்லறை:**

கற்களில் வெட்டப்பட்ட ஒரு கல்லறையும் அதனை சுற்றி தோட்டத்தையும் யோசேப்பு உருவாக்கி வைத்திருந்தான். இது அவருக்காகவே உருவாக்கப்பட்டது. யோசேப்பு தனது மரியாதை ஆஸ்திக்கு ஏற்ப கட்டியிருந்த இந்த கல்லறையில் இயேசு வைக்கப்பட்டு வாயிலில் கல்லால் கல்லறை மூடப்பட்டது. அடக்கம் முடிந்தது.

## 4. இவைகளை பார்த்த சில பெண்கள்:

இச்சம்பவத்தை பார்த்து கண்ணீர் விடவோ, கதறவோ, புலம்பவோ, சோகமடையவோ யாருமில்லை. எங்கும் அமைதி இருந்தது.

ஆனால் மகதலேனா மரியாளும், யோசேயின் தாயாகிய மரியாளும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர். (மாற்கு15:47). அங்கு அவர்கள் அழுகை கேட்டது.

வேறு யாரும் அங்கு இல்லை. இயேசு மரித்து அடக்கம் செய்யப் பட்டார் என்பதற்கு இந்தப் பெண்கள் சாட்சிகளாக இருந்தனர். அவசரம் அவசரமாக அவருக்கு பூசியது போதாது என எண்ணி அவர்கள் திரும்பி சென்று நிறைய பரிமளதைலங்களை வாங்கி ஆயத்தப்படுத்தி ஓய்வு நாள் முடியும் வரை காத்துக் கொண்டிருந்தனர்.

**கேள்விகள்:**

1. வழக்கமாக சிலுவையில் மரித்த உடலை என்ன செய்வார்கள்?
2. இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்ய ஏன் சீஷர்கள் முன்வரவில்லை?
3. இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்தது யார்?
4. இயேசுவின் சரீரம் ஏன் அவசரமாக அடக்கம் செய்யப்பட்டது?
5. மகதலேனா மரியாள், யோசேயின் தாயாகிய மரியாளும் செய்தது என்ன?
6. லாசருவின் கல்லறைக்கும் இயேசுவின் கல்லறைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் என்ன?

பாடம் 26

# அவர் இங்கே இல்லை

***வேதபாகம் :*** மத்தேயு 28:1-15; மாற்கு 16:1-8; லூக்கா 24:1-12; யோவான் 20:1-10.

***மனப்பாட வசனம் :*** கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார். (1 கொரிந்தியர் 15:20)

***நோக்கம் :*** இயேசு உயிரோடெழுந்தார் என்பது உண்மை என பிள்ளைகள் நம்பவும் புரிந்துகொள்ளவும் செய்தல்.



**முன்னுரை :**

இயேசுவின் மரணத்தினிமித்தம் சீஷர்கள் மிகவும் ஏமாற்றமும் பயமுமடைந்தனர். அநேகர் ஒளிந்துகொண்டனர். எந்த நம்பிக்கையும் அறிகுறியும் அவர்களுக்கு இல்லை. வெள்ளிக்கிழமை அன்று மரித்து அடக்கம் செய்யப்பட்டார். சனிக்கிழமை யூதர்களின் ஓய்வுநாள் சட்டத்திற்கு எதிராக ஒன்றும் செய்யக்கூடாது. அடக்கம் பண்ணப் படும்போது விடப்பட்ட சில குறைகளை கவனித்த 3 ஸ்திரீகள் அதனை நிறைவு செய்வதற்காக ஆயத்தத்தோடு ஓய்வுநாள் முடிய காத்திருந்தனர். அந்த நாள் வாரத்தின் முதலாம் நாள் ஆகும்.

**பாட விளக்கம்:**

**1. இயேசு உயிர்த்தெழுந்தார்:**

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாளின் அடுத்த நாள் ஓய்வு நாள். அதற்கு மறுநாள் அதிகாலை இருட்டு வேளை மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாள் உட்பட சில பெண்கள்

கல்லறைக்குச் சென்றார்கள். ஆனால் உள்ளத்திற்குள்ளே வாயிலில் உள்ள கல்லை எவன் நமக்காக தள்ளுவான் என்று பயந்து கொண்டே சென்றனர். அவர்கள் கல்லறையை அடைந்த மாத்திரத்தில் ஒரு பெரிய பூமி அதிர்ச்சி உண்டானது. தேவதூதன் கல்லறை வாயிலில் இருந்த பெரிய கல்லைப் புரட்டித் தள்ளிவிட்டான். காவலர்கள் தேவதூதனை கண்டு பயந்து செத்தவர்களைபோல விழுந்தனர். இயேசுவை பார்க்கும்படி வந்த ஸ்திரிகளிடம் தேவதூதன் நீங்கள் தேடும் இயேசு இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார் என கூறினான்.

இவர்கள் பார்த்த இந்த காட்சியை பேதுருவும் பார்த்தான். இயேசுவை சுற்றி வைத்த துணிகள் கீழே இருப்பதையும் தலையில் சுற்றப்பட்ட துணிகள் தனியாக சுருட்டி வைக்கப்பட்டிருப்பதையும் கண்டார்கள். (யோவான் 20:6,7) பின்பு இயேசு மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசித்தார்கள்.

### 2. புதிய பொறுப்பு:

இயேசு உயிருடன் எழுந்தார் என்பதை அறிந்த மாத்திரத்தில் தேவதூதன் அவர்களை நீங்களும் சீக்கிரமாய் போய் அவர்களிடம் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை சொல்லுங்கள். அத்துடன் அவர் (இயேசு) உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் என்பதையும் தேவதூதன் சொன்னார். அந்த பெண்கள் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பயத்துடன், ஆச்சரியத்துடன், நடுக்கத்துடன் இந்த செய்தியை சீஷர்களிடம் சொன்னார்கள். இப்படி அவர்கள் கீழ்ப்படிந்து செல்லும்போது வழியிலேயே இயேசுவையும் முகமுகமாய் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது.

### 3. குழப்பம் அடைந்த தலைவர்கள்: ஒரு புது கதை பரவியது.

இந்த நேரத்தில் மரித்தவர்களை போல விழித்து கிடந்த காவலர்கள் எழுந்து ஊருக்குள் சென்று பிரதான ஆசாரியனிடம் எல்லா வற்றையும் விளக்கமாக சொன்னார்கள். இந்த உயிர்த்தெழுந்த செய்தி வெளியே வராதபடி காவலருக்கு பணத்தை கொடுத்து நீங்கள் தூங்கி கொண்டிருக்கும் போது சீஷர்கள் இயேசுவின் சரீரத்தை திருடிக் கொண்டு போய் விட்டனர் என்று சொல்ல சொன்னான். இந்த தவறான செய்தி சுற்றுப்புறமெங்கும் சொல்லப்பட்டு அப்பகுதி முழுவதும் பரவியது. (மத்தேயு 28:11-15)

### 4. அவருடைய உயிர்த்தெழுதல் எவ்வாறு நடந்தது?

- பிதாவின் வல்லமையினால். (அப்போஸ்தலர் 2:23,24; 3:15; 5:30)
- கிறிஸ்து தனது சொந்த வல்லமையினால் (யோவான் 2:19)
- பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் (1பேதுரு 3:18)

### 5. இயேசு உயிர்த்தெழுதலின் நோக்கம் என்ன?

- ஒரு புதிய ஜீவனை நமக்கு அளிக்க (2 தீமோத்தேயு 1:9,10)
- நமக்குள் மறுபிறப்பை ஏற்படுத்த (1பேதுரு 1:3-5)
- சாத்தானின் மீது நாம் வெற்றியும் அதிகாரமும் வல்லமையும் உள்ளவர்களாக இருக்க(1 யோவான் 4:4, 5:4, 5).
- நாம் தேவனுடைய பிள்ளைகளும் தேவனுடைய சுதந்திரராய் மாறவும். ரோமர் 8:15-17.

**கேள்விகள்:**

1. ஞாயிறு காலை இயேசுவின் கல்லறைக்கு சென்ற இரண்டு பெண்களின் பெயர்கள் என்ன?
2. அவர்கள் ஏன் அங்கு சென்றனர்?
3. கல்லறையை அடைத்திருந்த கல் எவ்வாறு அகற்றப்பட்டது?
4. கல்லறை உள்ளே வந்து பார்த்த முதல் சீஷன் யார்?
5. இயேசுவின் சரீரம் வைக்கப்பட்ட இடத்தில் கிடந்தது என்ன?
6. தேவதூதன் பெண்களிடம் கொடுத்த புதிய பொறுப்பு என்ன?
7. இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்து யூத மதத்தலைவர் உருவாக்கின பொய் செய்தி என்ன?
8. ஏன் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்?
9. “அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார்” இந்த வாக்கியத்தை விளக்குக.

பாடம் 27

# இயேசு சீஷர்களை உணர்த்துதல்

***வேதபாகம் :*** லூக்கா 24:1-35.

***மனப்பாட வசனம் :*** அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்க தரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்றுசொல்லி, லூக்கா 24:25,26.

***நோக்கம் :*** இயேசு நமக்கு காணக்கூடாத நண்பராகவும் உதவி செய்பவராகவும் இருக்கிறார் என்பதை போதித்தல்.



**முன்னுரை :**

நான்கு சுவிசேஷ புத்தகங்களும் காலியான கல்லறை என்று கூறுகிறது. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு கிறிஸ்தவத்திற்கு மேலும் ஆதாரம் சேர்க்கிறதாக இது உள்ளது. இந்த வெறும் கல்லறை அவர் உயிர்த்தெழுதலை அதிகாரபூர்வமாக தெரிவிக்கிறது ஈஸ்டர் திருநாள். அன்று (இயேசு உயிர்த்தெழுந்த தினம்) நாம் நினைப்பது போல சீஷர்களும் மகிழ்ச்சியாக இல்லை. மாறாக பயத்தினால் நடுங்கிக்கொண்டே கண்ணீரிலும் கவலையிலும் இருந்தனர். (மாற்கு 16:8, 9; லூக்கா 24:12,23,37).

பிற சீஷர்கள் இயேசுவைப்பார்த்து உயிரோடு இருந்தார் என்று

இரண்டு மூன்று முறை சொன்னாலும் தோமா அதை நம்பவில்லை. சீஷர் கிலெயோப்பா மற்றும் பிற சீஷரும் கூட தன்னோடு பேசிக் கொண்டு நடந்துவருபவர் இயேசுதான் என்பதை சூரியன் மறையும் வரை அறியாது இருந்தார்கள்.

**பாட விளக்கம்:**

**1. எம்மாவுக்கு செல்லும் வழியில் ஒரு அந்நியன்:**

எருசலேமிலிருந்து ஏழு மைல் தூரத்தில் எம்மாவு கிராமம் இருந்தது. இயேசு உயிர்த்தெழுந்த முதல் நாளில் இரண்டு சீஷர்கள் எருசலேமிலிருந்து எம்மாவுக்கு செல்லும் சாலையில் போய்க் கொண்டிருந்தனர். மூன்று நாளுக்கு முன் நடந்த சம்பவத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். இயேசுவின் மரணத்தை பற்றியும் அவர் உயிர்த்தெழுந்தார் கல்லறை காலியாக உள்ளது என்ற ஸ்திரீகள் சொன்னதையும் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு முகம் அறியாதவர் போல் அவர்களோடு சேர்ந்து கொண்டு நீங்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வது என்ன என்று கேட்டார். அதற்கு அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்னதாக எருசலேமில் நடைபெற்றதை அறியாது இருக்கிற நீர் அந்நியரோ என்றார்கள்.

அதற்கு அவர் தெரியாதவர் போல "அவைகள் என்ன?" என்று கேட்டார். அப்பொழுது அவர்கள் விளக்கமாக நசரேயனாகிய இயேசுவைப் பற்றியும் அவருடைய மனதுருக்கம், போதனைகள், அற்புதங்கள், அவர் எதிரிகளால் கொல்லப்பட்டார் என்றும் இப்பொழுது உயிரோடு எழுந்ததாகவும் கேள்விப்படுகிறோம். ஆனால் தாங்கள் அவர் உயிரோடு எழுந்ததை பார்க்கவில்லை என்றும் இதைப் பற்றி எல்லாரும் பயத்துடனும், குழப்பத்துடனும் இருப்பதாக கூறினார்கள்.

இவைகளை அவர்கள் சொன்ன பின்பு அவர்களை நோக்கி தீர்க்கதரிசிகள் சொன்னவைகளை விசுவாசிக்க இயலாத மந்த இருதய முள்ளவர்களே என்று சொன்னார். பின்பு அவர் ஒவ்வொரு வசனமாக தன்னை குறித்து சொல்லப்பட்டதை விளக்கி தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டியதை புரிய செய்தார். அவர்களுடன் தொடர்ந்து நடந்து சென்றார்.

**2. இயேசு எம்மாவூர் சீஷர்களுக்கு தரிசனமாகுதல்:**

கிராமத்திற்குள் நுழையும்போது அவர் விடை பெறுவதாகக் கூறினார். மாலை மறையும் அவ்வேளையில் அவர்கள் நீங்கள் இந்த இரவு எங்களோடு இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவரும் சம்மதித்து அவர்களுடன் சென்றார்.

அவர்கள் உணவு அருந்த உட்கார்ந்த போது அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். உடனே

அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவர் இயேசு என்று கண்டார்கள். உடனே இயேசு மறைந்து போனார் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை அவர்கள் கண்டார்கள்.

### 3. தரிசனத்திற்கு பின்பு அவர்கள் செய்தது (லூக்கா 24:33, 34):

அந்த இரவு நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். மற்ற சீஷர்களை தேடி கண்டுபிடித்து சேர்ந்தார்கள். தங்களுக்கு நடந்ததையெல்லாம் அவர்களுக்கு சொன்னார்கள். அவர்களும் இயேசுவுக்கு தங்களை சாட்சியாக புதிய பெலத்துடன் வாழத் துவங்கினார்கள்.

### கேள்விகள்:

1. இயேசுவின் உயிர்த்தெழுதலை சந்தேகித்த சீஷன் யார்?
2. எம்மாவு சாலையில் நடைபெற்ற உரையாடல் என்ன?
3. கிலெயோப்பா என்பவன் இயேசுவின் உயிர்த்தெழுதலை எவ்வாறு புரிந்துகொண்டான்?
4. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது சீஷர்களுக்குள் எவ்வகை மாற்றத்தை ஏற்படுத்தியது?
5. கீழ்க்கண்ட வாக்கியங்களை விவரி
    - நீங்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்கிறது என்ன?
    - இந்த நாட்களில் எருசலேமில் நடந்ததை அறியாதபடிக்கு நீர் அந்நியரா?
    - மந்த இருதயமுள்ளவர்களே

## பாடம் 28

# கடைசி கட்டளை மற்றும் பரமேறுதல்

***வேதபாகம் :*** மாற்கு 16:12-19; அப்போஸ்தலர் 1:9-11.

***மனப்பாட வசனம் :*** அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். எபேசியர் 3:3.

***நோக்கம் :*** உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்ற இயேசுவின் பிரதானமான கட்டளையை எல்லா சீஷர்களும் ஏற்றுக்கொள்ளவும் செய்யவும் வேண்டும் என்பதைப்பற்றி போதித்தல்.




**முன்னுரை :**

உயிர்த்தெழுந்த பின்பு இயேசு நாற்பது நாள்கள் தமது சீஷர் களுக்கு தரிசனமானார், பேசினார் (லூக்கா 24:44-49). அவர்களுடன் சாப்பிட்டார். (லூக்கா 24:41-43; யோவான் 20:19).

இறுதியாக பரத்திற்கு செல்லும் வேளை வந்தபோது தனது சீஷர்களுடன் ஒலிவ மலைக்கு சென்றார். அவ்விடம் எருசலேமில் இருந்து ஒரு ஓய்வு நாள் தூரமாய் இருந்தது.

**பாட விளக்கம்:**

**1. மரணத்தை வென்ற மாமன்னன்:**

இயேசு 11 முறை தனது சீஷர்களுக்கு தரிசனமாகி ஆறுதல்படுத்தி, உயிர்ப்பித்து, நம்பிக்கை ஊட்டி அவருக்குள் பலனடைய செய்தார். அவர்களை உறுதியுடையவர்களாக மாற்றும் இந்த முக்கிய பொறுப்பை சிறப்பாக செய்தார்.

**2. செல்லுங்கள்! சொல்லுங்கள்!**

கலிலேயாவில் ஒலிவமலை அருகில் இயேசு இந்த பிரதான கட்டளையை பற்றி சொன்னார். வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:19,20)

இயேசு சீஷர்களுக்கு சொன்னதாவது எல்லா நாடுகளுக்கும் சென்று அவர்களுக்கு இயேசுவாகிய தான் மக்களுக்காக எவ்விதம் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதை பற்றி சொல்லுங்கள். யாரெல்லாம் அவரை விசுவாசித்து மனந்திரும்பி ஏற்றுக்கொள்வார்களோ அவர்கள் பாவங்களை மன்னித்து விடுவார் என்பதையும் சொல்லுங்கள் என்றார்.

**3. பிரதான கட்டளை எல்லோருக்குமே:**

இயேசுவை அறியாத மக்களுக்கு அவரை குறித்துச் சொல்வது, இரட்சிப்பை பற்றி கூறுவது நமக்கு பெரிய பாக்கியமாகும். எல்லாரும் இயேசுவை அறிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் எல்லை நம் மூலம் விரிவடைய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நமது பிள்ளைகள் நம்மை பற்றி பிற பிள்ளைகளிடம் பேசும் போது நமக்கு மிகவும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கொடுக்கும். அதுபோல பரலோக தேவனுடைய அன்பை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் போது நம் நிமித்தம் மகிழ்ச்சி அடைகிறார். தேவனால் மீட்கப்பட்ட நாம் அந்த இரட்சிப்பை பற்றி பிறரிடம் பகிர்ந்து கொள்ளும்போது மற்றவர்களும் அந்த இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டாகிறது. இது தேவனுடைய கடைசி ஆசை என்றும் கூறலாம் இதனை நிறைவேற்றுவது நமது கடமை மட்டுமல்ல, இதனால் பரலோகம் மகிழ்ச்சி அடைகிறது.

இந்த காரியங்களை எல்லாம் அவர்களுக்கு சொல்லி புரிய செய்த பிறகு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பரலோகத்திற்கு

எடுத்துக்கொள்ளப்பட்டார். ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. தேவதூதன் தோன்றி இயேசு மீண்டும் வருவார் என்றார்.

**கேள்விகள்:**

1. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு எத்தனை நபர்களுக்கு எத்தனை நாட்கள் தரிசனமானார்?
2. இயேசு பரமேறிய மலை எது?
3. இயேசு கொடுத்த பிரதான கட்டளை எது?
4. உயிர்த்தெழுதலுக்கு பின்பு நாற்பதுநாள் தமது சீஷர்களுடன் இயேசு இருக்க காரணம் என்ன?
5. கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து கொண்டிருக்கிறீர்கள், வாக்கியத்தை விவரி.

பாடம் 29

# பேதுருவுக்கு மீண்டுமொரு வாய்ப்பு

***வேதபாகம் :*** யோவான் 21:15-19.

***மனப்பாட வசனம் :*** வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பா யிருந்தாலும் பஞ்சைபோலாகும். ஏசாயா 1:18.

***நோக்கம் :*** மனந்திரும்பி வருபவர்களை இயேசு தம்மிடம் ஏற்றுக்கொள்வார் என்பதை போதித்தல்.



**முன்னுரை :**

பலகோணங்களில் பேதுருவின் வாழ்க்கை நமக்கு ஒத்திருக்கிறது. குறிப்பாக இளையவர்களுக்கு அவருடைய வாழ்க்கை முறை உதவுகிறது. இவர் பிற அப்போஸ்தலர்களை காட்டிலும் வேறுபட்டவர். கவனமாக சொல்வதற்கு பதில் உணர்ச்சி வசப்படுவார். அநேக நல்ல விஷயங்களை செய்துள்ளதோடு பல தவறுகளையும் செய்து இயேசுவினால் கடிந்து கொள்ளப்பட்டார்.

அவர் செய்த தவறுகள் என்ன? நீங்கள் அதை ஞாபகம் வைத்திருக்கலாம். தனது போதகரான இயேசுவைத் திரும்பத் திரும்ப மறுதலித்தான்.

**பாட விளக்கம்:**

### 1. ஏன் பேதுரு ஆண்டவரை மறுதலித்தான்?

- அவர் மிகவும் தன்னம்பிக்கை கொண்டிருந்தார். பெருமிதத்துடன் இயேசுவிடம் எல்லாரும் இடறல் அடைந்தாலும் நான் அடைவதில்லை. அதோடு உம்மோடு மரிக்க வேண்டியதாயிருந்தாலும், உம்மை மறுதலிப்பதில்லை. (மத்தேயு. 14:29-31). தன் மீது மிகுந்த நம்பிக்கையுடன் இருந்ததால் இப்படி பேசினாரோ,
- இயேசு சொன்ன எச்சரிக்கையை மறந்தான். "இன்று இரவு சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்." (மாற்கு 14.30) இந்த எச்சரிக்கையை பெரிதாக நினைக்கவில்லை தமக்குள் தவறாக பெருமையுடன் நடந்துகொண்டான்.
- அவர் கீழ்ப்படியாமல் போனார். (மாற்கு 14.34-38) இயேசு தம்மிடம் இங்கே காத்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றும் நீங்கள் சோதனைக்கு உட்படாமல் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்ற வார்த்தையின் அவசியத்தை புரிந்து கொள்ளவில்லை. ஜெபிக்க வேண்டிய, கவனமாய், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய நேரத்தில் அசந்து தூங்கிவிட்டார்கள்.
- இயேசுவை விட்டு தூரம் போனான். (மாற்கு 14:54) பேதுரு இயேசுவை தூரத்தில் பின்பற்றினான். இயேசுவின் அருகில் வர முடியவில்லை. ஆகவே தனது சோதனை நேரத்தில் தனித்திருந்தார். இதிலிருந்து மீண்டு வர இயேசுவின் உதவியை நாடவில்லை.
- அவன் எரிச்சலடைந்தான் (மாற்கு 14:71). மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட கேள்விகளால் எரிச்சல் அடைந்தான். இயேசு கைது செய்யப்பட்டது அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே அவரை மறுதலித்தான். அவன் இயேசுவை தெரியாது என்று மறுதலிக்கும்படி சோதிக்கப்படும் போது சத்தியம் பண்ணவும் தொடங்கினான். தைரியமாக இருக்க வேண்டிய தருணத்தில் கோழையாக மாறி விட்டான்.

### 2. எவ்வாறு மீண்டும் பேதுரு மனம் மாறினான்?

- இயேசு சொன்ன எச்சரிக்கைகளை நினைத்துப் பார்த்தான். (மாற்கு 14:72)
- இயேசு தம்மை பார்க்கும்போது இவனும் அவரை பார்த்தான்.
- இவைகளுக்கு மேலாக உள்ளம் உடைந்து அழுது மனம் திரும்பினான்.

### 3. மீண்டும் ஒரு தவறான பாதையில்

பேதுருவும் மற்ற சீஷர்களும் இன்னும் சந்தேகத்தில் இருந்தனர். உயிரோடெழுந்த இயேசுவை பார்த்ததாக சில ஸ்திரீகள் கூறியபோது கூட அவர்களால் நம்ப முடியவில்லை. கலிலேயாவிற்கு செல்வதற்கு

பதிலாக அவர்களை நோக்கி நான் மீன் பிடிக்கப் போகிறேன் என்று சொன்னான்.

பேதுரு ஒரு மீனவன். இயேசு அவனை மனுஷரை பிடிக்கிறவர்களாக மாற்றினார். தம் ஆரம்ப காலத்தில் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றினான். இப்பொழுது அவனுக்கு அவ்விதம் செய்ய மனமில்லை. தனது பழைய வாழ்க்கை, பழைய தொழிலுக்கு போக முடிவெடுத்து தனது பாதையிலிருந்து விலகி சென்றான்.

இயேசுவை விட்டு அவர்கள் விலகி இருந்தும் அவர்கள் தேவையில் இருப்பதை இயேசு கண்டார். கடற்கரைக்கு தேடி சென்றார். மீண்டும் அவர்களை மீட்டு கொண்டுவர விரும்பினார். இப்பொழுதும் கடலிலிருந்து ஒன்றும் பிடிக்காமல் வெறுமையாகவே திரும்பினார்கள். ஆகையால் இயேசு அவர்களுக்கு நல்ல காலை உணவை கொடுத்தார். தன்னுடைய உதவி இல்லாமல் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை புரிய வைத்தார்.

## இயேசு பேதுருவை மீண்டும் சேர்த்துக்கொண்டார்:

அவன் இயேசுவை விட்டு செல்லமாட்டேன் என்று பெருமிதத்துடன் கூறி இருந்தான். அவனே அவரை மறுதலித்தும் போனான். அவரை எனக்குத் தெரியவே தெரியாது என்று சொன்னான். இருப்பினும் இயேசு அவனை மன்னித்து தம் அண்டை சேர்த்துக்கொண்டார். இயேசு அவனைப் பார்த்து "இவைகள் அனைத்தையும் விட நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்றார். இந்த கேள்வி அவனை மனம் திரும்ப செய்ததுடன் மீண்டும் மீண்டும் மூன்று முறை கேட்கப்பட்டது. இந்த வார்த்தைகள் அவன் மனதை உடைக்கவே "ஆண்டவரே நீ எல்லாவற்றையும் அறிவீர்" என்று சொன்னான். பேதுரு தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தான். பேதுரு மறுதலித்தது மூன்று முறை, இயேசு அவனைப் பார்த்து அன்பாய் இருக்கிறாயா என்று கேட்டதும் மூன்று முறையாகும். இப்படி பேதுரு தன்னை நேசிப்பதாக அறிக்கையிட்ட பின்பு இயேசு அவனிடம், "என் ஆட்டுக்குட்டிகளை, ஆடுகளை மேய்ப்பாயாக" என்று கூறி அவனை மேய்ப்பனாக ஏற்படுத்தினார்.

### கேள்விகள்:

1. பேதுரு எத்தனை முறை இயேசுவை மறுதலித்தான்?
2. தன்மீது வைத்திருந்த தன்னம்பிக்கையினால் பெருமிதத்துடன் இயேசுவை நோக்கி சொன்ன வார்த்தைகள் என்ன?
3. எப்பொழுது பேதுரு இயேசுவை விட்டு விலகிப்போனான்?
4. யாருக்கு முன்பாக பேதுரு இயேசுவை மறுதலித்தான்?
5. எப்பொழுது பேதுரு மனம் கசந்து அழுதான்?

6. மீண்டுமாக பேதுரு இயேசுவை விட்டு விலகி சென்ற தருணங்கள் எது?
7. மீண்டும் பேதுரு இயேசுவை எப்பொழுது சந்தித்தான்?
8. இயேசுவின் உதவி இல்லாமல் பேதுருவின் செயல்கள் எவ்விதம் பயனில்லாமல் போனது விளக்குக.
9. கடந்த கால வாழ்க்கையில் இருந்தும், அவன் இயேசுவை பின்பற்றின தருணங்களிலும் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்னென்ன?

Two wrongs do not make a right,
but they make a good excuse
*Thomas Szasz*

பாடம் 30

## இயேசு இப்பொழுது எங்கே?

***வேதபாகம் :*** அப்போஸ்தலர் 7:54-56; யோவான் 3:13; எபிரெயர் 9:24

***மனப்பாட வசனம் :*** அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலே தானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். எபிரெயர் 9:24

***நோக்கம் :*** நமது கர்த்தராகிய இயேசு இப்பொழுது பரலோகத்தில் நமக்காக பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை போதித்தல்.



**முன்னுரை :**

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மகிமைப் படுத்தப்பட்டார். பலர் அவர் மகிமையாய் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் காட்சியை தரிசித்தனர். ஸ்தேவான் இதை முதலில் தரிசித்தவர். (அப்போஸ்தலர் 7:7) பின்பு பவுல் மற்றும் யோவான் இந்த தெய்வீக காட்சியை பார்க்கும் பாக்கியத்தை பெற்றனர். (அப்போஸ்தலர் 9, வெளி. 1).

**பாட விளக்கம்:**

**1. இயேசு இப்பொழுது எங்கே?**

தனது மரணம் உயிர்த்தெழுதலுடன் இயேசு தமது இரட்சிப்பின் பணியை இப்பூமியில் வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தார். இப்பொழுது இயேசு பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்துள்ளார். (எபிரெயர் 10:12,13,1:3).

**2. இயேசு இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார்?**

- தனது பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்காகவும் ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார். (யோவான் 14:1,2)
- விசுவாசிகளுக்கு ஒரு வழக்கறிஞரை போல இருக்கிறார். (1யோவா 2:1)
- தேவனுக்கு முன் விசுவாச பிள்ளைகளுக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். (எபிரெயர் 7:25)
- சகல அதிகாரமும் உடையவராய் பரலோகத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர்1:10-13; 1பேதுரு3:22)

**2. வழக்கறிஞர்:**

நம் பாவங்களுக்காக மட்டுமல்ல, அகில உலக பாவத்திற்காகவும் இயேசு மத்தியஸ்தராக இருக்கிறார். பாவம் தேவனோடு உள்ள உறவை அழிக்கிறது. தேவனால் பாவத்தோடு ஒத்துப்போக முடியாது. அவர் மத்தி யஸ்தரின் இடத்தைப் பெற்றுக் கொண்டு நமக்காக வழக்காடுகிறார்.

**3. பரிந்து பேசுகிறவர்:**

விசுவாசிகளின் உதவியற்ற மற்றும் பெலவீனமான நேரங்களிலும் குறிப்பாக பிசாசின் ஆயுதங்கள் அவர்கள்மேல் எய்யப்படுவதை தடுக்க வும் இயேசு பரிந்துபேசுகிறார். அவர் தம் சொந்த ஜனத்திற்காக எப் பொழுதும் பரிந்து பேசுகிறார் (எபி. 7:25).. இயேசுவின் பரிந்து பேசுதலை அறிய வாசிக்க யோவான் 17ம் அதிகாரத்தில் இதை பார்க்கலாம்.

இந்த ஜெபத்தை வாசிக்கும்போது இயேசு எவ்விதம் உண்மை உத்தமத்துடன் தம் சீஷர்களுக்காக பரிந்து பேசி ஜெபித்தார் என்பதை அறியலாம். இயேசுவின் இந்த ஊழியமானது தனது இரட்சிப்பை உறுதிப்படுத்தவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் காரணமாய் உள்ளது. (ரோமர் 8:38,39)

**4. இயேசு ஜெபித்த குறிப்புகள்:**

- பரிசுத்தவான்களின் பெலவீனங்களில் கிருபை பெற்றுக் கொள்ளும்படி (2கொரிந்தியர்12:9)
- தீமைகள் ஊழியக்காரர்களை தேவபிள்ளைகளை தொடராதபடி (யோவான்17:15)
- To forgive them that confess their sins (I யோவான் 1:9).

- கிறிஸ்துவின் சாட்சிகளாய் இருக்க தேவையான பெலன்களை பெறும்படி (அப்போஸ்தலர்1:8)
- குமாரனாகிய இயேசுவின் குணங்கள் அவருடைய பிள்ளைகளுக்கும் வரும்படியாக (ரோமர் 8:29)

### 5. இயேசு இப்பொழுது பூமியில் என்ன செய்து கொண்டிருக்கிறார்:

இயேசு பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்துகொண்டு இருப்பினும் அவர் வாக்களித்தபடி உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன். (மத்தேயு 28:20). ஒவ்வொரு விசுவாசிகளின் உள்ளத்திற்குள்ளும், நடுவிலும் இரண்டு அல்லது மூன்று பேர் அவர் நாமத்தில் கூடும் இடத்திலெல்லாம் அவர் வருகிறார். (மத்தேயு 18:20) நாம் அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய வீடாக மாறுவோம். (யோவான்14:23). கிறிஸ்து என்னிடத்தில் இருக்கிறார். (கலா 2:20).

• ***சபையில் உலாவுகிறார்*** (மத்தேயு 16:6-18). சபை இயேசுவின் சரீரம் (1கொரிந்தியர்12:12-17). இயேசுவே சபைக்கு தலைவர் (கொலோ. 1:18). இயேசு சபையை போஷித்து காப்பாற்றுகிறார். (எபேசியர்5:29) விசுவாசி களை பெலப்படுத்துகிறார், சபையை பெலப்படுத்துகிறார். (பிலிப்பியர்4:13) இயேசு தங்கும் ஆலயமாய் உள்ள விசுவாசிகள் சோதனைகளையும், பாடுகளையும், பொல்லாத சாத்தானின் வல்லமைகளை மேற்கொண்டு வெற்றியான வாழ்க்கையை வாழவேண்டும். இயேசு இத்தகைய நம்பிக் கையை தமது பிரசன்னதினால் தருகிறார். (ரோமர் 8:20-23; கொலோ. 1:27; 1 யோவான் 3:3).

• ***வரங்களை அளிப்பது இயேசுவின் வேலையாகும்***. (ரோமர்12:3-8 1கொரிந்தியர் 12:28-31 எபேசியர்4:7-16). எல்லாருக்கும் அவரை ஏற்றுக் கொண்டு பரலோகராஜ்யம் செல்லும்வரை அவருடைய ஊழியம் தொடரும். இன்று நமக்கு ரட்சகர் நாளை வரப்போகிற நியாயாதிபதியாக உள்ளார்.

### கேள்விகள்:

1. ஸ்தேவான் இயேசுவை பரலோகத்தில் இருப்பதாக பார்த்த தரிசனத்தை பற்றி கூறு,
2. இயேசு இப்பொழுது எங்கே என்ன செய்கிறார்?
3. இயேசு ஒரு வழக்கறிஞர் விளக்குக?
4. சாத்தானின் அக்கினி அம்புகள் என்றால் என்ன?
5. இயேசு பூமியில் என்ன செய்து கொண்டிருக்கிறார்?
6. சாத்தானின் அக்கினி அம்புகளுக்கு நாம் எவ்விதம் தப்பலாம்?
7. நமக்காக இயேசு பிதாவிடம் வேண்டுதல் செய்வதால் என்ன பயன்?
8. யோவான் 17 இல் யாருக்காக பரிந்துரை பிரார்த்தனை செய்யப்பட்டது?
9. எத்தனை காலம் இயேசு அவரது பணிகளை செய்தார்?
10. பரிந்துரை என்பதன் பொருள் என்ன ?

# கேள்வித்தாள் - 3

## மதிப்பெண்கள் : 50

(10 x 1 = 10)

**1.கீழ்கண்ட வினாக்களுக்கு சில வரிகளில் பதில் கூறு.**

1. இயேசு கைது செய்யப்பட்டபின் அவரைப் பின்பற்றிய 2 சீஷர்கள் யார்?
2. இயேசுவை சிலுவையில் அறைய கட்டளையிட்டது யார்?
3. எல்லாருக்கும் முன்பாக பிலாத்து கைகழுவியது ஏன்?
4. சிலுவையின் மீது எழுதப்பட்ட சிறப்பு வார்த்தைகள் என்ன?
5. இயேசுவின் சரீரம் யாருடைய கல்லறையில் வைக்கப்பட்டது?
6. இயேசுவின் கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டியது யார்?
7. எருசலேமிற்கும் எம்மாவிற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு?
8. இயேசுவின் உயிர்த்தெழுதலை சந்தேகித்த சீஷன் யார்?
9. மகிமையின் இயேசுவை தரிசித்த மூவர் யார்?
10. இயேசு பரமேறிய மலை எது?

**II. யார் யாரிடம் கூறியது?** (5 x 2 = 10)

11. "எல்லாம் முடிந்தது."
12. நான் மீன் பிடிக்கப் போகிறேன்.
13. இந்த மனுஷனிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் காணேன்.
14. கலிலேயா மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்க்கிறீர்கள்?
15. என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக.

**III. ஏதேனும் ஐந்திற்கு மட்டும் விடையளி** (5 x 3 = 15)

16. கசப்பு கலந்த காடியை ஏன் இயேசுவுக்கு குடிக்கக் கொடுத்தார்கள்?
17. இயேசு தம் ஜீவனை விடும் போது ஏற்பட்ட சம்பவங்களை கூறு?
18. இயேசுவின் எலும்புகள் முறிக்கப்படாதிருக்க காரணம் என்ன?
19. லாசருவின் கல்லறைக்கும், இயேசுவின் கல்லறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?
20. இயேசு உயிர்த்தெழுந்ததை மறைக்க யூத மத தலைவர்கள் பரப்பின வதந்தி என்ன?
21. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை கிலேயொப்பா எவ்விதம் புரிந்து கொண்டார்?

**IV.** இக்காலாண்டில் படித்த ஐந்து மனப்பாட வசனங்களை எழுதுக. (10 Mark)

**V.** சிலுவை மரணத்திற்குப் பின் பேதுரு செய்தது என்ன அவர் வெற்றி பெற்றாரா ஏன்? (5 Mark)

## காலாண்டு IV
# இயேசுவின் ஊழியம்

## பாடம் 31
# சிலுவையின் ஏழு செய்திகள் -1

***வேதபாகம் :*** மத்தேயு 27:45,46; மாற்கு 15:34; லூக்கா 23:33,34; யோவான் 19:26,27.

***மனப்பாட வசனம் :*** தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப்பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள். 1 பேதுரு3:9

***நோக்கம் :*** சிலுவையையும் அதன் வேதனைகளையும் தியானம் செய்வது மூலம் அவருடைய குணாதிசயங்களையும், மீட்பையும் பிள்ளைகள் தங்கள் வாழ்வில் பெறவேண்டும்.



**முன்னுரை :**

தேவனுடைய கரங்களும், மனிதனுடைய கரங்களும் ஒன்றாக கைகோர்க்கும் இடமே கல்வாரியாகும். சிலுவையில் இயேசு பேசின செய்திகள் இரண்டாவது மலைப் பிரசங்கத்தை நமக்கு நினைவு படுத்துவதாக உள்ளது. முதல் செய்தி இயேசுவின் மலைப் பிரசங்கம் இது நன்றாக தெரிந்தது. இரண்டாவது செய்தி சிலுவையின் 7 செய்திகளாகும்.

இந்த ஏழு வார்த்தைகளில் ஆறு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலாகும். முதல் மற்றும் நான்காவது செய்தியானது இயேசு சிலுவையில் அறையப்பட்ட நேரம் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிருந்த 6-ம் மணி நேரத்திற்கும் 9-ம் மணி நேரத்திற்கும் இடைப்பட்ட வேளையில் பேசியது. (12 மதியம் -3 மாலை). இதில் ஒன்று இருளடைந்த நேரத்திலும் மற்ற ஆறு வார்த்தைகளில் மூன்று அந்தகாரம் ஏற்படுவதற்கு முன்னும் பின்னும் பேசப்பட்டதாகும்.

**பாட விளக்கம்:**

**1. பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே. (லூக்கா 23:33,34.)**

இயேசு தனது தாங்க முடியாத வலியையும் மிகுந்த வேதனை யையும் தனது சரீரத்தில்பட்டுக் கொண்டிருக்கும் போது அவரது இருதயத் திலும் மிகுந்த வெறுப்புணர்ச்சி எழும்பாமல் பதிலாக அன்பும் மன்னிப்புமே எழுந்தது. தனது எஜமான் நம்மிடம் சத்துருக்களை நேசியுங்கள். உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னாரோ அதனையே அந்த சிலுவையில் செய்து நிறைவேற்றினார்.

மன்னித்தல் என்ற வார்த்தைக்கு விடுவித்தல் என்று தேவன் பயன்படுத்தினார். பாவத்தின் கட்டுகளிலும், வியாதியிலும், அறியாமையிலும், வேதனையிலும், வறுமையிலும் வாடுகிற ஒவ்வொருவருக்கும் தேவன் விடுதலையை வாக்கு பண்ணியிருக்கிறார். கர்த்தராகிய இயேசு தம் பிதாவிடம், தன்னை காட்டிக் கொடுத்தவனையும், துன்பப்படுத்தினவனையும், தன் முகத்தில் காறி உமிழ்ந்தவனையும், தன்னை மரிக்கும்படி தீர்ப்பு செய்தவனையும் தன்னை சிலுவையில் அறைந்தவனையும், தன் தலையில் முட்கிரீடம் சூட்டின போர்சேவகர்களையும் மன்னிக்கும்படி வேண்டினார். தேவனுடைய நீதியின்படி இயேசு நமக்காக தண்டிக்கப்பட்டு நாம் விடுவிக்கப்பட்டோம்.

**2. இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் லூக்கா 23:42,43**

பெர்சிய மொழியில் "பரதீசு" என்பதற்கு ராஜாவின் தோட்டம் என்று பொருள். பரலோக ராஜாவின் தோட்டத்தில் வரக்கூடிய சிலாக்கியத்தை இந்த கள்ளன் பெற்றான். கள்ளன் உடைக்கப்பட்ட இருதயத்தோடு மனம் திரும்பியதால் இப்பேர்பட்ட வாய்ப்பை பெற்றான். நான் சொன்ன வார்த்தையின் மூலம் இயேசு மரித்தாலும் திரும்ப எழுந் திருப்பார் என்பதை விசுவாசித்து வெளிப்படுத்தினான். ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.

**3. இயேசு தமக்கு அன்பாயிருந்த சீஷனை கண்டு, தம்முடைய தாயை**

**நோக்கி: ஸ்திரீயே அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார் (யோவான் 19:26,27)**

இயேசுவின் சிலுவையண்டையில் நான்கு ஸ்திரீகளும் ஒரு சீஷனும் நின்றிருந்தனர். அவர்கள் இயேசுவின் தாயாகிய மரியாள், மகதலேனா மரியாள் இயேசுக்கு அன்பாயிருந்த யோவான் உட்பட 5 பேர். இயேசு தம்மை நம்பி இருந்தவர்கள் படும் வேதனையும் அவர்கள் கைவிடப்பட்டு கிடப்பதையும் கண்டு அவர்கள் மீது கரிசனை உள்ளவராக இருந்தார்.

இயேசு சிலுவையில் இருந்து தனது தாயை நோக்கி ஸ்திரீயே என்று அழைத்தார். இது மரியாள் மற்ற பெண்களுக்கு சமமானவள் என்பதையும் மனித பாவ பரிகாரத்திற்கு தனது ரத்தம் தியாகத்தின் மூலமே இரட்சிப்பு என்றும் சந்தேகமின்றி உணர்த்துகிறார். இதன் மூலம் தனது தாயும் மற்ற ஸ்திரீகளை போல பெலவீனமான பாண்டம் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

இயேசுவுக்கு சொந்த இளைய சகோதரர்கள் இருந்தனர். (மாற்கு 3:31,32) இருப்பினும் இயேசு தனது தாயை தன் சகோதரர் ஒருவர் கையிலாவது கொடுக்காமல் சீஷனிடம் ஒப்புவித்தார். இதன் மூலம் மனிதர்கள் தங்கள் உறவுகளை தங்கள் சொந்த பந்தங்கள் ஆகிய ரத்த சம்பந்தமான உறவுகளோடு நிறுத்தாமல் பிறரிடத்தில் நமது உறவு அல்லது ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்பதை வெளிக்காட்டுகிறார்.

தெய்வீக அன்பு உடைபடும் போது மனுஷீக உறவுகளும் முடிந்துவிடும். கிறிஸ்தவ அன்பானது இந்த உலகத்திற்கு காட்டப்பட வேண்டும். யோவான் தெய்வீக அன்பை இயேசுவின் மூலம் அனுபவித்தான். இந்த செய்தி பிற 3 சுவிசேஷத்தில் இல்லாமல் யோவான் புத்தகத்தில் மட்டுமே உள்ளது. யோவான் இயேசு தன் மீது நம்பிக்கை வைத்து தந்த இந்த பொறுப்பினை நினைத்து நன்றியும் பெருமிதமும் அடைந்திருப்பார். சிலுவையில் இருந்தே ஆழமான நெருக்கமான ஐக்கியம் பிறக்கிறது.

**கேள்விகள்:**

1. சிலுவையின் செய்திகள் இரண்டாம் மலைபிரசங்கம் என அழைக்கப் படுவது ஏன்?
2. இயேசு சிலுவையில் சொன்ன மன்னியும் என்ற பதத்தின் முழு பொருள் என்ன?
3. இயேசு யாரை எல்லாம் மன்னித்தார்?
4. சிலுவையின் செய்தி யாருக்கெல்லாம் பேசப்பட்டது?
5. சிலுவையிலிருந்து கள்ளனுக்கு பரதீசு ஏன் வாக்குபண்ணப்பட்டது?
6. கிறிஸ்துவுக்குள் உண்டாகிற உறவுகள் இரத்த உறவுகளை காட் டிலும் வலிமையானது என்பதை விளக்குக.

## பாடம் 32

# சிலுவையின் செய்திகள் - 2

***வேதபாகம் :*** மத்தேயு 27:45,46; மாற்கு15:33-38; யோவான்19:28-30

***மனப்பாட வசனம் :*** பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். யோவான் 17:4

***நோக்கம் :*** சிலுவையின் செய்திகளை தியானம் செய்து நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல்.



**முன்னுரை :**

இப்பாடபகுதியில் இருள் சூழ்ந்த வேளையில் இயேசு பேசின ஒரு வார்த்தையுடன் சேர்ந்த நான்கு வார்த்தைகளை பற்றி படிக்க உள்ளோம். முந்தின படத்தில் மூன்று வார்த்தைகளை தியானித்தோம்.

**பாட விளக்கம்:**

**1. "ஏலோயீ, ஏலோயீ, லாமா சபக்தானி" என்று இயேசு மிகுந்த சத்தமிட்டு கூறினார். அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். (மாற்கு 15:34)**

இந்த வார்த்தையானது மிகுந்த வலி வேதனையோடு வெளிவந்தது. மேலும் இந்த வார்த்தையானது மனிதர்களால் அவர் பட்டபாடுகளை மட்டுமல்ல தேவனால் கைவிடப்பட்டார் என்பதை காட்டுகிறது.

இயேசு தேவனை பிதா என்று அழைப்பார். ஆனால் இவ்விடத்திலோ அன்பான பிதாவாகிய தேவன் நீதியுள்ள அதிபதியாக காண்பித்தார். பாவமில்லாத அவரை பாவமாக்கி தண்டித்து மனுக்குலத்திற்காக தேவன் அவரை கைவிட்டார். இந்த வேதனையான செயல் சங்கீதம் 22-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கூக்குரலே நம்மை தேவனிடம் இணைக்கிறது.

**2. அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக: "நான் தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28) என்றார்.**

இந்த வார்த்தையானது சிறப்பு கவனத்தை நமக்கு கொடுக்கிறது. தமக்கு நேரிடுகிற எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்தவர் என்றும், வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டவைகள் நிறைவேறுகிறது என்றும் அவருடைய தாகம அழிந்துபோகின்ற ஆத்துமாக்களை தேடுகிறதையும் போதிக்கிறது.

**3. இயேசு காடியை வாங்கின பின்பு "எல்லாம் முடிந்தது" என்று கூறி தன் தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார். (யோவான் 19:30)**

அரமேயு மொழியில் இந்த வார்த்தையானது வெற்றியின் குரலாக புரிந்துகொள்ளப்படுகிறது. நமது பாவத்தை சாபத்தை நோய்களை சாத்தானை வென்று தனது ஓட்டத்தை முடித்தார். இந்த செய்தியானது பிதாவாகிய தேவன் தனக்கு கொடுத்த வேலையை செய்து முடித்து திருப்தியடைந்த சந்தோஷத்தின் சத்தமாக இருந்தது. (யோவான் 17:4)

ஏதேன் தோட்டம் தொடங்கி தேவனும் மனிதனும் எதிரியாக இருந்தனர். இப்பொழுது இருவரும் நெருக்கமாகி ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொள்கின்றனர். பரலோக வாசல் அந்த கள்ளனுக்கும் பாவிகளுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் திறக்கப்பட்டது. இதை கிறிஸ்து தனது சிலுவை மூலம் செய்து தன் பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

**4. இயேசு மிகுந்த சத்தமிட்டு "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்". (லூக்கா 23:46)**

இதன் பின்புதான் இயேசுவின் ஆவி அவரை விட்டு பிரிந்தது. தனது வேலையை முடித்து தனது ஆவியை பிதாவிடம் இயேசு ஒப்படைத்து இழந்த பரலோக நன்மையை மீட்டு நமக்கு பெற்றுத் தந்தார்.

**முடிவுரை:**

- சிலுவையின் இந்த ஏழு வார்த்தைகளும் தேவன் மனுக்குலத்திற்கு செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்தார் என்பதை காட்டுகிறது.

- இந்த வார்த்தைகள் மனிதனை சிந்திக்க வைக்கிறது.
- இந்த வார்த்தைகளை இவ்விதம் வரிசையாக்கலாம்.
- முதல் வார்த்தை தேவனை நோக்கி
- இரண்டாவது உடன் அறையப்பட்ட கள்வனுக்கு
- மூன்றாவது பெற்ற தாய்க்கும் சீஷனுக்கும்
- நான்காவது தேவனிடம்
- ஐந்தாவது தனது தேவைக்காக பிறரிடம்
- ஆறாவது தனக்குத்தானே
- ஏழாவது பிதாவை நோக்கி

**கேள்விகள்:**

1. என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று இயேசு ஏன் கதறினார்?
2. இயேசுவின் தாகம் எப்படிப்பட்டது?
3. எல்லாம் முடிந்தது என்பதன் பொருள்?
4. இவ்வுலகில் இயேசுவின் பணி என்ன?
5. என் ஆவியை உம்முடைய கைகளில் ஒப்புவிக்கிறேன் இதனை விளக்குக.
6. சிலுவையில் 7 வார்த்தைகளை எழுது.
7. மரிக்கும் முன் இயேசு சொன்ன கடைசி வார்த்தையின் முக்கியத்துவம் என்ன?


பாடம் 33


# இயேசு உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள்

***வேதபாகம் :*** 1 கொரிந்தியர்15:3-19

***மனப்பாட வசனம் :*** கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. 1 கொரிந்தியர்15:14

***நோக்கம் :*** இயேசுவின் உயிர்த்தெழுதலினால் கிறிஸ்தவம் மிகுந்த தனித்துவம் வாய்ந்ததாக மாறிவிட்டது. பிற மதங்களிலிருந்து கிறிஸ்தவத்தை இது வேறுபடுத்திக்காட்டுகிறது என்பதை போதித்தல்.





**முன்னுரை :**

இயேசு தாமே தம் உயிர்த்தெழுதலை அவரது செயல்கள், விவாதங்கள் மூலம் நிரூபித்தார். தமக்கு பாவத்தை மன்னிக்க அதிகாரம் உண்டென நிரூபித்தார். நான் மரித்தாலும், உயிரோடு எழும்புவேன் என்றும் சொன்னார். இப்படி யார் வேண்டுமானாலும் சொல்லலாம் ஆனால் நிரூபித்தவர் இயேசு ஒருவரே. இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரின் மற்ற செய்திகளை விட மிக உன்னதமான ஒன்றாக உள்ளது.

**பாட விளக்கம்:**

**1. தவறான செய்தியை பரப்புதல்:**

இயேசுவின் உயிர்த்தெழுதல் நிஜமானதல்ல இது ஒரு மாயை.

- "சீஷர்கள் இயேசுவின் உடலை திருடிச்சென்று விட்டனர்." இயேசுவின் உயிர்த்தெழுதல் முதல் கொண்டே யூதர்களின் மூப்பரால் இது பேசப்பட்டு வருகிறது. (மத்தேயு 28:11-15) போர்ச்சேவகர்களை நேருக்கு நேர் பார்க்கவே பயந்து ஓடி ஒளிந்த சீஷர்கள் இதனை செய்ததாக சொன்னது நடக்காத ஒரு செயலாகும்.
- "உண்மையாக இயேசு மரிக்கவே இல்லை : இயேசு மரித்தார் என்பது போர்சேவகர்களால் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டது. யோவான் 19:33

- “மரித்துப்போன இயேசு தங்கள் கற்பனைக் கண்களால் உயிரோடு உள்ளதாக பார்த்தார்கள்.” 1 கொரிந்தியர் 15:6-ன் படி இயேசு ஒரே நேரத்தில் 500க்கும் மேற்பட்டோருக்கு தரிசனமானார். அவரது எதிரிகளே கல்லறை காலியாக உள்ளதாக சாட்சி சொன்னார்கள்.
- “இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சீஷர்கள் பிரச்சாரம் செய்தனர்.” சீஷர்களுக்கே இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி முழுவிவரம் தெரியாது. இவர்கள் எவ்விதம் இயேசுவின் எதிரிகளிடம் சென்று இதனை கூறியிருப்பார்கள், அத்தோடு தாங்களே மிகுந்த ஆபத்தில் உள்ளதாக நடுங்கி கொண்டிருந்தனர்.

## 2. உயிர்த்தெழுதல் நிஜம் என நிரூபிக்கும் நிரூபணங்கள்:

- உயிர்த்தெழுந்த இயேசுவை பல பகுதிகளில் வசித்த மக்கள் கண்டு சாட்சியிட்டனர்.
- மகதலேனா மரியாள் (மாற்கு 6:9-11 யோவான் 20:17)
- மற்ற பெண்கள் (மத்தேயு 28:9-11)
- பேதுரு மற்றும் லூக்கா 24:34, 1கொரிந்தியர் 15:5
- எம்மாவு சீஷர்கள் (லூக்கா 24:13-35, மாற்கு 16:12,13)
- பத்து சீஷர்கள் (மாற்கு 16:1-4; லூக்கா 24:36-43)
- பதினோரு சீஷர்கள் (யோவான் 20:19-23)
- ஏழு சீஷர்கள் (யோவான் 21:1,2)
- 500 சீஷர்கள் (1 கொரிந்தியர் 1:5-7)
- யாக்கோபு மற்றும் அவரது சகோதரர் (1 கொரிந்தியர் 15:7).
- பதினோரு பேர் (மத்தேயு 28:16-20)
- பரமேறும் போது இருந்தவர்கள் (லூக்கா 24:44-53; அப்போஸ்தலர் 1:3-9)

## 1 கொரிந்தியர் நிருபத்தில் உள்ள சுருக்கமான தகவல்கள்:

- காலியான கல்லறை, அநேகர் கல்லறைக்குள் சென்று பார்த்து அவர் உயிர்த்தெழுந்தார் என விசுவாசித்தனர்.
- இயேசு உயிர்த்தெழும்போது ஏற்பட்ட சம்பவங்களை நேரில் பார்த்து சாட்சி சொன்ன காவலர்கள்.
- பயந்து நடுங்கின சீஷர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை தைரியமாய் சாட்சியிட்டனர்.
- பெந்தேகோஸ்தே அனுபவத்திற்குப் பின்பு பேதுருவின் முதல் பிரசங்கத்தில் 3000 பேர் மனம்திரும்பியது.

### 3. உயிர்த்தெழுதலின் விளைவுகள்:

- தேவ ஆவியினால் உந்தப்பட்டு எழுதப்பட்ட தேவ வார்த்தையே ஆதாரம்.

கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக பேசப்பட்டது. (1கொரிந்தியர்15:4; சங்கீதம் 16:10) அவைகள் எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டியே அறிவித்தவர் தேவன் ஒருவரே.

**• கிறிஸ்தவ விசுவாசம் வலிமை அடைகிறது.**

எபே 1:19,20 ன்படி கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே அவரை விசுவாசிக்கிற நம்மிடத்தில் அந்த பெரிய வல்லமை கிரியை செய்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை வெற்றியுள்ள வாழ்க்கை என அழைக்கப்படுவது சரீர பெலத்தில் அல்ல. அது உயிர்த்தெழுதலின் பெலத்தினாலேதான்.

**• உயிர்த்தெழுந்த இயேசு ஒரு சரீரத்தை பெற்றிருந்தார்.**

ஆணிகள் பாய்ந்த கைகள் காயப்பட்ட விலாவும் அந்த சரீரம் பெற்றிருந்தது (யோவான் 20:25-29; லூக்கா 24:39). அவர் சாப்பிட்டு, தாம் ஆவி அல்ல என காட்டினார். லூக்கா 24:41-43 அவரை தொடவும் உணரவும் முடிந்தது (லூக்கா 24:39; மத்தேயு 28:9)

அவருடைய சரீரம் ஒரு வித்தியாசமான சரீரம். மூடப்பட்ட கதவின் வழியாக உள்ளே நுழைய முடிந்தது. நம் உயிர்த்தெழுதலின் சரீரமும் இப்படியே இருக்கும் (1 யோவான்3:2) அவர் உயிர்த்தெழுந்த அப்படியே நாமும் உயிர்த்தெழுவோம் (2 கொரிந்தியர்4:14) உயிர்த்தெழுதலும் ஞானஸ்நானத்திற்கு ஒப்பனையாக உள்ளது.

Resurrection is a resemblance of baptism (Rom. 6:4 - 5; 8:11).

**கேள்விகள்:**

1. இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி பரப்பப்பட்ட தவறான செய்தி எது?
2. உயிர்த்தெழுதலை பற்றி எழும் கேள்விகளுக்கு உரிய பதில்களை எழுதுக.
3. இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ட ஐந்து நபர்களை வசன ஆதாரத்துடன் கூறுக.
4. கல்லறைக்குள் சென்று இயேசுவின் உயிர்த்தெழுதலை விசுவாசித்தவன் யார்?
5. உயிர்த்தெழுந்த சரீரத்தின் இரண்டு சக்திகள் எது?
6. இயேசுவின் உயிர்த்தெழுதல் ஞானஸ்நானத்துடன் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது விளக்குக.

7. இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையால் எல்லா அற்புதங்களும் சாத்தியமாகும் என்பதை நிருபி.
8. பழைய ஏற்பாட்டில் உயிர்த்தெழுந்தவர்கள் பற்றி வசனத்துடன் வரிசைப்படுத்து.
9. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் அவருக்கு முன் பின் உயிர்த் தெழுந்தவர்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் யாது?

**செயல்திட்டம்:**

இயேசு உயிர்த்தெழவில்லை என்று வாதாடுகிற ஒருவனை வைத்து ஒரு நாடகத்தை ஏற்படுத்தி நடித்து பார்.

பாடம் 34

# இயேசு சுகம் தருபவர்

***வேதபாகம் :*** மாற்கு 5:21-43; அப்போஸ்தலர் 3:1-16

***மனப்பாட வசனம் :*** அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத்தேயு 8:17

***நோக்கம் :*** நாம் விசுவாசத்தோடு அவரை கூப்பிடும்போது அவர் நம்மை சுகமாக்குகிறார்.



**முன்னுரை:**

இயேசு பாவத்திலிருந்து மட்டுமல்ல, வியாதியிலிருந்தும் விடுவிப் பவர். இயேசுவின் பாடுகளும் மரணமும் பாவத்தில் இருந்து விடுவித்து சுகத்தையும் நமக்கு தருகிறது. நீங்கள் அவருடைய தழும்புகளால் சுகமானீர்கள். (ஏசாயா 53:5) தேவ வசனமானது நாம் அவருடைய தழும்புகளால் சுகமானதாக கூறுகிறது.

**பாட விளக்கம்:**

**1. பாவமும் வியாதிகளும்:**

மனிதகுலம் இழந்த இரண்டு பெரும் நன்மைகள் ஆரோக்கியமும் பெலனும். பாவமும் வியாதியும் மனுக்குலத்தை சபித்தது. சாபத்தினால் ஏற்பட்ட இந்த இரண்டு பெரும் பிரச்சனைகளுக்கும் கல்வாரியில்

பரிகாரம் செய்யப்பட்டது. நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் இயேசு கல்வாரியில் பெற்ற வெற்றியினால் உண்டானது. இதில் சுகமும் ஒன்றாகும்.

**2. இயேசுவின் மூலம் நோயிலிருந்து சுகம் :** "He has borne our grief and carried our sorrows" (Isaiah 53:4).

அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம் துக்கங்களை சுமந்தார். எபிரெய மொழியில் வியாதி என்பது 'சோலி' என்ற வார்த்தையிலிருந்து 'சாலா' என்றும் அதாவது பெலவீனம் பெலவீனமாக இருத்தல், வியாதியாக இருப்பது என்றும் பொருள்படும்.

வலி என்பதன் மூல வார்த்தை 'மாகாப்'. இதற்கு துக்கங்கள் என்று பொருள். ஏசாயா 53:4-ல் அவர் நமது பலவீனங்களை சுமந்தார். நோய்களை சுமந்தார் என மத்தேயு 8:17இல் இதனை குறிப்பிடுகிறார். 'நாசா' என்பது எடுத்தார், சுமந்தார் என இரண்டு பொருளைக் கொடுக்கிறது.

இயேசு நமது பாவத்தை நீக்கி நம்மை சுகமாக்கினார். அதுபோல நம் வியாதியையும் நீக்கி நல்ல சுகத்தை நமக்கு தந்தார். இது நமக்கு கிடைத்த முழு சுகம். மீட்பு என்பது நம் ஆவி, ஆத்துமா. சரீரம் முழுமைக்கும் கொடுக்கப்பட்டதாகும்.

கிரேக்க மொழியில் சோசா என்பது இரட்சிக்கப்பட்டனர் (ரோமர் 10:9) மற்றும் சுகம்பெற்றனர் என (மாற்கு 6:56) இடம்பெறுகிறது. புதிய ஏற்பாடு மொழி இதனை மீட்பு, விடுதலை என கூறுகிறது.

**3. ஏன் இயேசு மக்களை சுகமாக்கினார்:**

- தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி (ஏசாயா 53:4)
- மனதுருக்கத்தின் காரணமாக (மத்தேயு 14:14; மாற்கு 10:40,41; 9:22)
- தேவ இரக்கத்தை வெளிகாட்டினார் (பிலிப்பியர் 2:27)
- தேவனிடத்திலிருந்து வந்தவன் என்பதை நிரூபிக்க (அப்போஸ்தலர் 2:22)
- சாத்தானின் கிரியைகளை அழிக்கும்படியாக (1யோவான்3:8, எபி.2:14)
- தேவ வேலையை வெளிப்படுத்த (லுக்கா13:10-17)

**4. சுகம்பெற இயேசு கையாண்ட முறைகள்:**

- வல்லமையோடு கட்டளையிட்டார் (மத்தேயு 8:5-10; மாற்கு 11:13).
- வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைத்தார் (மாற்கு 5:21-23, 6:5).
- வியாதியை கடிந்துகொண்டார் (லுக்கா 4:33, 39).
- அவர் தொடும்போது (மத்தேயு 8:3)
- வியாதியுள்ளவர்கள் அவரை தொடும்போது (மத்தேயு 14:36,37; மாற்கு 5:25-29).

### 5. யெகோவா ரா.ஃப்பா சுகம் தரும் தெய்வம்:

பழைய ஏற்பாட்டில் தேவன் நம்மை சுகமாக்கும் நபராக வெளிப்படுத்தினார். சுகம் தரும் தெய்வம், அவரே நம் வைத்தியர் (யாத்தி.15:26) இவர் என்றும் மாறாதவர். இவர் ஒருவரே உருவத்தில், இயற்கையில், திறமையில், வலிமையில், தீர்ப்பு வழங்குவதில், முடிவெடுப்பதில் மாறாதவர்.

### 6. நாம் சுகம் பெற என்னென்ன செய்ய வேண்டும்:

உங்களில் ஒருவன் வியாதிபட்டால் ஜெபம் பண்ணக்கடவன் என்று வேதம் நமக்கு அடிப்படை சத்தியத்தை போதிக்கிறது. அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ண கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும். அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். (யாக் 5:14-16)

- மூப்பர்களை அழை
- பாவத்தை அறிக்கை செய்
- ஜெபி, அபிஷேகம் செய்
- விசுவாசத்துடன் ஜெபி கர்த்தர் அவனை எழுப்புவார்

**கேள்விகள்:**

1. நம் பாவமும் வியாதியும் நீங்க நாம் செய்ய வேண்டியது என்ன?
2. வியாதி என்பதற்காக எபிரேய பதம் எது?
3. எப்பொழுது பாவம் மன்னிக்கப்பட்டது எப்பொழுது வியாதி நீங்கும் விளக்குக.
4. கீழ்கண்டவற்றை விளக்குக.
   சோலி, நாசா, மாகாப், சோசா
5 இயேசு ஏன் நமக்கு சுகம் தருகிறார்?
6. சுகப்படுத்த இயேசு கையாண்ட முறைகள் என்ன?
7. சுகம் பெற நாம் செய்ய வேண்டியது என்ன?
8. வேதத்தில் தங்கள் வியாதியிலிருந்து இயேசுவினால் சுகம் பெற்ற ஐந்து பெயர்களை கூறு.
9. இயேசு சுகமாக்குகிறார் என்பதை நீ நம்புகிறாயா? எப்போதாகிலும் அவரால் சுகமாக்கப்பட்டதுண்டா?
10. குணமாக்கும் வரம் என்பது என்ன?
11. சில முற்கால மக்கள் தாங்கள் சுகமடைய கையாண்ட முறைகளை பற்றி ஆய்வு செய்க.

பாடம் 35

# இயேசு பாவத்திலிருந்து விடுவிப்பவர்

***வேதபாகம் :*** லூக்கா 19:1-11; 5:27-32.

***மனப்பாட வசனம் :*** இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார். லூக்கா 5:31,32

***நோக்கம் :*** இயேசு நம் இருதயத்தில் இருப்பவரென்றால் பாவத்திற்கு இடமில்லை.



**முன்னுரை :**

இயேசு பாவிகளின், ஆயக்காரர்களின் சிநேகிதன் என்று அழைக்கப்பட்டார். பரிசேயர்களால் புறக்கணிக்கப்பட்ட பாவிகள், குற்றவாளிகளோடு இயேசு வெகுநேரம் செலவிட்டார். இதன் நிமித்தமே பரிசேயர்களும், யூத மதத் தலைவர்களும், இவர் பாவிகளின் சிநேகிதன் என்று வேடிக்கை செய்தனர். மிக முக்கியமானது என்னவெனில் இயேசு வோடு பேசின பாவிகள் எல்லாரும் மனம்திரும்பிவிட்டனர்.

இயேசுவினிடத்தில் வந்துவிட்டபிறகு பாவத்திற்கும், சுயநலத் திற்கும், ஒழுங்கின்மைக்கும் இடமில்லை. அவர்கள் இயேசுவை பின் பற்றுபவர்களாக மாறிவிடுகின்றனர். இப்படி மாற்றமடைந்த ஒருவரை பற்றி பார்ப்போம்.

**பாட விளக்கம்:**

**1. ஆயக்காரனாகிய லேவி:**

லேவி, சகேயுவை போல வரி வாங்குபவன். தனது சொந்த மக்களிடையே வரிகளை வாங்கினான். எபிரேய அல்லது யூத மக்களிடம் வாங்கி ரோமர்களுக்கு செலுத்தினான். தனது சொந்த மக்களால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டான். எல்லாரும் அவனை திட்டுவார்கள். இவனுக்கு எந்த ஒரு மதிப்பும், மரியாதையும் கிடையாது. இந்த வேலையினால் இவன் பணக்காரனாகவும் மாறினான். ரோம அரசாங்கம் இவனுக்கு கூடுதலாக வரிகளை வாங்கிய அந்த கூடுதல் தொகையை அவர்கள் வைத்துக்கொள்ளவும் சம்மதித்து இருந்தது. அதனால் இந்த லேவி அதிகப்படியான வரிகளை மக்கள்மீது செலுத்தினான். ஆகவே வெறுக்கப்பட்டவனாகவும், நண்பர்களே இல்லாதவனாகவும், தனிமையாக்கப்பட்டவனாகவும் வாழ்ந்து வந்தான்.

**2. லேவி இயேசுவைப் பற்றி அறிதல்:**

இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டான். இயேசுவின் அன்பையும், நற்போதனைகளையும், வல்லமையையும் கேட்டான், பார்த்தான். இயேசு வின் போதனைகளில் "தேவனை நேசி, உன்னைப்போல பிறரை நேசி" என்ற போதனைகளை கூர்ந்து கவனித்தான். தன்னை நேசிப்பதற்கு யாரு மில்லை என உணர்ந்தான். இயேசு தேவனுடைய குமாரன் மேசியா என்பதை எண்ணத் துவங்கினான்.

**3. இயேசுவினால் அழைக்கப்படுதல் :**

ஒரு நாள் லேவி தன் வழக்கத்தின்படி வரி வசூலித்து கொண்டிருக்கும் போது தனது அருகே யாரோ ஒருவர் வந்து நிற்பதை உணர்ந்தான். தன் தலையை உயர்த்தி பார்த்தான். அவர் இயேசு. அவனுக்கு ஆச்சரியம். அவன் கண்கள் அதை நம்பவில்லை. பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை. நீ என்னை பின்பற்றி, உனக்காக நான் வைத்திருந்த வேலைக்காக வருவாயா என்றார். இயேசு இதை சொன்னதற்கு மறு வார்த்தை எதுவும் கூறாமல் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். இதை ஒருபோதும் எதிர்பாராத லேவி இந்த பெரிய எஜமானுடன் நட்பு கொள்ளுவதில் பெருமகிழ்ச்சி அடைந்தான். இயேசு அவனை தனக்கு சேவை புரியும்படி அழைத்தார். தனது வாழ்க்கை மாறப்போகிறது என்ற எண்ணத்துடன் தனது கணக்குகளை எல்லாம் முடித்துவிட்டு அவருக்குப்பின் சென்றான்.

**4. இயேசுவை கனப்படுத்தி விருந்தளித்த லேவி:**

தனது சந்தோஷத்தை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. பெரிய விருந்து ஆயத்தம் செய்தான். அப்பொழுது இயேசு பாவிகளோடு

அமர்ந்து சாப்பிடுகிறதை கண்டு பரிசேயர்களும், யூத தலைவர்களும் முறுமுறுத்தனர். ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்பவர்களுக்குத்தான் எனது உதவி தேவை. சரியான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு எனது உதவி தேவைப்படாது. நீதிமான்களை அல்ல. பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்று இயேசு அவர்களுக்கு பதில் சொன்னார்.

இந்த லேவி இயேசுவை பின்பற்றிவர தீர்மானித்தது முதல் தனது பாவத்தையும், சுயநலமான எண்ணங்களையும் உதறிவிட்டான். தேவனுக்கு எது பிடிக்குமோ அதையே செய்ய முடிவு செய்தான். இயேசுவின் சீஷனாக மாறினான். இவர் பேரும் மத்தேயு என்று மாற்றப்பட்டது.

## முடிவுரை:

பிள்ளைகளே உங்கள் கிறிஸ்தவ பண்புகள் பழக்க வழக்கங்கள் மற்றவர்களுக்கு ஒருவேளை புரியாது. இதனால் நீங்கள் அவர்களை விட்டு ஒதுக்கப்பட்டவர்கள் போல இருக்கலாம். நாம் ஆண்டவருக்கும் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் தரவேண்டும். மற்றவர்களுக்கு முன்பாக ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

## கேள்விகள்:

1. லேவியின் பணி என்ன?
2. லேவி தனது சொந்த மக்களால் ஏன் வெறுக்கப்பட்டான்?
3. லேவி பணக்காரனாக இருந்தும் ஏன் அவன் மகிழ்ச்சியாக இருக்கவில்லை?
4. இயேசுவைப் பற்றி லேவி கேள்விப்பட்டது என்ன?
5. லேவி இயேசுவை சந்தித்த முதல் சந்திப்பு எப்படிப்பட்டது என்பதை கூறுக.
6. லேவி இயேசுவைப் பின்பற்றிய சூழ்நிலை எப்படிப்பட்டது என விவரி.
7. இயேசுவுக்கு லேவி விருந்து அளித்த காரணம் என்ன?
8. லேவி மத்தேயுவாக மாற்றப்பட்டது எவ்விதம்?
9. விசுவாசிகளாக இருக்கிற ஐந்து நபர்களின் கிறிஸ்தவர் அல்லாத காலத்தின் அனுபவங்களையும், இப்பொழுது உள்ள அனுபவங்களையும் பற்றி கேட்டு எழுதி வரவும்.

## பாடம் 36

# இயேசுவே இரட்சகர்

***வேதபாகம் :*** யோவான் 3:16-21; 12:44-50.

***மனப்பாட வசனம் :*** தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.

***நோக்கம் :*** இவ்வுலகில் பாவத்திலிருந்து விடுதலையையும், இரட்சிப்பையும் இயேசுவின் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை கற்றுத்தருதல்.



**முன்னுரை :**

மனிதனை தேவன் படைக்கும்போது பாவம் இல்லாதவனாக இருந்தான். தனது சாயலில் அவனை சிருஷ்டித்தார். (ஆதியாகமம்1:26) ஆனால், அவன் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவியாக மாறினான். நீதிபதி ஆகிய தேவன் அவனுக்கு உரிய தண்டனை அளித்தார். இருப்பினும் தனது இரக்கத்தின்படி தேவன் தனது ஒரே பேறானகுமாரனை மனிதன் பாவத்திலிருந்து மீட்கப்பட அனுப்பினார். இயேசுவை விசுவாசித்தால் இந்த நித்திய தண்டனை நரகத்திலிருந்து நாம் மீட்கப்பட்டு நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம்.

**பாட விளக்கம் :**

**1. பாவியான மனுஷன்:**

ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் நுழைந்து ஏவாளை வஞ்சித்து, ஆதாமை பாவம் செய்ய வைத்தான். அவன் மூலம் பாவம் எல்லா மனித இனத்திற்குள்ளும் வந்தது. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களானார்கள். (ரோமர் 5:12, 3:10, 23)

**2. தேவன் நீதியும் பரிசுத்தமுமானவர்:**

தேவன் நீதியுள்ளவரானதால் பாவத்தை பொறுத்துக் கொள்கிறதில்லை. அவர் பரிசுத்தராகவும் இருக்கிறார். பாவியான மனிதன் எவ்விதத்திலும் தேவனை நெருங்க முடியாது. இப்படியே ஆதாமும், ஏவாளும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அவர் பரிசுத்தமும், நீதியும் உள்ளவர் மட்டுமல்லாமல் உண்மையுள்ளவர். அவர், நீங்கள் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை சாப்பிடவேண்டாம். அப்படி சாப்பிட்டால் சாவீர்கள். (ஆதியாகமம் 3:3) அவர்களுக்கு சொன்னபடியே நித்திய மரணம் என்ற தண்டனையை அளித்தார். (ரோமர் 6:23)

**3. தேவன் அன்பாக இருக்கிறார்:**

தேவன் அன்புள்ளவர் ஆனபடியால் அவர் மனிதகுலத்தை கைவிடவில்லை. இரட்சகரை வாக்கு பண்ணினார். (ஆதியாகமம்3:15). தாம் உண்மையுள்ளவராய் இருந்து தண்டனையை நிறைவேற்றியது போல கிறிஸ்துவை விசுவாசிப்பது மூலம் நித்திய ஜீவனையும் வாக்களித்தார். (ரோமர் 6:23)

**4. இயேசு பாவிகளுக்காக மரித்தார்:**

தேவன் கிறிஸ்துவின் மூலம் தனது இரக்கத்தை மனிதனுக்கு காட்டினார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோமர்5:8) இயேசு பிறக்கும்போது மரியாள் பெற்றெடுக்கும் பிள்ளையாகிய இயேசு, ஜனங்களை பாவத்திலிருந்து மீட்பார் என்று சொல்லப்பட்டது. இயேசு என்பது எபிரேய மொழிப்படி பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழியில் கர்த்தர், “இரட்சகர்” என்றும் பொருள். இந்த பெயரைத்தவிர இரட்சிக்கப்பட வேறு ஒரு நாமமும் இல்லை என்று வேதம் சொல்கிறது (அப்போஸ்தலர் 4:12). மனிதனுடைய பாவத்திற்காக பலியானவர் இயேசு ஒருவரே. யோவான் 1:12யை வசித்துப்பார்.

**முடிவுரை:**

நீ இயேசுவை உன்னுடைய ஆண்டவராக ஏற்றுக்கொண்டாயா, இல்லையெனில் இன்றைக்கு அவரை உன் இரட்சகராக ஏற்றுக்கொள். இது மிகவும் சுலபம். நீ உனது பாவங்களுக்காக மனம் திரும்பி

நல்ல பிள்ளையாக வாழ தீர்மானம் செய்து வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடு. (பிள்ளைகளை அர்ப்பணிக்க செய்து ஆசிரியர்கள் ஜெபித்து முடிக்கவும்).

**கேள்விகள்:**

1. இயேசு என்றால் என்ன பொருள்?
2. ஏன் தேவனால் பாவத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை?
3. இந்த உலகத்திற்குள் எவ்வாறு பாவம் நுழைந்தது?
4. தேவன் அன்பாக இருக்கிறார் என்பதை உன்னால் எப்படி விளக்க முடியும்?
5. "பாவத்திலிருந்து மீட்பு" வேதம் எவ்விதம் போதிக்கிறது?

பாடம் 37

# விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு

***வேதபாகம் :*** அப்போஸ்தலர் 9:1-9,16-34.

***மனப்பாட வசனம் :*** கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. (எபே 2:8.)

***நோக்கம் :*** இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால் மட்டுமே நாம் இரட்சிக்கப் படுகிறோம் என்பதையும், நாம் பிறருக்கும் அவரை பற்றி சொல்லவேண்டும் என்பதையும் போதித்தல்.




## முன்னுரை :

பெந்தேகோஸ்தே என்ற நாளில் துவங்கி "கர்த்தராகிய இயேசுவை விசுவாசியுங்கள். சந்தோஷமும், சமாதானமும் பெறுவீர்கள்" என்று பிரசங்கிக்க தொடங்கினார்கள். இயேசுவை நம்புகிற அனைவரும் புதிய சிருஷ்டியாகவும், (2கொரிந்தியர் 5:17) அவருக்குள் புது வாழ்வையும் துவங்கினார்கள்.

## பாட விளக்கம்:

1. பவுலின் மனமாற்றம் (அப்போஸ்தலர் 9:1-9)

பவுல் மனத்திரும்புகிறதற்குமுன் "சவுல்" என அழைக்கப்பட்டார். (அப்போஸ்தலர் 7:58) இவர் ஸ்தேவானை கொலை செய்தவர்களின்

வஸ்திரத்தை காத்துக் கொண்டிருந்தான் என்று இவரைப்பற்றி முதலாவதாக வருகிறது. பின்பு எருசலேமிலுள்ள விசுவாசிகளை துன்பப்படுத்த தீயவர்களின் கூட்டத்திற்குத் தலைவனாக மாறினார். எருசலேமில் இப்படி கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி தமஸ்கு என்ற ஊரிலும், இப்படி செய்ய உரிய கடிதம் பெற்று புறப்பட்டான். அப்படி செல்லும் வழியில் திடீரென பெரிய வெளிச்சத்தை கண்டு கீழே விழுந்தான். இயேசு அவனோடு பேசினார். அவனது வாழ்க்கையே மாறிவிட்டது. பழைய மனிதனாக அல்ல, புதிய மனிதனாக மாறினான். கிறிஸ்துவுக்காக பலமுறை சிறைக்கு சென்றான். கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் 1:21) என்று கூறினான். சோதனைகளை, துன்பங்களை, உபத்திரவங்களை சந்தித்தார். இருப்பினும் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார்.

### 2. சிறைச்சாலைகாரனின் மனமாற்றம் (அப்போஸ்தலர் 16:14-34) :

தனது இரண்டாம் மிஷனரி பயணத்தில் சீலாவை கூட்டிக்கொண்டு பிலிப்பு பட்டணத்திற்கு சென்றார். ரோமர்களின் ஆட்சியின் கீழிருந்த மக்கதோனியாவின் பகுதியாகும். அங்கு குறிசொல்வதால் தங்கள் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை கொடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டார்கள். (அப்போஸ்தலர் 16:19)

பவுல் அந்த ஆவியை விரட்ட அது ஓடிவிட்டது. அதை விரும்பாத அவளது எஜமான்கள் பவுலையும், சீலாவையும் சிறையில் அடைத்தனர். நடுராத்திரியில் அவர்கள் தேவனைதுதித்துப் பாடினார்கள். திடீரென பூமியதிர்ச்சி உண்டாகி சிறைச்சாலை கதவுகளும் திறந்தன. இந்த ஜீவனுள்ள தேவன் ஜெபம், துதியில் எத்தனை மகத்தான காரியங் களைச் செய்கிறார் என்று கண்ட சிறைச்சாலைகாரன், இவர்கள் தப்பித்துவிட்டார்கள் என்று எண்ணி தன்னை கொலைசெய்து கொள்ள பார்த்தான்.

பவுல் மிகுந்த சத்தமிட்டு உனக்கு கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே, நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அந்த சிறைச்சாலைகாரன் நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டு மென்று கேட்டான். அதற்கு பவுல் கர்த்தராகிய இயேசுவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றார். (அப்.16:24-34) சற்றும் தாமதிக்காமல் அந்த இரவே இயேசுவை ஏற்றுக்கொண்டான். இவர்களின் கட்டுகளையும் அகற்றினான்.

### முடிவுரை:

பவுலின் மனமாற்றம் இயேசுகிறிஸ்து ஜீவனுள்ள தேவன், எந்த மனிதனையும் மாற்ற வல்லவர் என்பதை காட்டுகிறது. இந்த சிறை தலைவனும் அப்படியே இயேசுவை ஏற்றுக்கொண்டான். அன்பு பிள்ளையே

நீ இயேசுவுக்கு உன்னை அர்ப்பணித்து விட்டாயா, இல்லையெனில் இன்றைக்கு அர்ப்பணிப்பாயாக ஜெபிப்போம்.

**கேள்விகள்:**

1. பவுலின் இரண்டாம் பயணத்தில் உடன் சென்றது யார்?
2. பவுலின் பழைய பெயர் என்ன? அப்போஸ்தலரில் முதலில் இவரைப் பற்றி குறிப்பிடும் இடம் எது?
3. பவுலும், சீலாவும் சிறை சென்றது எதற்காக?
4. சிறைச்சாலைகாரனின் உரையாடலை கூறு.
5. சவுல் இயேசுவை சந்தித்த இடம் எது?
6. "ஆண்டவரே நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்" யார் யாரிடம் கூறியது?
7. வேறு ஒரு நம்பிக்கையில் இருந்து இப்பொழுது இயேசுவின் மீது நம்பிக்கையாய் உள்ள பத்து நபர்களின் பெயர்களை கூறு.

பாடம் 38

# உங்கள் இரட்சிப்பை உறுதி செய்யுங்கள்

***வேதபாகம் :*** மாற்கு1:17-22; லூக்கா 23:39-43, 2தீமோத்தேயு4:6-8

***மனப்பாட வசனம் :*** நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே, அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதை தந்தருளுவார். (2 தீமோத்தேயு 4:7-8)

***நோக்கம் :*** சிறு பிள்ளைகளை உற்சாகப்படுத்தி, இறுதிவரை இயேசுவில் உறுதியாய் இருக்க போதிப்பது.



**முன்னுரை :** தம்மை நம்புகிற ஒவ்வொருவருக்கும் தேவன், இரட்சிப்பை வாக்குப்பண்ணியுள்ளார். அதே நேரம் அதை காத்துக்கொள்ளும் பொறுப்பை அவர்களுக்கு கொடுத்துள்ளார். மத்தேயு 7:21 வாசிக்க

**பாட விளக்கம்:**

**1. இரட்சிப்பை பெற தவறிய ஐசுவரியவான் (மாற்கு10:17-28) :** ஒரு நாள் ஒரு ஐசுவரியவான் ஓடிவந்து நித்தியஜீவனை பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அவன் மீது அன்பு கூர்ந்து, நீ உனக்கு உரியதையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு. பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அவன் இந்த நித்திய ஜீவனை விட ஐசுவர்யத்தை

மிகவும் அதிகமாக நேசித்தபடியால், அதற்கு கீழ்ப்படியாமல் சென்று விட்டான். அவனால் தனது இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**2. சிலுவையில் உடன் அறையப்பட்ட கள்ளன் இரட்சிக்கப்படுதல் (லூக்கா 23:39-43) :** இவன் அந்த ஐசுவரியவானை விட வித்தியாச மானவன். இரட்சிக்கப்பட பல வாய்ப்புகள் வந்தும் அதை உதறி தள்ளுப வர்கள் உண்டு. இவனோ பெற்ற வாய்ப்பைக்கொண்டு இயேசுவை ஏற்றுக்கொண்டான். மன்னிப்பையும் பரதீசையும் வாக்குப்பண்ணினார். தனக்கு உண்டான வாய்ப்பை பயன்படுத்தி மீட்பைப்பெற்றான்.

**3. அப்போஸ்தலன் பவுல் தனது இரட்சிப்பை காத்துக்கொண்டான் (II தீமோ. 4:6-8):** தமஸ்குவுக்குப் போகும் வழியில் இயேசுவை சந்தித்தார். தனது வாழ்வை அவருக்கு அர்ப்பணித்தார். செல்லும் இடமெங்கும் சபைகளை தோற்றுவித்தார். தீமோத்தேயு போன்ற அநேக வாலிபர்களை உருவாக்கினார். தனது முதிர் வயதில் இரண்டாம் தீமோத்தேயு என்ற நிருபத்தை எழுதினார். அநேகமுறை சிறையில் துன்பப்பட்டார். செல்லும் இடமெங்கும் சுவிசேஷத்தை அறிவித்து சபைகளை ஏற்படுத்தினார். சிறையில் இருந்துகொண்டு கூட ஜனங்களை கிறிஸ்துவினண்டை நடத்தினார். எடுத்துக்காட்டு (பிலமோன்)

இப்போதோ மரணத்தை நோக்குபரைபோல நான் கடந்து செல்லும் வேளை வந்தது என்று கூறினான். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடினேன். எனது ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். நீதியின் கிரீடம் எனக்காக ஆயத்தமாக உள்ளது. அதை கர்த்தர் எனக்குத் தருவார் என்றார். இவைகள் வெற்றியடைந்த ஒரு போர்வீரனின் வார்த்தைகள். தனது இறுதி மூச்சுவரை பவுல் நம்பிக்கையில் உறுதியுடன் இருந்தார்.

**முடிவுரை :** உங்கள் இரட்சிப்பைப்பற்றிய நிச்சயம் இருக்கிறதா, அல்லது தனது இரட்சிப்பின் வாய்ப்பை தவறவிட்ட ஐசுவரியவானைப்போல இருக்கிறீர்களா, தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திய கள்ளன் போல இருக்கிறீர்களா, நாளை நமதல்ல, இன்றைக்கே இரட்சிப்பின் நாள். நாம் சிறுவயதிலேயே இயேசுவை ஏற்றுக்கொண்டுவிட்டால் நீண்டகாலங்கள் இயேசுவுடன் வாழலாம். இறுதிவரை உறுதியுடன் வாழ்ந்து அந்த அழகான கிரீடத்தை பெறுவோம். (ஜெபித்து முடிக்கவும்)

**கேள்விகள்:**

1. ஏன் ஐசுவரியவானால் இயேசுவை பின்பற்ற முடியவில்லை?
2. இயேசுவை ஏற்றுக்கொள்ள கள்ளன் எத்தனை வாய்ப்புகளை பெற்றான்?
3. பவுல் சிறையில் இருக்கும்போது கிறிஸ்துவுக்குள் நடத்திய இருவர் யார்?


பாடம் 39

# இயேசுவைப் போல இரு

***வேதபாகம் :*** ரோமர் 6:3-14; 1 யோவான் 3:1-3.

***மனப்பாட வசனம் :*** பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1 யோவான் 3:2

***நோக்கம் :*** மறுரூபமான வாழ்வை இப்பூமியில் வாழ்ந்து காட்ட வேண்டும் என சிறுவர்களை ஊக்கப்படுத்துதல்.




**முன்னுரை :**

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது குறிப்பிட்டகாலம் அல்லது பருவ நிலைக்கு ஏற்ப மாறுவது அல்ல. இது வாழ்நாள் முழுவதும் வாழ்வது. நாம் தினமும் அவரது கிருபையிலும், வார்த்தையிலும் வளர்ச்சி அடைய தேவன் எதிர்பார்க்கிறார். ஒரு செடிக்கு சரியான நேரத்தில் தண்ணீர் விடாவிட்டால் என்ன ஆகும்.

**பாட விளக்கம் : 1. ஞானஸ்நானத்திலும் இயேசுவைப்போல (ரோமர் 6:3-11) :** ஞானஸ்நானம் என்பது தேவனுடைய கட்டளை (மத்தேயு 28:19,20 மாற்கு 16:15) இதனால் நாம் நம்மை இயேசுவுடன் இணைத்துக் கொள்கிறோம்.

• **அவருடைய மரணத்தின் மூலம் இணைக்கப்படுதல்**

நமது பாவங்களுக்கு இயேசு சிலுவையில் மரித்தார். நாமும் பாவத்திற்கு மரிக்க வேண்டும். அதாவது நமது சரீரம் ஜீவ பலியாக படைக்கப்பட வேண்டும். இவ்வுலகத்தில் உள்ள மனிதர்களைப் போல தவறான வாழ்வு வாழக்கூடாது. ரோமர் 12:1,2 வாசிக்க

• **அவருடைய அடக்கத்தின் மூலம் அடையாளப்படுதல்**

இயேசு மரித்து, பின்பு அடக்கம் செய்யப்பட்டதைபோல நாமும் பாவத்திற்கு ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் செய்யப்படுகிறோம். (ரோமர் 6:4)

• **அவருடைய உயிர்த்தெழுதலில் அடையாளமாக்கப்படுதல்**

இயேசு கல்லறையில் இருந்து எழும்பினார். நாமும் ஞானஸ்நானம் பெற்று புதிய சரீரத்துடன் எழும்ப வேண்டும். உயிர்த்தெழுதலில் இயேசு புதிய சரீரத்துடன் எழுந்தது போல நாம் புதிய சரீரத்துடன் எழும்புவோம். புதிய வாழ்வை பெற்று வாழ்கிறோம்.

• **அவருடைய வெற்றியுள்ள வாழ்க்கையின் மூலம் அடையாள மாக்கப்படுதல் :** இயேசு தனது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் வெற்றி பெற்றார். ஆகவே நாம் பாவத்தின் கட்டுகளில் இருந்து விடுதலை பெற்று வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும். (ரோமர் 6:12-14)

• **அவருடைய பாடுகளினால் அடையாளம் காணப்படுதல் :** அவருடைய பிள்ளைகளாக வாழும்போது பல துன்பங்களும், கஷ்டங்களும் ஏற்படும். அதனால் நாம் சோர்ந்து போகாமல் அவருடைய மகிமைக்காக பின்வரும் காரியங்களை பின்பற்ற வேண்டும்

- கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம் (பிலிப்பியர் 3:10)
- அவருடைய நாமத்தை விசுவாசிப்பது மட்டுமல்ல, அவர் நிமித்தம் பாடுபடவும் வேண்டும் (பிலிப்பியர் 1:29)
- கிறிஸ்தவனாக இருப்பதற்கு வெட்கப்படாமல் இருப்பது (1பேதுரு4:16)
- பிள்ளைகளைபோல கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ளுதல் (எபி 5:8)
- துன்பங்கள் மூலம் இரட்சிப்பை பூரணப்படுத்துதல் (எபி 5:9)
- இயேசுவைப்போல இவ்வுலகில் பரிசுத்தமாய் வாழ வேண்டும் (1பேதுரு1:16)

**முடிவுரை :** இயேசுவே நமக்கு முன்மாதிரி (1பேதுரு2:21). அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றுதல் அவசியம். அவர் நமக்கு முன்மாதிரியாக உள்ளதுபோல நாமும் பிறருக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

**கேள்விகள்:**

1. ஞானஸ்நானம் என்றால் என்ன? இதனை எத்துடன் ஒப்பிடுவது?
2. கிறிஸ்துவின் பாடுகள் தரும் பொருள் என்ன?
3. கிறிஸ்தவ வாழ்வு குறுகிய காலத்திற்கு உரியதல்ல விளக்குக.

பாடம் 40

# வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை

***வேதபாகம் :*** ரோமர் 6:4-22; 8:31-19; 12:1,2

***மனப்பாட வசனம் :*** தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (1யோவான் 5:4)

***நோக்கம் :*** நமக்கு ஒரு வெற்றிபெற்ற இரட்சகர் உண்டு. அதனால் பிள்ளைகளே, நீங்கள் எவ்விதத்திலும் ஜெயம்பெறுவீர்கள் என்ற உறுதியை தரவேண்டும்.




**முன்னுரை :**

பரலோகம் சென்ற பிறகு அங்கு ஏதும் நாம் சாதிக்க முடியாது. இப்பூமியில் தான் சாதனைகள் வெற்றிகளை பெற முடியும். இதனை சாத்தான் நமக்கு மறைத்து, தடுத்து விடுவான். நாமோ பூமியிலேயே வெற்றிகளை குவிக்க வேண்டும்.

**பாட விளக்கம்:**

**1. தேவன் நமக்கு ஒரு வெற்றியுள்ள வாழ்வை வாக்குப்பண்ணியுள்ளார்.**

- என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீர்கள் உள்ள நதிகள் ஓடும். (யோவான்7:38) இது இயேசுவால் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம்.
- "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அவைகள் பூரணப்

படவும் வந்தேன்." (யோவான் 10:10) இயேசு நமக்கு வெற்றியின் ஒரு பகுதியை தராமல் முழுமையும், பரிபூரணமும் உள்ள வாழ்க்கையை அளித்து எந்த எதிரான சூழ்நிலையும் மேற்கொள்ள செய்கிறார்.

- இயேசுவை நம்பாதவர்கள் தங்கள் வாழ்க்கையில் தோற்கின்றனர். நமக்கு தேவ கிருபை கொடுக்கப்பட்டுள்ளது. (2 கொரிந்தியர் 12:9)
- பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. (ரோமர் 6:14)
- நாம் முற்றிலும் ஜெயம் கொள்கிறவர்கள். (ரோமர் 8:27)

### 2. வெற்றியுள்ள வாழ்வுக்கு அவசியமானவைகள்:

- விசுவாசம். (கலாத்தியர் 3:11)
- மனம் மறுரூபமாக்கப்படுதல். (ரோமர் 12:2; 6:4-22)
- நமது சரீரத்தை தேவனுக்கு நீதியின் ஆயுதங்களாக ஒப்புக்கொடுத்தல். (ரோமர் 6:11-13)
- குயவன் கையில் களிமண்போல நம்மை ஒப்புக்கொடுத்தல். (எரே. 18:1-6).

### 3. வெற்றி எப்பொழுது நமக்கு கிடைக்கும்:

இன்று முதல் நீங்கள் வெற்றி வாழ்க்கை வாழ துவங்குங்கள். நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இலக்கை நோக்கி ஓடுங்கள் (1 கொரிந்தியர் 9:24)

**கேள்விகள்:**

1. வெற்றியுள்ள வாழ்க்கை என்றால் என்ன? பரிபூரண வாழ்விற்கான அவசியங்கள் என்ன?
2. பரிபூரணமான வாழ்க்கை எனில் என்ன? தோல்வியை எவ்விதம் மேற்கொள்வாய்?

Fine manners are the mantle
of fair minds

# கேள்வித்தாள் - IV

## மதிப்பெண்கள் : 50

(10 x 1 = 10)

**1.கீழ்கண்ட வினாக்களுக்கு சில வரிகளில் பதில் கூறு.**

1. இயேசு சிலுவையில் கள்ளனுக்கு அளித்த வாக்குறுதி என்ன?
2. சிலுவையின் இரண்டு செய்திகளை கூறு?
3. யெகோவா ர.ஃப்பா பொருளென்ன?
4. வியாதிகள் என்பதன் எபிரெய சொல் என்ன?
5. இயேசு அழைக்கும்போது லேவி என்ன செய்து கொண்டிருந்தான்?
6. இவ்வுலகில் பாவம் நுழைந்தது எப்படி?
7. இயேசு என்பதன் பொருள் என்ன?
8. வெற்றியுள்ள வாழ்வை வாக்களித்தது யார்?
9. ஐஸ்வரியவானால் ஏன் நித்திய ஜீவனைப்பெற முடியவில்லை?
10. "உனக்கு ஒன்றும் செய்து கொள்ளாதே" யார் யாரிடம் கூறியது ,

**II. யார் யாரிடம் கூறியது?** (5 x 2 = 10)

11. "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?"
12. "நான் விடைபெறும் வேளை வந்தது"

**III. சுருக்கமாக ஏதேனும் ஐந்திற்கு மட்டும் விடையளி**
(5 x 3 = 15)

13. இயேசு உயிர்த்தெழவில்லை என்று கூறிட காரணங்கள் என்ன?
14. உயிர்த்தெழுந்த சரீரத்தின் இரண்டு சிறப்பு தன்மைகள் எது?
15. வியாதி சுகமாக இயேசு கையாண்ட மூன்று முறைகள் என்ன?
16. லேவி "மத்தேயுவாக" மாறியது எப்படி?
17. பவுலும், சீலாவும் சிறை சென்றதற்கான காரணம் எது?
18. கிறிஸ்தவ வாழ்வு ஒரு குறுகிய காலத்திற்கு உரியது அல்ல ஏன்?

**IV. விடையளி** (2x5=10 Mark)

19. இயேசுவை அடையாளப்படுத்தும் வழிகள் என்னென்ன?
20. உயிர்த்தெழுதலுக்கும் ஞானஸ்தானத்திற்கும் இடையே உள்ள உறவு என்ன?

**V. இக்காலாண்டில் பயின்ற 5 மனப்பாட வசனங்களை வசனத்துடன் எழுதுக.**

# கால்தடங்கள்

ஒரு மனிதன் ஒரு இரவு சொப்பனம் ஒன்று கண்டார். அவர் அந்த சொப்பனத்தில் இறைவனுடன் கடற்கரையில் நடந்துகொண்டிருந்தார். அவர் வாழ்க்கையிலுள்ள காட்சிகள் வானத்தில் வெளிப்பட்டது. ஒவ்வொரு காட்சியிலும் இரண்டு ஜோடி கால்தடங்களை மணலில் காண முடிந்தது. ஒரு ஜோடி அவருடையது. மற்றொரு ஜோடி தேவனுடையது. இறுதியிலுள்ள காட்சி அவருக்கு முன்பாக வெளிப்பட்டது. அவர் திரும்பி பார்த்த போது அந்த மணல் பரப்பில் ஒரு ஜோடி கால்தடங்கள் மாத்திரமே அவருடைய ஜீவிதப்பாதையில் காண முடிந்தது. அவருடைய வாழ்க்கையில் மிகவும் துக்கமான நேரத்திலும், சோதனை காலங்களிலும் மாத்திரமே அந்த ஒரு ஜோடி கால் தடங்கள் காண முடிந்தது என்பதை அவர் அறிந்து கொண்டார்.

இது உண்மையில் அவரை குழப்பத்தில் மாற்றி இறைவனோடு



கேள்வி எழுப்ப வைத்தது. தேவனே! நீ என்னை பின்பற்றி வர தீர்மானித்தால் நான் உன்னோடு இருப்பேன் என்று சொன்னீர்கள். ஆனால் என்னுடைய இக்கட்டான நேரத்தில் ஒரு ஜோடி கால் தடங்கள் மட்டுமே காண முடிகிறது. என்னுடைய இக்கட்டான நேரத்தில் நீங்கள் ஏன் என்னை விட்டு போனீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இறைவன் என்னோடு என் அன்பான மகனே, நான் உன்னை நேசிக்கிறேன். நான் உன்னை ஒருபோதும் கைவிடவில்லை. சோதனை மற்றும் துன்ப நேரங்களில் நான் உன்னை என் கரங்களில் ஏந்தி, சுமந்து கொண்டபடியினால் ஒரு ஜோடி கால் தடங்கள் மாத்திரமே உனக்கு காண முடிந்தது என்றார்.

எழுத்தாளர் தெரியவில்லை

# வெற்றியாளர் தோல்வியாளர்

- ☞ வெற்றியாளர் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு தருபவர்.
  தோல்வியாளர் எப்போதும் பிரச்சினையின் ஒரு பகுதியானவர்.
- ☞ வெற்றியாளரிடம் எப்போதும் ஒரு திட்டம் உண்டு.
  தோல்வியாளரிடம் எப்போதும் ஒரு சாக்குபோக்கு உண்டு.
- ☞ வெற்றியாளர் ஏது வேலையும் செய்வார்.
  தோல்வியாளர் இது என் வேலை அல்ல என்று கூறுவார்.
- ☞ வெற்றியாளர் ஒவ்வொரு பிரச்சினையிலும் ஒரு பதிலைக் காண்கிறார்.
  தோல்வியாளர் ஒவ்வொரு பதிலுக்கும் ஒரு சிக்கலைக் காண்கிறார்.
- ☞ வெற்றியாளர் வெற்றி பெறுவது கடினமாகிலும் அது சாத்தியம் என்பார்.
  தோல்வியாளர் அது சாத்தியமாக இருந்தாலும் மிகவும் கடினம் என்பார்.

**நீங்கள் வெற்றியாளரா? தோல்வியாளரா?**